நாடக உலகம்

கொத்தமங்கலம் சுப்பு

நாடக உலகம்

எழுதியவர் :

கொத்தமங்கலம் சுப்பு

புதுமைப் பதிப்பகம் லிமிட்டெட்
காரைக்குடி : : சென்னை

முதல் பதிப்பு: 30 மார்ச்சு 47.

விலை ரூபாய் மூன்றே முக்கால்.

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்) ராயப்பேட்டை, சென்னை—14

நமஸ்காரம்

வேஷத்தில் வரும் நாரதர் பாடலாமா பாடக் கூடாதா? பெண்கள் ஆண் வேஷம் போடலாமா போடக் கூடாதா? என்பவைகளைப்பற்றி ஒரு பெரிய சர்ச்சை. ஒரு பெரிய ரகளை. நாடகத்தில் வரும் பாத்திரங்கள் தங்கள் தங்களுக்கு உரிய குணத்தை உணர்ந்து நடிக்க வேண்டும் என்ற விஷயத்தில் உலகத்து மக்களுக்கு இவ்வளவு அக்கரை இருக்கிறது.

உலகம் பெரியது, மேடை சிறியது. அலைகடலும், அணிவரையும், அழகிய தருக்களும், உலகின் திரைச் சீலைகள். அட்டை வீடும் குட்டைப் படுதாவும் ஆறேழு வர்ணச் சேர்க்கையும் அரங்கமேடைத் திரைச் சீலைகள். ஆனால், நடிகரோ இரண்டிலும் ஒருவரேதான்.

நாடகமேடையிலே ரோட்டு படுதா என்று ஒரு படுதா உண்டு. மற்ற படுதாக்களைவிட இதுதான் மட்டமானதாக இருக்கும். ஆனால் நடிகர்களோ பாதி நேரத்திற்குமேல் இந்தப் படுதாவுக்கு முன்தான் நிற்பார்கள். அதிலும் குறிப்பாக, தங்கள் கருத்தை வெளிவிட்டுச் சொல்லும் தனிப் பேச்சுக் கட்டங்களில் இங்குதான் நின்று ஆக

வேண்டும். மக்களின் வாழ்க்கையிலும் அப்படியேதான். பாதி நேரத்திற்குமேல் வாழ்க்கைப் பாதையைத் தேடுவதிலும், அதில் அலேவதிலும் தங்கள் இலட்சியங்களைப் பிறர் உணரும்படி செய்வதிலும்தான் வாழ்க்கையில் பாதி கழிகின்றது.

நாடகத்தில் பாதி நேரத்தை பின்பாட்டுக்காரர்கள் அபகரித்துக்கொள்கிருர்கள். வாழ்க்கையிலும் காலத்தில் பாதியைப் புறங்கூறுபவர்கள் (புகழ்பவர்களாகவே இருக்கட்டுமே) அபகரித்துவிடுகிருர்கள். ஆகவே நடப்புக்கும் நாடகத்திற்கும் கீழே குறிப்பிட்டு இருக்கும் சில வித்தியாசங்களேத் தவிர அடிப்படை ஒன்றேதான்.

வித்தியாசங்களாவன: நாடகம் முடியும் என்பதை அறிந்த நாம் நமக்கென்று வண்டிவாசிகளே ஏற்பாடு செய்துகொள்கிருேம். ஆனல் வாழ்க்கையும் அப்படித்தான் என்பதை அறிந்த நாம் நமக்கென்று ஒரு ஏற்பாடும் செய்துகொள்வதில்லே. நாடகத்திலே, போட்ட வேஷத்திற்குத் தகுந்தபடி நடிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிருேம். நடப்பிலே, பொறந்த பொறப்புக்குத் தகுந்தபடி நடக்க வேண்டும் என்பதை காற்றில் விட்டுவிடுகிருேம். இதை மக்கள் உணரும் காலம் வந்துவிட்டால், நாடக உலகம் போன்ற புத்தகங்களுக்கு அவசியமே இல்லே.

இந்தப் புத்தகத்தில் வரும் கதைகள் எல்லாம் ரேடியோ நாடகங்களாக நடத்தப்பட்டவை. எல்லாக் கதைகளும் என் கற்பனேகள் அல்ல. சில தழுவல்களும் உண்டு. எனது ராட்டினத்திலிருந்து நூல் நூற்ருல் இரண்டொரு தினுசுத் துணிகளேத்தான் நான் நெய்ய முடியும். இந்த நாடகங்களோ பலரிடமிருந்து நூல்களே வாங்கி, பல ரகங்களில் என் கருத்துக்கேற்ப அமைக்கப்பட்டவை. ஆகவே மூலக் கதைகளுடன் உள்ள மாறுபாட்டிற்கும்,

அதனுல் ஏற்படும் ரசபேதங்களுக்கும் நானே பொறுப்பு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தபோதிலும் இந்த நாடகங்கள் ஆயிரக் கணக்கான பேர்களால் ரசித்துப் பாராட்டப்பட் டிருக்கின்றன. அதிலும் சிறந்த நடிகர்களைக்கொண்டு நடத்தியபோதுகூட, நடிகர்களின் புகழ், நாடகத்தின் புகழை மறைத்துவிட வில்லை. அந்தத் தைரியத்தைக் கொண்டுதான் இப்போது இதைப் புத்தகமாகவும் வெளியிடுகிறேன்.

தற்போது நம்மிடையே ஒரு நோய் பரவி இருக்கிறது. யார் எதைச் செய்தாலும் அதை நல்ல கண்கொண்டு பார்ப்பதில்லை. கண்ணிலே மட்டும் நோயாக இருந்தால் தொலைந்து போகிறது என்று விட்டுவிடலாம். கண் குருடு என்பதற்காக வாழ்வு கெட்டுவிடாது. இதுவோ கருத்தைக் கெடுக்கும் நோய். கருத்திலே நோய் வந்துவிட்டால் கண்ணிருந்தும் காது இருந்தும் பிரயோஜனமில்லை. ஆராய்ச்சியின் மூலம் வளர்ச்சி ஏற்படுமாயின் அது நல்லது. ஆனுல், ஆராய்ச்சி அழிவை உண்டாக்குமாயின் அந்த ஆராய்ச்சி மிகவும் தவறுதலானது. இந்தக் குறை இப்பொழுது நாட்டில் இருக்கிறது. மாணுக்கன் உபாத்தியாயரையும் உபாத்தியாயர் மந்திரியையும், மந்திரி மக்களையும், மக்கள் கடவுளையுமாகக் குறைகூறி வருகிறோம். இந்த மனப்பான்மைக்குக் காரணம் என்னவென்று பார்த்தால் முதலாவதாக நம்மை மீறிவரும் ஜனநாயக உணர்ச்சியையும், இரண்டாவதாக இண்டிவிஜுவல் ஸ்பிரிட் என்று இங்கிலீஷ் பேரால் அழைக்கப்படும் அகங்கார போதையையும் கூறலாம். இது அவ்வளவு நல்லதல்ல. அதிலும் நமது முன்னேற்றத்திற்கு நல்லதே யல்ல. வெள்ளைக்காரனை வெளியே போகச் சொல்லுகிறோம். அவனது நாகரிகத்தை மட்டும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண் டிருக்கிறோம். இத்தகைய ஆராய்ச்சி சிருஷ்டி

யைக் கெடுத்துவிடும். ரசிக சக்தியை அழித்துவிடும். இந்த மனப்பான்மையை விட்டுவிட்டு நாம் பரிபூர்ணமாக உழைக்க வேண்டிய இடம் அகில இந்திய ரேடியோ. இதன் மூலம் இலக்கிய சிருஷ்டிக்கு நிறைய இடம் இருக்கிறது. என்னைக்கூட அறுபது நாடகங்களுக்கு ஆசிரியனாக அது செய்திருக்கிறது என்றால், அந்த ஸ்தாபனத்தை இலக்கிய வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகக் கொள்ளத்தான் வேண்டும். அந்த அரிய ஸ்தாபனத்துக்கும், உங்களுக்கும் எனது வணக்கம்.

என் நாடகங்களைப் புத்தக வடிவில் வெளியிட அனுமதி தந்த அகில இந்திய ரேடியோ நிலயத்தாருக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை
30—3—'47

கொத்தமங்கலம் சுப்பு

பொருளடக்கம்

1.	பஞ்சாமிர்தம்	...	1
2.	தன்வினை	...	20
3.	குமரகுருபரர்	...	40
4.	விஷவித்து	...	66
5.	இடைக்காடர்	...	90
6.	திருச்செந்தூர் வேலன்	...	126
7.	மேல் பூச்சு	...	150
8.	பொன் மாலை	...	163

பஞ்சாமிர்தம்

திருநெல்வேலி ஜில்லாவில் திருச்செந்தூருக் கருகில் ஒரு கிராமம். அதில் ஒரேயொரு பலசரக்குக் கடை. முதலாளி பெயர் பரமசிவன் பிள்ளை. நெற்றிநிறைய விபூதி. ஒன்றரைத் தம்படி அகலத்தில் சந்தனப் பொட்டு. அதில் நடுவே குங்குமம். காதிலே வில்வம். வயது சுமார் நாற்பது, இருக்கும். யுத்தகால வியாபாரத்தில், இரகசியமாகப் பணம் ஏராளமாகச் சேர்த்திருக்கிறார் நமது பிள்ளையவாள் என்பதை அவருடைய இளம் தொந்தி எடுத்துக்காட்டுகிறது. வியாபார நேரத்தில் வியாபாரத்தைக் கவனிப்பார் நமது பிள்ளையவாள்; மற்ற நேரத்திலோ ரொக்கத்தைத்தான் எண்ணிக்கொண்டு இருப்பார். சிறிது பயந்த சுபாவம் உடையவர்.

ராமலிங்கம். வயது பதினைந்து. துடுக்கான பையன். பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கப் பணமில்லாததால், தாயாரால் பலசரக்குக் கடைக்குத் தள்ளிவிடப்பட்டவன். ஏழையாய் இருந்தாலும் அறிவு மிகுந்தவன்.

[பரமசிவம் பிள்ளை கோபத்துடன் இருக்கிறார்]

பரம. அடே ராமலிங்கம்!

ராம. என்னுங்க.

பரம. கடைக்கு உள்ளேயே ஏன் உட்கார்ந்திருக்கே? வெளியே இருந்தால் என்ன?

ராம. இல்லிங்க. கொறை மூட்டையெல்லாம் நிமித்தி வச்சேன்.

பரம. ஆமா, என்ன களவு ரொம்பப் போகுதே கடையிலே?

ராம. என்ன? என்ன போச்சு?

பரம. பம்பாய் ரவை மூட்டை பிரித்து பத்து ரூபாய்க்குக்கூட விக்கலே, மூட்டை தீந்துபோச்சு. சக்கரை மூட்டை பிரிச்சா, சல்லாத் துணிதான் மிஞ்சுது. நெய்த் தகரம் ஒடைச்சிருக்குது. இதெல்லாம் என்னது ?

ராம. எலி, கிலி....இருக்கும் போலிருக்கு.

பரம. எலி வந்து ஈயப்பத்தைப் பேத்துப் பிடுதோ ? நெய் டின் ஒடச்சிருக்குடாங்கிறேன். மிந்திரிப் பருப்பெல்லாம் எங்கே ?

ராம. வியாபாரக் கடையிலே அப்படியேவா இருக்கும் ?

பரம. ஏன்டா இதென்ன பல சரக்குக் கடையா ? அல்லது பலகாரக் கடையா ? ரவை, சீனி, மிந்திரிப் பருப்பு, நெய் எல்லாம் திருடி லட்டுவா பண்ணித் திங்கிறீங்க ?

ராம. அய்யோ, அதுக்கு ரவையை வறுத்துட்டுல்லே செய்வாங்க.

பரம. பணங் கொடுக்காமல் திங்கிறத்துக்குப் பச்சை ரவை போதாதாக்கும். தின்னியா ? திங்கல்லியா ?

ராம. நெசஞ் சொல்லச் சொல்றியளா ? பொய் சொல்லச் சொல்றியளா ?

பரம. உண்மையைச் சொல்லு. உதை பெரட்டிப்பிடுவேன் பெரட்டி.

ராம. அப்படீன்னு, பொய்யே சொல்றேனுங்க. உண்மையைச் சொல்லி உதை படுறத்துக்கு நானென்ன முட்டாப் பயலா ?

பரம. சொல்றியா இல்லையா ? நெசத்தைச் சொல்லு.

ராம. நாங்கதானுங்க தின்னம்.

பரம. ஏன், ஒங்க அப்பன் வீட்டுமுதலோ?

ராம. [இரைந்து] அப்பன் கிப்பன்னு இழுத்துப் பேசாதையா. எங்க அப்பன் பட்டினி கிடந்து செத்தாலுஞ் சாவாரு, பஞ்சத்துலே கடைவச்சு கொள்ளையடிக்க மாட்டாரு.

பரம. [நடுங்கி] ஏய், ஏய், அதிகப்பிரசங்கித்தனமாப் பேசாதே. ஏன் திருடித் தின்னே?

ராம. சாப்பாட்டுக்கு வீட்டுக்குப்போக விட மாட்டேன்கிறீங்க. நாங்க பட்டினி கிடந்து சாகிறதா? என்ன?

பரம. நான் போறேனா?

ராம. நீங்க காது வழியா சாப்பிடுறீங்க. பணம் எண்ணுற சத்தங் கேட்டாலே பசி தீந்து போகுது உங்களுக்கு! எங்களுக்கு அப்படியா?

பரம. சும்மாவா வேலை பாக்கிறே? சம்பளம் வாங்கல்லே?

ராம. வேலைக்குச் சம்பளம். உங்களோடே சேர்ந்து கொறைப் படி போடறது, குத்தூசி மாத்தறது, உழக்கு உள்ளே தட்டுறது, இதுக்கெல்லாம் சம்பளமா?

பரம. எறையாதேடா, எறையாதேடா, எறையாதே.

ராம. [இன்னும் இரைந்து] இவரு மட்டும் ஊரு முழுக்க திருடுவாராம். பசிக்கி உழக்கு ரவையைத் திருடிப்பிட்டா வருது கோபம்.

பரம. [தணிந்த குரலில்] ஏன்டா கேக்காமே தின்னேன்னுதானே கேட்டேன். உன்னைத் திங்க வேண்டாம்னு சொன்னேன்?

ராம. ஆஹா! கேட்டா 'கெட்டவுட்டு' இம்பீங்க.

பரம. இந்தா, தம்பி, ராமலிங்கம்! என்னைப் பார்த்துச் சொல்லு, திங்க வேண்டாம்னு சொல்லு வேணு? எனக்கும் இரண்டு லட்டு கொடும்பேன்.

ஹோட்டல்கார லெட்சுமணய்யர் சாமான் வாங்க வருகிறர்.

லெட்சுமணய்யர். ஓய் கடைக்காரரே! கடைக்காரரே!!

பரம. [சிரித்து] வாங்க. வாங்க.

லெட்சு. என்ன சண்டை?

பரம. ஒண்ணுமில்லிங்க. இந்தப் பய ராமலிங்கம்....

ராம். என்னது பயலா?

பரம. பாத்தியள்ளே.......அடே வயசாச்சுடா, ஒரு குட்டியைப் பார்த்து கலியாணம் பண்ணிக்கோடா'ன்னு சொல்றேன். எதுத்துப் பேசறுன்!

லெட்சு. ஓஹோ....ஏதோ லட்டு கிட்டுன்னு கேட்டுதே?

பரம. அதுவா? லட்டுங்க லட்டு. கலியாணத்திலே, இலைக்கு லட்டுப் பரிமாறணும்னு சொன்னுன். நான் உங்க கிளப்புலே ஆர்டர் கொடுத்திடுவம்னேன். 'அவர் நெய்யைத் திருடிப்பிடுவாரே....னுன்.

லெட்சு. நெய்யா? நான் ஏன் அதைத் திருடறேன்? பக்கவடா முதல் பாதம் அல்வா வரையிலே கடலெண்ணேலே போடறேன். நெய்யைத் திருடி எனக்கு என்ன பிரயோஜனம்?

[மூவரும் சிரிக்கிருர்கள்]

லெட்சு. ஒரு மூட்டை..............நெல்லூரரிசி வேணுமே?

பரம. ஹி. ஹி. ஹி. மூட்டையா? அதைப் பார்த்தது யாருங்க?

லெட்சு. ரொம்ப அவசியத் தேவை.

பரம. உங்க தலையிலே அடிக்கிறேன். எங்கிட்டே அரிசி மூட்டையே கிடையாது.

லெட்சு. கிடையாதுன்னு சொன்னாப் போதாதா? அதுக்கு என் தலையிலே வேறேயா அடிக்கணும்.

பரம. [சிரித்தபடியே] இல்லிங்க. உங்க தலே வேறே, என் தலே வேறேயா? நம்ம அப்படியா பழகிறம்?

லெட்சு. இல்லே. அரிசி மூட்டைலே மாத்திரம்...

பரம. உங்க குல தெய்வத்துக்குப் பொதுவா; இல்லிங்க. ஏன்...அந்த கா. சு. கடையிலே கேளுங்களேன்.

லெட்சு. ரொம்ப அவசியமய்யா.

பரம. ரொக்கம் தரணும். எங்கிட்டே இல்லே, என் மச்சினன் சரக்கு கொஞ்சம் இருக்கு. எத்தனை மூட்டை வேணும்?

லெட்சு. ஒரு மூட்டை போதும். விலை என்ன?

பரம. இதுக்கெல்லாம் ஒரு விலையா இருக்கு? கிராக்கியைப் பொறுத்துத்தான் விலை.

லெட்சு. பஜார்லே மூட்டை இருபத்திரெண்டு ரூபாயாயிருக்கு.

பரம. விலைதானிருக்கும்....மூட்டை இருக்கா? இந்தாங்க, முப்பது ரூபாய்க்குச் சல்லி கொறஞ்சாலும் விக்கப்படாதுன்னுட்டான். வேணும்னா, வாங்கிக்கிங்க. ஆனால், வெளியே யாருக்கும் தெரியப்படாது.

[லெட்சுமண அய்யர் ரூபாயை எண்ணிக்கொடுக்கிறார்.]

லெட்சு. சரி, இந்தாரும். பில் போடும்.

பரம. [அசட்டுச் சிரிப்புடன்] பில்லா? யாரு மூட்டைக்கு யாரு பில்லுப் போடறதுங்க! மச்சினன் மூட்டைல்லே.

லெட்சு. ஒரு காயிதத்துலே....மூட்டை முப்பது ரூபாயின்னு குறிச்சுக் கொடுமே.

பரம. காயிதமா! காயிதம் விக்கிற விலைக்குப் பயந்துதானே கணக்கு எழுதுறதையே நெறுத்தினேன்! நீங்க கடைக்குப் போங்க. இருட்டினதும் மூட்டையை அனுப்பிச்சுடறேன்.

லெட்சு. சரி, வர்ரேன்.

பரம. தம்பி, ராமலிங்கம்! அந்த பில்லுப் பொஸ்தகத்தை எடு. எழுது..... நயம் நெ. ப. அரிசி இல்லேல்லே....தவிடு மூட்டை ஒண்ணுக்கு........

கடைக்கு வெளியே பாடும் சப்தம் கேட்கிறது. வெள்ளை வேட்டி தரித்த பரதேசி ஒருவர், கடை வாசலில் நின்று, பாடிக்கொண் டிருக்கிறார். வயது சுமார் ஐம்பது இருக்கும். கட்டுமஸ்தான தேகம். வெய்யலில் வாடி வதங்கிய முகமானாலும், முகத்தில் வேதாந்தக்களை சொட்டுகிறது. உலக வாழ்வில் வெறுப்படைந்து சந்நியாசி ஆனவர் இல்லை இவர். வாழ்க்கைத் தேவைகளைச் சுருக்கிக்கொண்டு, கையில் சிறிது பணத்துடன் க்ஷேத்திரங்கள் தோறும் கால்நடையாகச் சென்று, சிவதரிசனம் செய்பவர்; பக்தியும் பாட்டும் துணையாகக் கொண்டு வழி நடப்பவர்.

இச்சகம் பேசியே பொய் சொல்லும் — மாந்தர்கள்
நிச்சயம் மாந்தரல்லர்;
இச்சக வாழ்வினில் இயல்படைந்தாலும்—அவர்
இதயத்தில் சுகமடையார்—மனிதா!
இதயத்தில் சுகமடையார்.

பரதேசி. வேலாயுதம்! வேலாயுதம்!!

பரம. அந்தப் பேருடைய ஆளு நம்ம கடை யிலே இல்லிங்க. அடுத்த கடையிலே பாருங்க.

பரம. [ராமலிங்கத்தைப் பார்த்து] உம். திடம் தவிடு மூட்டை ஒண்ணுக்கு ரூபா....

பரதேசி :

ஏடுகள் மாற்றியே எழுதிடுவாய்—தலை
எழுத்தினை மாற்றவே இயலாதே.
காடுகள் உனக்காகக் காத்திருக்க—மந்தை
மாடுமனையி லென்ன ஆசையடா.

பரம. இது வியாபாரக் கடை. எங்கேயாவது வீடுகளை நாடிப்போ அய்யா. உம்....தவிடு மூட்டை ஒண்ணுக்கு....

பரதேசி. தர்மத்தை மூட்டை கட்ட வேண்டும். தவிட்டை மூட்டை கட்டி என்ன பலன்? இந்தா எனக்கு....

பரம. ரெண்டு அரிசி எடுத்துப் போடடா.

பரதேசி. வேண்டாம். இந்த அடிமை திருச் செந்தூருக்குப் போகிறது. ஆண்டவனுக்கு அபிஷே கத்துக்காக அரை வீசை சர்க்கரை; கொஞ்சம் தேன்; கிசுமுசுப் பழம் தேவை.

பரம. சர்க்கரையா? அதை யாருங்க கண் டது? என்ன ராமலிங்கம்! நம்மகிட்ட சர்க்கரை இருக்கா? (என்று கண்ணைச் சிமிட்டுகிறார்.)

ராம. இருக்கே. 7, 8 மூட்டை இருக்குமே?

பரம. [சமாளித்துக்கொண்டு] அது மச்சினன் சரக்கில்லே....இங்கே இல்லிங்க, போங்க.

பரதேசி. இனமாகத் தர வேண்டாம். இதோ பணம் தருகிறேன்.

பரம. [சற்று யோசித்து] வெலைக்கா?.....அது..... அது....இல்லிங்க நம்மண்டை.

பரதேசி. அப்பா! கடை நிறையச் சரக்கை வைத்துக்கொண்டு இல்லை என்கிறாயே! ஏன்?

பரம. அது விக்கிற சரக்கில்லே.

ராம. இனமாகவாவது கொடு. முருகன் திருவருளை மறுக்காதே.

பரம. இது ஏதுடா சனியன். அது நம்ம சரக்கில்லிங்க. சில்லறைக்கு விக்கப்படாதுன்னு சொல்லி இருக்கான்.

பரதேசி. இந்த ஊரில் வேறு கடையும் இல்லியே!

பரம. அதுக்கு நான் என்ன செய்கிறது? இந்தாங்க. சாமி காரியம். தம்பி, ராமலிங்கம்! அவருகிட்ட ஒரு காலணுக் கொடு. கொடுத்து, திருச்செந்தூர் செந்திலாண்டவன் பஞ்சாமிர்த தருமம்னு எழுதிக்கோ.

பரதேசி. உன் உபயம் முருகனுக்கு வேண்டாம். இதோ பணம். சாமான் தருகிறாயா? மாட்டாயா?

பரம. என்ன, ராமலிங்கம்! எழுதினியா? திருச்செந்தூர் பஞ்சாமிர்த தருமம் காலணு. எழுதிப்பிட்டியா? சரி, நாயக்கர் கடைக்குப் போய், அந்தக் காசுக்கு நாட்டுப் பொடி மட்டை ஒண்ணு வாங்கிட்டு வா. போ. உம். சாமி, போங்க கூட்டம் போடாமே.

இதைக் கேட்டு, பரதேசி வெறுத்தமனதுடன் திரும்புகிறார்.

கிராமத்துக்கு வெளிப்புறத்திலே ஒரு சிறிய குட்டை. அனேகமாய்த் தண்ணீர் வறண்டுவிட்டது. இருந்தாலும் அதற்கு ஒரு வடிகால் வெட்டி, குட்டையின் ஓரத்தில் கிணறு போல் நீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். அதை யொட்டிச்

சிறிது தூரத்தில் ஒரு காய்கறித் தோட்டம். அரைக் குறுக்கம் அளவுள்ள நிலத்தில், சுற்றிலும் கிழுவை முள்வேலி போட்டிருக்கிறது. தோட்டத்தில் ஒரு பக்கத்தில் அவரை, புடலை, பீர்க்கு முதலிய பந்தல்களும், மறு புறத்தில் கத்தரி, வெண்டை, மிளகாய் முதலிய பாத்திகளும் இருக்கின்றன. பெரும் பகுதி மிளகாய்ச் செடிகள். எதிரே சிறிய மண் குடிசை. பனை ஓலையால் வேயப்பட்டு இருக்கிறது. கூரையின்மீது அடர்த்தியாகச் சுரைக்கொடி படர்ந்து, ஏராளமான பூக்களும், அங்கும் இங்கும் இரண்டொரு காய்களுமாகக் காட்சி யளிக்கிறது. ஒரு மூலையில் நாலைந்து வாழை மரங்கள் நிற்கின்றன. சேவல் ஒன்று உல்லாசமாகக் கூரைமீது நிற்கிறது. தோட்டக்காரனும் அவன் மனைவியும் எதிரும் புதிருமாக நின்றுகொண்டு, ஓலைப் பெட்டியில் கயிறு கட்டி, பாடிய வண்ணம் மிளகாய்க் கொல்லைக்குத் தண்ணீர் இறைக்கிறார்கள்.

மனைவி பாடுகிறாள் :

பாத்தி கட்டி, நாத்துவிட்டு,
பருங்கரம்பை பேத்துவிட்டு,
ஏத்தம் வைச்சு, பொட்டிகட்டி,
எறவை எறச்சு, தண்ணீவிட்டு
காத்திருந்து, பாத்திருந்தால்
காய்ச்சுக் குலுங்கும் மொளகாய்க் கொல்லை.

கணவன் மனைவி இருவரும் :

தந்தனனே, தானே, தானே, தன்னே.

கணவன் :

பட்ட மொளகாய், ஈரம் கெட்ட மொளகாய்,
பார்க்கிறப்போ கண்ணுத் தண்ணீ சொட்டு மொளகாய்.

மனைவி :

வெள்ளரிப் பிஞ்சைப்போல உள்ள மொளகாய்,
மேலும் மேலும் திங்கச் சொல்லும் வெள்ளை மொளகாய்.

கணவன் :

ஊறுகாய்க் காரத்துக்கு ராசாவடி,
ஊசி மொளகாய் பழுத்தால் ரோசாவடி.
சாத்தூரு விருதுபட்டி நீள் மொளகாய்,
சாம்பாரு வாசனைக்குத் தூளு மொளகாய்.

பரதேசி மிளகாய்க் கொல்லைக்கு வந்து சேர்ந்தார். வாழை மரங்களை ஏறிட்டுப் பார்த்தார்.

பரதேசி. யாரப்பா தோட்டத்திலே?

பெண். என்ன சாமி?

பரதேசி. திருச்செந்தூர் எவ்வளவு தூரமிருக்கும்?

பெண். இப்படியே மேற்கே போங்க, ரெண்டு கல்லிருக்கும்.

பரதேசி. வேலாயுதம்!

பெண். சாமி ரெண்டு வெள்ளரிக்கா பறிச்சுத் தாரேன். சாப்பிடுறியளா?

பரதேசி. தாயே! முருகனைத் தரிசியாமல் ஒன்றுமே சாப்பிடுவதில்லை.

பெண். சாமி! நீங்க கோவிலுக்குப் போனு.... நான்....கொஞ்சம் மொளகாப் பழம் கொடுக்கிறேன். அதைக் கொண்டுபோய்ச் சேர்த்துப்பிடுறியளா?

பரதேசி. மிளகாயா?

பெண். ஏன்?

பரதேசி. நான்....பஞ்சாமிருதத்துக்கு வாழைப் பழம் தேடி இங்கு வந்தேன். நீயோ மிளகாய்ப் பழம் கொடுக்கிறாய்....

பெண். இதுவும் அவர் படைச்சுதுதானுங்க. வாழைப் பழத்துக்கும் மொளகாப் பழத்துக்கும் வித்தியாசம் பாக்க மாட்டாரு. இருங்க. தாரேன்.

பரதேசி. வேலாயுதம்! வேலாயுதம்!! கொண்டு வா, அம்மா.

வாங்கிக்கொண்டு பரதேசி புறப்பட்டார். சிறிது தூரம் நடந்து சென்றார். புளிய மரத்தடியில் செக்கு ஒன்று ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டார். அழுக்குக் கந்தை யணிந்த ஒரு வர் செக்கை ஓட்டிக்கொண் டிருக்கிறார்.

வாணியன். த.த.த.த. டுர்ரீரீரீ டுர்ரீரீரீ [சத்தம் போட்டு] ஏய், வள்ளி! அந்த எள்ளை எடுத்து, பாயை விரிச்சுக் காய வை.

வள்ளி. [வீட்டு வாசலில் நின்றபடியே அவன் மனைவி] இந்த மூட்டையைக் கொஞ்சம் புடிச்சு உதறிப் போடு.

பரதேசி. வேலாயுதம்!

வாணியன். சாமி! கொஞ்சம் இந்த மாட்டை நிக்காமப் பாத்துக்குங்க. இந்தா வர்ரேன்.

பரதேசி. ஆகட்டும்....

வாணி. சும்மா ஓட்டு சாமி. கொஞ்சம் புண் ணாக்குத் தாரேன்.

பரதேசி. நல்லது. த.த.த.......

[பரதேசி மாட்டை ஓட்டுகிறார். மாட்டின் கழுத்தில் கிடக்கிற மணி சப்திக்கிறது]

வள்ளி. உனக்குப் பெரிய மனுசன், சின்ன மனுசன்னு கிடையாதோ?

வாணி. ஏங்குட்டி.

வள்ளி. பாத்தா, பரமசிவன் கணக்கா இருக் காரு. அவரைப் போய் செக்கு ஓட்டச் சொல்றியே?

வாணி. நமக்கா ஓட்ருரு? என் தேவைக்கா ஓட்டச் சொல்றேன்? உலகத்துக்கில்லே!

வள்ளி. என்ன உலகத்துக்கு?

வாணி. ஆமா குட்டி. ஒரு நிமிசம் செக்கு ஓடாமலிருந்தால் ஒன்பது தலைக்கு எண்ணெய் இருக்காது. செக்கு ஓடினுத்தான் குட்டி, சீவி முடியலாம்.

வள்ளி. அவருக்கென்ன சடையாண்டிதானே?

வாணி. நமக்குத்தான் என்ன? நான் வழுக்கைத் தலை, நீ வாரி முடியறதே இல்லை. எண்ணெய் ஆடுறதை நிறுத்திப்புடுவமா?

வள்ளி. நிறுத்தினு? ஊருக்கு யார் பதில் சொல்றது?

வாணி. அதுதான் குட்டி தத்துவம். ஊருக்கு நீ செய்தா, உனக்கு ஊரு செய்யும். மோட்டை வீடு தாங்கும். வீட்டைப் பூமி தாங்கும்னு கேள்விப்பட்டதில்லையா? ஊ....ஊ...ஆலாட்டு.

வள்ளி. அப்பவானு நீதான் உலகத்துக்கு படியளக்கிறியாக்கும்!

வாணி. இல்லே. உலகம் எனக்குப் படியளக்குது. அதுக்காக செக்கு ஆடுது, சீவன் நடமாடுது. மனிதன் என்கிற ஆலை துருப்பிடிக்காமே இருந்தாத்தான் நமக்குச் சோறு போடும். அதுக்காக அந்த ஆலைக்கு எண்ணெய் போடுறேன். ஊருக்கு விளக்குப் போடுறேன். இது என் சொந்த லாபத்துக்கு. ஆனல், இந்த வேப்ப மரம் முத்தைக் கொட்டுது. இலுப்பை மரம் காச்சுச் சொரியுது. இதெல்லாம் லாபம் கருதியா?

வள்ளி. அது கடவுள் படைப்பு!

வாணி. என்னையும் அவர்தான் குட்டி படைச்சாரு. பிசாசு இல்லே!

பரதேசி. அய்யா! அய்யா!!

வாணி. இதோ வந்துட்டேன். ரொம்ப நேரம் காக்கவச்சிப்பிட்டேன்.

பரதேசி. ஆமாம், சாலையில் வண்டி சென்றால் மாட்டுக்கு மணி அவசியம். செக்கைச் சுத்தும் மாட்டுக்கு மணி எதுக்கு?

வாணி. எனக்கு ஒரு அடையாளத்துக்குத் தானுங்க.

பரதேசி. என்ன அடையாளம்?

வாணி. நான் உள்ளே போயிட்டா மாடு சுத்துதா இல்லையான்னு தெரியும். மணிச் சத்தத்திலே தெரிஞ்சுக்குவேன்.

பரதேசி. நின்னபடியே மாடு மணியை அசைத்தாலோ ?

வாணி. அது....மனுசனுக்குத் தோணுற யோசனை மாட்டுக்குக் கிடையாதுங்க. மாடு ஏமாத்தாதுங்க. இந்தாங்க, புண்ணாக்கு.

பரதேசி. வேண்டாம். நான் செந்திலாதிபனைத் தரிசியாமல் உணவருந்துவதற் கில்லை.

வாணி. ஓஹோ, திருச்செந்தூருக்கா? ஏது இப்படி?

பரதேசி. திருப்பதிகள் தோறும் சென்று தரிசிப்பதாக ஒரு சங்கல்பம்.

வாணி. சாமி! மன்னிக்கணும். தெரியாமே பெரியவங்களைச் செரமப்படுத்திவிட்டேன். நான் ஒண்ணுந் தெரியாதவனுங்க.

பரதேசி. பார்க்கப்போனல் நானும் அப்படித்தான் அப்பா. இந்தச் செக்கு மாட்டுலே உள் மாடு நீ. வெளி மாடு நான். எழுபத்தைந்து கல் நீ சுத்தியிருந்தால் நான் நூறு கல் சுத்தியிருப்பேன். ஆனல்,

நீயாவது செக்கைக் கண்டாய். நான் ஒன்றையும் காணவில்லை. நேரமாகிறது நான் வரவா?

வாணி. சரி, ஒண்ணுஞ் சாப்பிட முடியாதுங்கி றீங்க. வேறு எதாச்சும் நான் தரக்கூடியது இருந்தா....

பரதேசி. எனக்குக் கொஞ்சம் தேனும் பழமும் வேண்டும். அது....

வாணி. இங்கே கிடைக்காதுங்க. ஒரு செம் பிலே ஒருவீசம் ஆடம் எண்ணெய் கட்டித்தாரேன். கொண்டுபோய், சன்னிதியிலே சேத்துடுங்க.

வாணி. ஏ குட்டி! வள்ளி, அந்த சாமிக்கு வைச்ச புளியம்பழம் இருந்துதே, கொண்டா.

பரதேசி. இதெல்லாம் எதற்கு?

வாணி. அதுவா? கொல்லையிலே ஒரு புளியமரம் இருக்குங்க. நல்ல வயிரம், செந்திலாதிபன் பேரைச் சொல்லி செதுக்கிச் செக்கு செய்யலாம்னு இருக்கி றேன். பஞ்ச காலத்திலே வெட்டிப்பிட்டா பத்து குடும்பத்துக்குப் புளியம் பழம் இல்லாமப் போகும். ஏழை பாழைகள் அந்தக் கொட்டையை அவிச்சுத் திங்கிது. அது கெட்டுப்போகும். ஒண்ணும் வண்டு கிண்டு குடைஞ்சிடாமே இருக்க வேணுமேன்னு சாமிக்கு வேண்டிக்கினேன், இந்தாங்க. இதை அப்படியே இடும்பன் சன்னிதியிலே போட்டுடுங்க. எடுத்துக்குவாங்க.

பரதேசி. வேலாயுதம்!

[வாங்கிக்கொண்டு பரதேசி நடக்கிறார்]

கடுமையான வெய்யில். ஒரு பக்கத்தில் கானல் பறக் கிறது. இந்த மிங்குமாய்ப் பூமிக்குச் சற்று உயரத்தில் நான்கு ஐந்து பாறைகள். அந்தப் பாறைகளில் குழிதோண்டி, குந்தாணி

ஆக்கி இருக்கிறார்கள். கைபட்டுக் கறுத்து நெருந்த ஏறிய உலக்கைகளைக் கையில் வைத்துக்கொண்டு, பத்துப் பெண்கள் நெல் குத்துகிறார்கள். தூரத்தில் ஒரு சிறிய வேப்ப மரம். அதில் துணியால் தொட்டில்கட்டி, இரண்டு குழந்தைகள் தூங்கு கின்றன. ஐந்தாறு வயதுள்ள, கந்தை யுடுத்திய சிறுமி யொருத்தி அந்தக் குழந்தைகளுக்குக் காவலாக இருக்கிறாள்.

[நெல் குத்தும் பெண்கள் பாடிக்கொண்டே குத்துகிறார்கள்.]

பதக்கு நெல்லை எடுத்துப்போட்டு —வீராயி
உஸ்ஸ —ராமாயி
பரபரவுன்னு குத்தவேணும் —வீராயி
உஸ்ஸ —ராமாயி
பாக்குக் கடிக்கும் நேரத்துலே —வீராயி
உஸ்ஸ —ராமாயி
இந்தப் பச்சப் பிள்ளைக்குப் பால் கொடுக்கணும்-வீராயி
உஸ்ஸ —ராமாயி
சோக்குப் பிறந்து கொண்டையிலே —ராமாயி
உஸ்ஸ — வீராயி
சொருகின பூ குதிக்குதடி —ராமாயி
உஸ்ஸ —வீராயி

பரதேசி. வேலாயுதம்! அடே யப்பா வெய்யில் தாங்க முடியவில்லையே! உஸ்ஸ்ஸ்....

ராமாயி. சாமி, அய்யோ பாறையிலே நிக்கி றீங்களே. அப்படி மரத்து நிழல்லே உக்காருங்க. ஏ. குட்டி! அந்தப் பிள்ளைத் தொட்டிலைத் தள்ளிக் கட்டு.

பரதேசி. தாயே, வேண்டாம். பாவம் தூளியை வெய்யிலில் கட்டாதீர்கள்.

ராமாயி. குத்தமில்லை சாமி! என்னக்கித் தான் அந்தப் பயலுக்கு வெய்யில் பழகிறது. சும்மா உட்காருங்க.... ஏ காளியம்மா! இந்தா....இந்த

சுளகை எடுத்து அய்யாவுக்கு விசிறு. [காளியம்மாள் பரதேசிக்கு விசிறுகிருள்]

பரதேசி. வேலாயுதம்!.... ஆஹா.... என்ன அன்பு.

ராமாயி. வீராயி! இந்தா நல்ல பச்சரிசித் தவிடு. தீட்டின தவிடு கொஞ்சம் எடுத்தா. சாமி! இதைக் கொஞ்சம் சாப்பிடுங்க. இனிப்பா தினை மாவாட்டம் இருக்கும்.

பரதேசி. வேண்டாம். நான் திருச்செந்தூர் போகிறேன். முருகனைத் தரிசித்தபின்தான் ஆகாரம் செய்யவேண்டும்.

ராமாயி. திருச்செந்தூருக்கா! ஏ.... பொண்டுகளா! ஆளுக்கு ஒரு படி அரிசி கொண்டாங்க, சாமி! இந்த அரிசியைக் கொண்டுபோய் அங்கே இடும்பன் சன்னிதிலே போட்டுடுங்க.

பரதேசி. எதற்கம்மா?

ராமாயி. இது வலியன் மகிமை சாமி. அங்கே போட்டா, எடுத்து ஆண்டி பரதேசிக்கு ஆக்கிப் போடுவாங்க.

பரதேசி. தாயே! நீங்களெல்லாம் கூலிக்குத் தானே உழைக்கிறீர்கள். அதிலும் தானமா?

ராமாயி. தானமில்லிங்க, காணிக்கை. கைக்குத் தெம்பு கொடுக்கணும்னு செலுத்தறோம்.

பரதேசி. தாயே! உங்கள் கை நன்ருயிருக்க வேண்டும். உலகத்துக்குச் சோறிடும் கை, அனைத்துயிருக்கும் அமுதூட்டும் கை. அன்னையே! அய்யனைக் கும்பிடும் கையால் உன்னைக் கும்பிடுகிறேன்.

கூட்டம். ஹா, ஹா, ஹா, ஹா. சாமி! சாமி!!

பரதேசி. தாயே உன் மகிமை உனக்குத் தெரியாது. பசித்த வயிற்றுக்குத் தெரியும் அதன் மகிமை. உன்னால் அன்றோ உலகம் பிழைக்கிறது. நான் சென்று வருகிறேன். செந்திலாண்டவன் சன்னதியில் மேழி பிடிக்கும் கை, மென்மேலும் ஓங்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். திருச்செந்தூர் எவ்வளவு தூரம் இருக்கிறது?

ராமாயி. இப்படிப் போங்க, உப்பளம் இருக்கும். அதைத் தாண்டினா, அலையோட மணி ஓசை கேக்கும். அதுதான் திருச்செந்தூர்.

பரதேசி. வேலாயுதம்!

உப்பளம். கோஷ்டி பாடுகிறது.

கஞ்சிக்கு உப்புக்கல் வேண்டி,
கடலைப்படைத்தாண்டி சுடலைப் பேயாண்டி;
வஞ்சிக்கும் போருக்கு அல்ல;
வகைகெட்ட நீர்மூழ்கிச் சண்டைக்கும் அல்ல;
மழைதந்து வளப்பங்கள் செய்ய
வானத்தை ஆறு ஆக்கி வழிசெய் தமைத்தான்.
பிழைசெய்து எரிவீசும் கப்பல்,
பிரயாணம் செய் தெங்கும் ஆட்கொல்ல அல்ல.

ஆள். அய்யா, யாரங்கே போறது?

பரதேசி. வேலாயுதம்! ஏனப்பா.

ஆள். திருச்செந்தூருக்கா போறீங்க?

பரதேசி. ஆமாம்.

ஆள். இந்த உப்பைக் கொண்டுபோய் இடும்பன் சன்னதியிலே போட்டுவிடுறீங்களா?

பரதேசி. உப்பா? ஏன்?

ஆள். ஏனு? கரையோரமா உட்காந்துக்கிட்டு, கடல் வந்து பாத்தியை அழிச்சுப்பிடாமே பாத்துக்கிட்டு இருக்காரில்ல; அதுக்குத்தான்.

பரதேசி. வேலாயுதம்! [சிரிக்கிறார்] கொடு, அப்பா! யார் எதைக் கொடுத்தாலும் கொண்டு போகிறேன்.

மணிச்சத்தம் மேளச் சத்தம் காதில் விழுகிறது.

செந்திலாதிபனுக்கு ஹர ஹரோ,
சேவல் கொடியோனுக்கு ஹர ஹரோ,
வள்ளிமணவாளனுக்கு ஹர ஹரோ,
வண்ணமயில் வேலனுக்கு ஹர ஹரோ.

அலைச் சத்தத்தின் மேல், வேலும் மயிலும் போடும் சத்தம். எல்லாம் சமீபத்தில் நெருங்குகின்றன.

பரதேசி. வேலாயும்! செந்திலாதிபா! [எதிரில் வருபவரைப் பார்த்து] அய்யா, தாங்கள் யார்?

மணி. கோவில் மணியாரர்.

பரதேசி. நான்....பஞ்சாமிர்தம் செய்து அபிஷேகம் செய்ய வேண்டு மென்ற ஆவலுடனிருக்கிறேன். அதற்கு வேண்டிய சாமான்கள் வேண்டும்.

மணி. நீங்கள்தான் கொண்டுவந்திருக்கிறீர்களே, அதோ அரிசி, உப்பு, புளி, மிளகாய் எண்ணெய், இந்த ஐந்தும் பஞ்சாமிருதம் ஆச்சு. உலக

வாழ்க்கைக்கு இந்த அஞ்சும்தானே அமிருதம். இதை நைவேத்தியம் செய்தாலே போதும்.

செந்திலாதிபனுக்கு ஹர ஹரோ

பரதேசி. ஆண்டவனே! இந்த அமிருதங்கள் குறையாம லிருக்க அருள்புரிய வேண்டும். இதை அளிக்கும் கைகளுக்கு வற்ளூத வரமருள்.



தன் வினை

திருச்சி சென்ட்ரல் ஜெயிலில் கைதிகளின் கொட்டடிக்கு வெளியே உள்ள மைதானம். அதில் பல கைதிகள் நார் உரித்தல், கூடை பின்னுதல், கல் உடைத்தல் முதலியவைகளைச் செய்துகொண் டிருக்கிறார்கள். கல் உடைக்கும் கூட்டத்தில், இரு கைதிகள், குற்றவாளிகள் என்ற எண்ணமற்றவர்களாய்; கல் உடைத்துக்கொண் டிருக்கிறார்கள். சிறையிலேயே இருந்து யிருந்து பழகிப்போன அவர்களுக்கு, சிறை வாழ்க்கை, வீட்டு வாழ்க்கைபோல, சாதாரணமாகிவிட்டது. இருவர்களில் ஒருவன் பெயர் கட்டையன். திருட்டுக் குற்றத்திற்காக ஜெயிலுக்கு வந்தவன்; ஜாதியிலே குறவன்; வயது அறுபது இருக்கும்.

செங்கண்ணன். ஏலே கட்டை!.... ஏண்டா உனக்கு விடுதலை கிடைக்கப் போகுதாமே!

கட்டை. கணக்குப்படிப் பாத்தா போன மாசத்தோடே இரண்டு வருசம் ஆச்சு, அண்ணே! இந்தக் கங்காணி வாடருக்கும் எனக்கும் வந்த சண்டையாலேதான், இத்தனை நாள் தள்ளிப் போச்சு.

செங்கண்ணன். ஊருக்குப் போயி என்ன செய்யப்போறே?

கட்டை. அகப்பட்டுக்காமே பொழைக்க வேண்டியதுதான்.

செங்கண்ணன். நீதான் நல்லாக் கல்லு உடைக்கிறியே. எங்கேயாவது கட்டிடங் கிட்டிடத்திலே வேலைபாத்தால் போகுது.

கட்டை. வெளியேபோயுமா இந்தவேலையைச் செய்யச் சொல்றே. கல்லுதான் உடைக்கணும்னு தலையிலே எழுதியிருந்தா, மறுபடியும் செயிலுக் குள்ளேயே வந்துட்டுப் போறேன்.

செங்கண்ணன். வேறேஎன்னதான் செய்யப் போறே?

கட்டை. எல்லாம் சமயத்தைப் பொறுத்திருக் குது. ஆனால், ஒண்ணு மட்டும் சொல்றேன். இனிமே, கூறக் கட்டையன் செயிலுக்குள்ளே வர மாட்டான்.

செங்கண்ணன். ஆமாமா. உன் வயசுக்கு நீயும் செயிலுக்குள்ளே இதுவரை எட்டு அவதாரம் எடுத்திட்டீல்லே!

கட்டை. அத்தனை தடவைதான் அம்பிட் டிருக்கேன். [இருவரும் சிரிக்கிறார்கள்.]

இவர்கள் இருக்கும் திசை நோக்கி, அடே! 1007 என்று கூப்பிட்டுக்கொண்டே, ஒரு வார்டர் ஓடிவருகிறான்.

கட்டை. ஏன்?

வார்டர். புறப்படு. ஜெயிலர் கூப்பிட்றாரு.

கட்டை. செங்கண்ணே! போயிட்டு வாரேன்; அப்பா!

செங்கண்ணன். போ. போ. சந்தோஷமாப் போ....மறுபடியும் இங்கே வரேன்னு சொல்லாமப் போ!

வார்டரும் கட்டையனும் ஜெயிலர் இருக்குமிடத்துக்கு வருகிறார்கள். கட்டையன் சிரித்துக்கொண்டே கும்பிடுகிறான்.

ஜெயிலர். உன் பெயர் என்ன?

கட்டை. கட்டையன்.

ஜெயிலர். தகப்பன் பெயர்?

கட்டை. மூத்தன்.

ஜெயிலர். வயசு?

கட்டை. இந்த வம்பு யாருக்குத் தெரியுது? அம்பது இருக்கும்.

ஜெயிலர். உனக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. இனிமேலாவது ஒழுங்காய், யோக்கியனாய்ப் பிழைத்துக்கொள்.

கட்டை. புத்தி....நடக்கிறேன். [என்று கும்பிட்டு விட்டுப் போகிறான்.]

சற்று தூரம் சென்ற பிறது, ஜெயிலர் எதையோ நினைத்துக்கொண்டு அவனைக் கூப்பிடுகிறான். கட்டையன் திரும்பிப்பாராமல் நடக்கிறான்.

ஜெயிலர். கட்டையா!........கட்டையா!!

வார்டர். ஏய், உன்னைத்தானே!

கட்டை. [திரும்பி அவசரமாக ஓடிவந்து] எசமான்! மன்னிக்கணுங்க. இந்த எழவு 1007 நம்பரைக் கூப்பிட்டு கூப்பிட்டுப் பழகிப் போச்சு. சொந்தப் பெயர் மறந்தே போச்சு.

ஜெயிலர். உனக்கு ஒரு மகன் இருக்கானா?

கட்டை. இருந்தான். எட்டு வயசிலே ஓடிப் போயிட்டான். ஏன்? எங்கே யாச்சும் செயிலிலே மாட்டிக்கிட்டானோ?

ஜெயிலர். இல்லே, உனக்கு ஒரு கடுதாசி எழுதியிருக்கான்.

கட்டை. [ஆசையோடு] என்ன சாமி எழுதி இருக்கான்?

ஜெயிலர். பட்டணத்துலே பொட்டலராக இருக்கானும். உன்னைப் பார்க்க வேணும்னு எழுதியிருக்கான்.

கட்டை. [சற்று சலிப்புடன்] எனக்கும் தான் ஆசையா இருக்கு. ஆனல், மகனைப் பார்க்கப் போகணும்னு ரயில்க்காரன் சும்மாவிடுவானு?

ஜெயிலர். இந்தா, பத்து ரூபா பணம் அனுப்பியிருக்கான். மணியார்டர் வந்திருக்கு. இதிலே கையெழுத்துப் போடு.

கட்டை. கையெழுத்தா? எழுதத் தெரிஞ்சா நான் ஏன் சாமி இங்கே வாரேன்? எங்கேயாவது நோட்டெழுதிக் கொடுத்துக் கடன் வாங்கிப் பொழச்சுக்க மாட்டேனு?

ஜெயிலர். சரி, ரேகையை வை........

[ரேகை வைத்ததும் கட்டையனிடம் ஜெயிலர் ரூபாயை எண்ணிக்கொடுக்கிருர். வாங்கிக் கொண்டு சந்தோஷத்துடன் திரும்புகிருன்.]

முநங்கைப்பட்டியை அடுத்த கள்ளுக்கடை. நாள் முழுவதும் நாய்போல் உழைத்து, மனிதன் என்பதையும் மறந்து அடங்கிக்கிடந்த உழைப்பாளி மக்கள், தங்கள் உடற் சோர்வையும் உளத்தில் தேங்கிக்கிடக்கும் துக்கத்தையும் சிறிது நேரமாவது மறந்திருக்கும் பொருட்டுக் கள்ளுக்கடைக்கு வருருர்கள். கள்ளுக்கடையில் கும்பல் கும்பலாகப் பலர் கலயங்களில் கள்ளை வைத்துக்கொண்டு ஆடிப்பாடிக் குடித்துக் கொண்டிருக்கிருர்கள். இந்தக் கும்பலில் கட்டையன் வந்து சேருகிறன்.

அடைக்கன். அடே!....கட்டையண்டா!....

[என்று கூறியதும், பலர் கட்டையன் வருவதைத் திரும்பிப் பார்க்கிருர்கள்.]

கறுப்பன். எப்ப அண்ணே வந்தே? உடம்பு கூட நல்லாருக்கே?

கட்டை. ஏண்டா இளைக்குது! வேளைக்கு சோறு, தோளுக்கு வேலை. பாருவே, தோளுப்பட்டை ரெண்டும் வயிரம் பாஞ்சு இருக்கு........

அடைக்கன். கடைக்காரய்யா! பாரு. பழய ஆளு வந்திருக்கு........

கட்டை. அடைக்கா! பட்டணத்துக்குப் போறதுன்னு பாதை எதுடா?

அடைக்கன். கள்ளுக்கடைக்குள்ளே வந்து போக வேண்டாம். அது எனக்குத் தெரியும்.

கட்டை. சொல்லுங்கடான்னு?

அடைக்கன். சரிதான் போ. போகாத ஊருக்கு ஏன் வழி கேட்கிறே? வந்த வேலையைப் பாரு. [கடைக்காரரைப் பார்த்து] ஏ அய்யா!....இவருக்கு...

கட்டை. எனக்கு வேண்டாம் அப்பா....

அடைக்கன். [அலட்சியம் கலந்த ஆச்சரியத்துடன்] ஏன் காந்தி கூட்டத்திலே சேந்திட்டியோ?

கட்டை. நான் விட்டுட்டேன் அப்பா.

அடைக்கன். கிடைக்காத இடத்திலே விட வேண்டியதுதான். இப்பக்கூடவா?

கட்டை. இனி அதைத் தொடுறதில்லை அப்பா....

கறுப்பன். சொல்லாதே பாவம்....

கட்டை. இல்லேடா, இது மனிசனைக் கெடுத்துப்பிடுது.

கறுப்பன். மனிசன் திமிருபிடிச்சிப்போய் கெட்டா, இது என்ன பண்ணுமாம்?

கட்டை. [யோசித்து] அது நிசந்தான். மனசு தானே காரணம்.

அடைக்கன். பின்னே போடு.

கட்டை. லாஞ்சினையா இருக்குதப்பா?

அடைக்கன். சரிதான் அப்பு. வயசு காலத்திலே கூதலுக்கு அடக்கமா இருக்கும்.

கட்டை. இல்லே.

கறுப்பன். காசுக்கு யோசிக்கிறியா?

கட்டை. காசுக்கு என்னடா கவலே? வேணும்னு நானே தருவேன்.

அடைக்கன். அந்த வழியிலாவது வா.

கட்டை. [கள்ளுக்கடைக்காரனைப் பார்த்து] ஏ அய்யா!........இந்தாய்யா எல்லோருக்கும் நம்ம செலவு இன்னிக்கு.

கறுப்பன். என்ன அண்ணே! நோட்டுப் பொழங்குது.

கட்டை. நம்ம பயல் என்னைப் புறப்பட்டு வரச் சொல்லி, பணம் அனுப்பியிருக்கிறான்.

அடைக்கன். [ஆச்சரியத்தோடு] அடே மகனு இருக்கிறான்! அவனைப் பார்க்கப் போகலியா?

கட்டை. [சலிப்போடு] உஷ். நான் தான் போறேன். நான் இங்கிட்டுபோனு, அவன் அங்கிட்டுப் போயிடுவான். [என்று ஒரு சாக்கு சொல்லுகிறான்.]

அடைக்கன். புள்ளையைப் பார்க்கக்கூடவா சோம்பறே?

கட்டை. ஊரார் புள்ளையை ஊட்டி வளத்தா, நம்ப புள்ளே தானே வளருது. போடுங்கடா. கலயத்திலே ஈ மொய்க்குது.

[என்று சொல்லிவிட்டுக் கலயத்தை எடுத்துக் குடிக்க ஆரம்பிக்கிறன். மற்றவர்களும் குடிக்கிறார்கள்.]

இந்த சமயத்தில், கூப்பிடு தூரத்தில் கிழவி ஒருத்தி வருகிறள்.

அடைக்கன். அண்ணே ஒங்க வீட்டுக் கிழவி வருது.

கட்டை. எங்கேடா? ஏன் அவளும் ஆரம்பிச்சுட்டாளோ?

சிகப்பி. ரெண்டு வாரமாச்சு. வெளியே வந்த மனுசன் நேரே வீட்டுக்கு வருவியா? கடையிலே வந்து புகுந்துகிட்டியே?

கட்டை. ஹூம்—

சிகப்பி. ஏந்திரி, போவோம்.

கட்டை. இரு, பிள்ளே.

சிகப்பி. அட! நீ ஒரு மனிசந்தானு?

கட்டை. சரிதான்....போ

அடைக்கன். ஏ, ஆயி! உன் மகன் கடுதாசி எழுதியிருக்கானும்....அப்பனுக்குக்கூட பணம்....

கட்டை. [இடையே தடுத்து] பணம் அனுப்புன்னு எழுதிருக்கான். கஞ்சிக்கிக் காசில்லாமே திண்டாடுறேன். பத்து ரூபாய் பணம் அனுப்புன்னு எழுதியிருக்கான்.

சிகப்பி. [பரிதாபத்தோடு] ஐயோ, அனுப்புவே....

கட்டை. எங்கேயிருந்து அனுப்புறது? உங்க அப்பன் கொடுத்தா வைச்சிருக்கான்?

சிகப்பி. என்னைக் கொடுத்தது போதாதா, இன்னமா கொடுக்கணும்? இரண்டொரு ரூபாயாவது அனுப்புவே.

கட்டை. போ குட்டி! நானே ஓசித் தண்ணி குடிச்சிக்கிட்டிருக்கேன். ஏண்டா! அடைக்கா?

அடைக்கன். ஆமா, ஆமா. [என்று பாசாங்கு செய்கிறான்.]

கட்டை. கேட்டுப்பாரு. இப்ப இவன் வாங்கிக் கொடுத்தான்.

சிகப்பி. நல்லா இருக்கு பொளப்பு. இந்த மட்டும் புள்ளே உசுரோடேயிருக்குறான்னுவது சேதி வந்திச்சே. ஏந்திரி.

கட்டை. ஏ அய்யா! எங்கே அய்யா! கொண்டா.

கடைக்காரன். சும்மா வருமா? நீ கொடுத்த பணத்துக்கு ஊத்தியாச்சு, போ.

கட்டை. நீ வந்துட்டியில்லே. இனி, காசு குடுத்தாக்கூட அது கிடைக்காது.

சிகப்பி. சரிதான். நாலு மனிசனுக்கு முன்னாலே வையாதே. ஏந்திரிச்சி வா....

மதுரஸ் பூந்தமல்லி ஹை ரோட்டில் ஒரு துரை பங்களா. பங்களா வாசலில் கட்டையன் மகன் பொட்லர் முத்தன் உட்கார்ந்திருக்கிறான். எதிரில் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்கும் தோட்டக்காரனோடு முத்தன் பேசிக் கொண்டிருக்கிறான். இந்த சமயத்தில் தபால்காரன் ஒருவன் பங்களாவிற்குள் நுழைகிறான்.

தபால்காரன். போஸ்ட்........யாரையா வீட்லே?

முத்தன். எஸ், சார்.

தபால்காரன். பொட்லர் முத்தையா யாரு?

முத்தன். ஐ, ஸார்....

தபால்காரன். இந்தா ரசீது.

முத்தன். பணம் போய்ச் சேர்ந்திருக்குமா? ஏன் அய்யா! புறப்பட்டு வருகிறன்னு கடுதாசி வல்லேயா?

தபால்காரன். இப்பத்தான் எழுதிக்கிட்டு இருக்கான். [என்று கிண்டலாகச் சொல்லிவிட்டு, மணியார்டர் ரசீதைக் கொடுத்துவிட்டுத் திரும்புகிறன்.]

தபால்காரனுக்கு எதிரே மோட்டார் ஒன்று பங்களாவுக்கு உள்ளே நுழைகிறது. காரில் இருப்பவர் பொட்லரைக் கூப்பிடுகிறர்.

முத்தன். ....குட் மார்னிங் ஸார்.

ஐயர். உங்க தொரை லெட்டர் எழுதியிருக்காரப்பா.

முத்தன். எப்பொ கமிங் ஸார்!

ஐயர். இங்கே வரமாட்டாரு. அவரை அல்மோராவுக்கு மாத்திப்பிட்டாங்களாம். சாமான்களே எல்லாம் ஏலம்போட்டு, பணத்தைப் பொட்லருக்குக் கொடுங்கோன்னு எழுதியிருக்கார்.

முத்தன். ப்ரெசென்ட்டுங்களா! எசமான்.

ஐயர். இந்தா, எண்ணூத்தி ஒரு ரூபாய். உன்பாடு யோகந்தான்.

முத்தன். தாங்ஸ் ஸார். வெரி குட் தொரை ஸார்.

தோட்டக்காரன். என்ன தம்பீ! பக்ஷீஸா?

முத்தன். ஆமாம் நயினா.

தோட்டக்காரன். போ....வூருக்குப் போயி, நயினாவுக்கு வூடுகீடு வாங்கி, ஜல்ஸாவா இருக்கச் சொல்லு....

முத்தன். அதுதான் யோசிக்கிறேன், ஸார்.

தோட்டக்காரன். ஐயோ, என்னம்மா, எனக்குக்கூட ஸார் போட்டேற்? எப்போ வூட்டுக்குப் பொறப்பட்றே?

முத்தன். நாளே ராவுலே போப்போறேன்.

கன்னம்பட்டி ரயில்வே ஸ்டேஷனில் ரயில் வந்து நிற்கிறது. மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு முத்தன் ரயிலைவிட்டு இறங்குகிறன்.

முத்தன். ஏய், ஜட்கா!

வண்டிக்காரன். வாங்க எசமான்....எங்கே போகணும்.

முத்தன். மூக்கறுப்பான் சாவடிக்கு என்ன கேக்கறே?

வண்டிக்காரன். முக்கால் ரூபாய்....ஏறுங்க.

ஸ்டேஷன் மாஸ்டர். ஒனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. பேசாமே ராத்திரி இங்கே படுத்திருந்துட்டு, காலமே போகலாமே

முத்தன். ஏன் இப்பப் போனா என்ன?

ஸ்டேஷன் மாஸ்டர். இந்தப் பக்கத்திலே களவாணி பயம் அதிகமா யிருக்கு. சமீபத்தில்

ரெண்டொரு பயல்கள் விடுதலையாகி வந்திருக்கான். நாள் தவறினலும் வழிப்பறி தவறது இல்லே.

முத்தன். யாரு விடுதலையாகி வந்திருக்கா?

ஸ்-மா. கட்டையன்னு ஒருத்தன். வெகு நாளைக் கேடி. கதுவாலி ராமன்னு ஒருத்தன்.

முத்தன். [ஆவலோடு] கட்டையன் வந்துட்டாரா?

ஸ்-மா. வந்து பத்துக் கொள்ளை வச்சுப்பிட்டான். வந்துட்டானன்னு கேக்கறியே....

முத்தன். அட பாவமே! இனிமே அந்த ஆள்களைத் திருத்த முடியாதோ?

ஸ்-மா. அஞ்சிலே வளையாதது அம்பதிலே வளையுமா?

முத்தன். நல்ல வார்த்தையாய்ச் சொல்லிப் பாத்தால்.....

ஸ்-மா. பிரயோசனப்படாது. நல்ல மழை பெய்தா, உடனே பட்ட கட்டையிலேகூட, காளான் முளைக்கிறது. ஆனல், கட்டை பச்சை மரம் ஆகிடுமா?

முத்தன். உம்....இங்கே வந்தது வீண்தான்.

ஸ்-மா. ஏன்?

முத்தன். அந்தக் கட்டையன், எனக்கு ஒரு விதத்திலே சொந்தக்காரரு. நாலு பணத்தைப் போட்டு, ஒரு நெலபுலத்தை வாங்கிவச்சு, ஒழுங்கா வைக்கலாம்னு வந்தேன்.

ஸ் - மா. ஊ ஹூம். நடுகிறபோதே எட்டிக் கொட்டையா நட்டுப்பிட்டான். பாலைக் கொட்டி வீணுக்காதே....என்ன பிரயோசனம்? பணம்

கொடுத்தா மூணு நாளிலே குடிச்சுப்பிட்டுப் போயிடு வான். கொண்டி மாட்டுக்குக் கொட்டகை கட்டி ஞப்பிலேதான்.

முத்தன். நீங்க சொல்றதும் ஞாயந்தான். ஆளு வெளியிலே யிருக்கிறபோதே பார்த்துப் பிட்டேன்னுக்கூடப் போதும்.

ஸ்-மா. அதுதான் எங்கே, லேசிலே முடியற காரியமா ? பகல்லே குடிசைப் பக்கம் வரமாட்டாங் கள். ராத்திரிலே கொள்ளையடிக்கப் போயிடுவாங் கள். நாளைக்குச் சாயங்காலமா வெளக்கு வெச்ச உடனே போ. இன்னூர் இனியார்னு சொல்லாதே ஆளு இருக்கிற நோட்டத்தைக் கவனிச்சுக்கோ. அதுக்கு மேலே செய்ய வேண்டியதைச் செய். சரி, படுத்துத் தூங்கு. நான் போயிட்டு வாரேன். பெட்டி பணமெல்லாம் ஜாக்கிரதை.

முத்தன். கும்பிடறேன், ஸார். ரொம்ப நல்ல யோசனை சொன்னீங்க.

மறு நாள் விளக்கு வைத்த நேரம். கட்டையன் குடிசை யிலே, அவனும் அவன் மனைவி சிகப்பியும் ரகசியமாகப் பேசிக்கொண் டிருக்கிறார்கள்.

சிகப்பி. எங்கே போயிட்டே மத்தியானம் முழுக்க ?

கட்டை. ஐயனார் கோயில் பத்தையிலேதானே இருந்தேன்.

பலபல வென்று பல்லி சொல்லுகிறது.

சிகப்பி. இன்னிக்கி என்னமோ வடக்கு மூலேலே திருவுளம் சொல்லிக்கிட்டே யிருக்கு.

கட்டை. என்ன சொல்லுது?

சிகப்பி. வரத்துலே சொல்லுது....

கட்டை. சரிதான். இன்னும் பத்து நாள் கழிச்சு வருதுன்னு பாத்தேன். இப்பவே வருது போலிருக்கு.

சிகப்பி. என்ன வரப்போகுது?

கட்டை. கள்ளன் களவாணிக்கி வேறென்ன புள்ளே வரும்? தெண்டனேதான்.

சிகப்பி. அதுதான் ஒனக்குப் பொறக்கிற போதே எளுதிப்பிட்டானே!

கட்டை. விளக்கேத்தல்லியா?

சிகப்பி. பொருதி வச்சுப்பிட்டுக் கஞ்சியைக் குடிச்சேன். உனக்காகக் காத்திக்கிட்டிருந்தேன். காணம். இப்பத்தான் விளக்கை அணேச்சேன். இந்தாப் பொருதுறேன். கஞ்சியைக் குடி.

கட்டை. இல்லே. நான் தோசை வாங்கித் தின்னுட்டேன்.

தெருவிலே நாய்கள் குரைக்கும் சப்தம் கேட்கிறது. இருவரும் திடுக்கிடுகிறார்கள். யாரோ அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டும் சப்தம் கேட்கிறது. கதவைத் திறக்க இருவரும் தயங்குகிறார்கள்.

முத்தன். ஐயா!.... ஐயா!!

சிகப்பி. யாரது?

முத்தன். கட்டையன் இருக்காரு?

சிகப்பி. இந்தா! உன்னே யாரோ தேடுறாங்க.

கட்டை. (சுதாரித்துக்கொண்டு) என்னேயா? கட்டையனே யில்ல தேடுறாங்க. சரி, நீ தட்டியைப்

புடிச்சுக்கிட்டுப் போயிடு. [என்று சொல்லிவிட்டு, கட்டையன் எழுந்து வந்து கதவைத் திறக்கிறான்.]

திறந்ததும், காக்கிச் சட்டை, தலையிலே தொப்பி, கால் சிராய் பூட்ஸோடு நிற்கும் ஆளைக் காண்கிறான். அவனைத் தன் மகன் என்று அறிந்துகொள்ள முடியாமல் அதிகாரி என்று நினைக்கிறான். தந்தையும் மகனும் பேசுகிறார்கள்.

கட்டை. யாரையா இது?

முத்தன். அய்யா! சுகமா இருக்கீங்களா?

கட்டை. யாரைத் தேடுறீங்க?

முத்தன். உங்களைத்தான்.

கட்டை. என்னைத்தான்னு?

முத்தன். நீங்கதானே கட்டையன்?

கட்டை. கட்டையனையா? அப்படிச் சொல்லுங்க. அவன் இந்தச் சேரியிலேயே இல்லியே!

முத்தன். என்ன ஐயா, இப்படிப் பேசுறீங்க? இதே சேரியிலே தானே இருந்தாரு? பழைய சேரி இருந்த இடம் இதுதானே?

கட்டை. சேரியாவது எடமாவது? ஆடிக் காத்துத் தூக்கிட்டுப் போயி அடுத்த ஊர்லே வச்சாலும் போச்சு. சுருட்டுப் புகையிலே பத்தி எரிஞ்சாலும் போச்சு. ஏழைக்கு வீடுன்னு ஒரு இடத்திலே இருக்க முடியுமா?

முத்தன். [தனக்குள்] சரி, பின்னே விடிஞ்சுதான் தேடணும். [கட்டையனைப் பார்த்து] இங்கே பசியாற ஏதாச்சும் கிடைக்குமா?

கட்டை. இந்த பொட்டல்லேயா, ஏதுங்க?

முத்தன். கையளவு வெறுஞ்சோறு கிடைச்சாலும் போதும்.

கட்டை. எங்களுக்குத்தான் அந்தக் கவலேன்னு, வாரவங்களுமா அப்படி வரணும்.

முத்தன். நீங்கள் சாப்பிட ஆக்கியிருக்க மாட்டீங்களா? அதுலே ஒரு பிடி....

கட்டை. எங்களை ஆக்கினவரு சோறுக்குருப்லே ஆக்கல்லே. கையிலே வாங்கிச் சாப்பிடலாம்.

முத்தன். சரி, அதுவும் சோதனைதான். ராத்திரியிலே யிருந்து ஒரு வாய் சோறு அம்பிடல்லே. ஐயா! இன்னிக்கு இங்கேயே படுத்திருக்கலாமில்லே?

கட்டை. என்ன?

முத்தன். என்ன ஐயா யோசிக்கிறே?

கட்டை. இல்லிங்க, இங்கே நரிப்பண்ணைத் தொந்திரவு ரொம்ப. ரா முழுக்க ஊளையிடும். வீட்டுலேகூட மொளைஞ்சுடு மென்று பாக்கிறேன்.

முத்தன். நம்ம என்ன ஆட்டுக்குட்டியா? நரிக்குப் பயப்பட.

கட்டை. அதுக்குச் சொல்லலிங்க. ஈரத்துலே கிடக்கிற வீடால்லியா. கொசுகு முளு அப்பா அப்பும். இந்தாப் பாருங்க பெருச்சாளி வங்கு!

முத்தன். வந்த இடத்திலே அதெல்லாம் பார்க்க முடியுமா? பூமாதேவி மடியிலே தலையை வச்சுப் படுக்க வேண்டியதுதான். கொஞ்சம் பெரிய மனசுபண்ணுங்க,

கட்டை. இது........ ஒரு சேதியிலே.

முத்தன். என்ன ?

கட்டை. சொன்ன, பயந்திடுவியளோன்னு பாக்கறேன்.

முத்தன். பயப்பட மாட்டேன். சும்மா சொல்லுங்க.

கட்டை. இல்லே, பக்கத்துக் குடிசையிலே பேதி கிடக்கு.

முத்தன். ஐயையோ! அது ஒட்டுவாரொட்டியாச்சே....

கட்டை. அதுக்குத்தான் இங்கே படுக்க வேண்டாம், படுக்க வேண்டாம்னு சொல்லுறேன்.

முத்தன். எனக்காகப் பயப்படல்லே. அந்தக் கட்டையனுக்காகப் பயப்படறேன். ஐயா, பொய் சொல்லாதிங்க. நீங்கதானே கட்டையன் என்கிறது ?

கட்டை. உங்க சாமி சத்தியமா, இல்லே. எம் பேரு கருக்க முத்தன்.

முத்தன். சரி, பொழுது வெடிஞ்சாத் தெரியுது. இந்தப் பக்கத்திலே திருட்டுப் பயம் அதிகம்னு சொல்றாகளே........

கட்டை. அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.

முத்தன். நீதான் படுக்கிறதுக்கு இடம் கொடுக்கமாட்டம்னுட்டே. இந்தா, இந்தப் பண மூட்டையை பத்திரமா வச்சிருந்து காலம்பற எங்கிட்டக் கொடு.

கட்டை. ஏன், பயமாயிருக்கா ? கொடுங்க.

முத்தன். ஒங்களை ஒருத்தரும் அடிச்சுப்

பறிக்க மாட்டானே?

கட்டை. ஹூம். கந்தை கட்டறவங்கிட்டத் தான் களவாணி வரப்போருனுக்கும். சும்மா கொடுங்க.

முத்தன். இந்தாங்க.

[பையை வாங்கி மடியில் வைத்துக்கொள்ளுகிருன்.]

கட்டை. கதவைச் சாத்திக்கிட்டுப் பொறேன். பயமில்லாமேப் படுத்துக்குங்கோ.

[பின்புற வழியாகப் போகிருன்.]

முத்தன். [தனக்குள்ளே] இருட்டிலே சந்தேகமாயிருக்கு. கிட்டக்கப் போனு, கள்ளு நாத்தம்; முகத்தைச் சரியா பாக்க முடியலே. எங்கே ஓடிப் போருரு. காலம்பற பாப்பம். [படுக்கிருன்]

[கட்டையன் பணத்தோடு கொல்லைப் பக்கம் வருகிருன். அங்கே சிகப்பி மறைந்து இருக்கிருள்.]

சிகப்பி. யாரு, புலிதானே?

கட்டை. ஆமாம், குட்டிங்கறேன். பொல்லாத ஆளு! சுத்தி வளேச்சுக்கிட்டான். தெணறிட்டேன் தெணறி.

சிகப்பி. என்ன கேட்டான்?

கட்டை. நேரடியாப் புடிச்சுப்பிட்டான். நீ தானேன்னு.

சிகப்பி. அட பாவி, நாந்தான்னுட்டியோ?

கட்டை. அடி சிங்கனே! சொல்லுவேனே? கருக்க முத்தன்னு சொல்லி, சத்தியம் பண்ணி, சமாதானம் பண்ணி, ஆளேப் படுக்கப்போட்டுப் பணத்தைத் தட்டிக்கிட்டு வந்துட்டேன்.

சிகப்பி. பணமா?

கட்டை. ஆமா, குடுத்து வச்சிருக்கான். எங்கிட்ட.

சிகப்பி. நம்பிக்கைக்கு நல்ல ஆளைப் பார்த் தானே!

கட்டை. இல்லே குட்டி! கெண்டையைப் போட்டு வராலை இழுக்குறானும். போலீஸுக்காரன்.

சிகப்பி. திருட்டுப் பிடிக்க வந்தவன் பணம் குடுப்பானுக்கும்.

கட்டை. ஒசந்த ஆளு, வெட்டு மீசை. சாணி நிறத்துலே சட்டை போட்டிருக்கிறான். புலியல் லேங்கிறியே. இருட்டா யிருந்திச்சினாலும் நான் நல்லா கவனிச்சிட்டேன். ஒரு சாடைக்கு மூக்குகூட நம்ப பய மூக்காட்டம் கொஞ்சம் அமுங்கியிருந்திச்சு.

சிகப்பி. அவன்தானோ என்னமோ! வாவே போய்ப் பாப்பம.

கட்டை. ஹூம். அவன் தான் ஆயிரம் ரூபா பணத்தோடே வாரானுக்கும். இவன் போலீஸுக் காரன் தான்.

சிகப்பி. அப்புறம் ரோசனை?

கட்டை. ரோசனை யென்ன? ஆளைத் தீத்துப் புட்டுக் கம்பிநீட்ட வேண்டியதுதான்.

சிகப்பி. அட பாவி! ஏன் இந்த புத்தி! பணம்தான் நம்மகிட்டே யிருக்கே. நேரே நீட் டிட்டா?

கட்டை. வந்தவன் சும்மாவா வந்திருப்பான். பத்து எடத்துலே சொல்லிப்பிட்டு வந்திருப்பான். காலையிலே எந்திரிச்சதும் வலைபோட்டு அரிச்சுப் புடிச்சு மாட்டிப்புடுவான். ஆளை விடப்படாது.

சிகப்பி. அதெல்லாம் வாணும். வா, போயிடு வோம்.

கட்டை. வேண்டாம்னு சொல்றியா....சரி....நீ இதை எடுத்துக்கிட்டு ஒத்தை ஆல் தாண்டிப் போயிரு. நான் பின்னாலேயே வாரேன்.

சிகப்பி. இப்ப எங்கே போகப்போறியாம்?

கட்டை. கடைக்குப் போயிட்டு வந்துடறேன்.

சிகப்பி. நான் அங்கேயே காத்துக்கிட்டிருப் பேன். வந்திரு.

கட்டை. சரி, போ.... [சிகப்பி போகிறாள்.]

நள்ளிரவில் குடிசையின் தட்டிக் கதவு சப்தமில்லாமல் திறக்கப்படுகிறது. கட்டையன் குடிவெறியோடு உள்ளே நுழைகிறான். கையிலே உறுவிய கத்தி இருக்கிறது. தறட்டை விட்டு நிம்மதியாகத் தூங்கும் மகன் முத்தனைத் குத்திவிடுகிறான்.

முத்தன். ஹா–ம். ஹா! ஐயோ! ஐயோ! கொஞ்சம் இரு. குத்தாதே. நான் கட்டையன் மகன் முத்தன்.

கட்டை. யாரு? முத்தனா! முத்தையாவா! என் மகனா! [என்று சாய்கிறான்.]

முத்தன். அப்பூ!....அப்பூ!....உன்னைப் பார்க்க ஓடிவந்தேன். அப்பூ....உன்னை நல்லா வைக்க ணும்னு வந்தேன். அப்பூ! உன் மடியிலே பணத் தைப் போடணும்னு வந்தேன். அப்பூ! வெட்டிப் பிட்டியே. அப்பான்னு கூப்பிட்டேன். அப்பா இல்லென்னே! ஒரு வாய் சோறு இல்லேன்னே! படுக்க இடம் இல்லேன்னே! பெத்த மகனைக் குத் திப்பிட்டியே! அய்யோ, உனக்கு நெஞ்சு இருக்கா!

உன் புள்ளேயைக்கூட மறந்துட்டியா? கள்ளு உன் புத்தியைக் கெடுத்துப்புடுச்சா; ஊரைக் கொள்ளே யடிச்ச, பாபம் உன் மகனேயே கொள்ளேயடிச்சே. சீ....நீ பாவி; மனுசன் இல்லே. நீ அயோக்கியன். நீ குடிகாரன். ஓடு ஓடு....இங்கே நிக்காதே ஓடு.... இந்தப் பணத்தையாவது வச்சிக்கிட்டுப் பிழை. அப்பூ! இனிமே குடிக்காதே. கொள்ளேயடிக்காதே. கொலே பண்ணுதே. ஹா....தெய்வமே!....

கட்டை. [தானே புலம்புகிருன்.] முத்து....முத்தையா....முத்தா....அடே பேசுடா!....நான் திருடல்லேடா, நான் கொலே பண்ணலே. முத்து! பேச மாட்டியா? அப்பனேடே பேச மாட்டியா? எங்கே சிரி, சிரி, அடே! உங்க ஆத்தா வந்தா சிரிப்பியா? முத்தா! உன் பணத்தை நான் தொடல்லே. உன் தாய்கிட்டக் குடுத்துட்டேன். கொண்டு போய்க் காத்துக்கிட்டிருப்பா. நான் போகவா. சிகப்பி!.... வந்தவன் நம்ப முத்தன்; புலி இல்லே! நம்ப முத்தன்! அவனே நான்...........அவனே நான்........... ஹா ஹா ஹா! தன்வினேத் தன்னேச் சுடும்! தன் வினே தன்னேச் சுடும்!! ஹ....ஹ....ஹ....ஹ....ஹ.... ஹ....

பயித்தியம் பிடித்தவனுகிருன். கட்டையன் மறுமுறை ஜெயிலுக்குப் போகவில்லே. பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டான்.

★

குமர குருபரர்

காலை சுமார் 8-30 மணிக்கு, காப்பி சாப்பிட்டுவிட்டு, கணவனும் மனைவியும் ரேடியோ கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ரேடியோ **வனசலே ராம ரகுராயி** என்ற பாட்டைப் பாடுகிறது. அதன் அமைப்பையும் தொனியின் காம்பீரியத்தையும் அனுபவித்த மனைவி, கணவனிடம் கேட்கிறாள்.

பெண். இது யாருடைய பாட்டு? ரொம்ப நன்னாயிருக்கே....

ஆண். என்ன இப்படிக் கேக்கறே? துளசி ராமாயணம்....தெரியாதோ?

பெண். கம்பராமாயணம்னு கேள்விபட்டிருக்கிறேன்....துளசி ராமாயணம்னா?

ஆண். துளசிதாஸர்னு ஒரு மஹான் ஹிந்தியிலே எழுதின ராமாயணம்.

பெண். ஒஹோ....கம்ப ராமாயணம் ஒசத்தியோ? துளசி ராமாயணம் ஒசத்தியோ?

ஆண். ராம கதையை யார் சொன்னாலும் ஒசத்திதான்....ஆனால்....கம்ப ராமாயணத்துக்கும் துளசி ராமாயணத்துக்கும் கொஞ்சம் சொந்தம் உண்டு....

பெண். அதென்ன சொந்தம்?

ஆண். குமர குருபரர் காசியிலே இருக்கிறபோது, கம்ப ராமாயணத்தை ஹிந்தியிலே பிரசங்கம் பண்ணினார். இதைக் கேட்ட துளசிதாஸர் ராம பக்தி மிகுந்து, ஹிந்தியிலேயே ராமாயணம் செய்தார்னு சொல்லுவா....

பெண். காசியிலே கம்பராமாயணப் பிரசங்கமா? அந்தப் புலவர் யாரு?

ஆண். பொதியமலைச் சாரலிலே, தாம்பிரபரணி நதி தீரத்திலே, ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீவைகுண்டம்னு ஒரு ஊரு. அங்கே, ஷண்முக சிகாமணிக் கவிராயர்னு ஒருவர். தமிழ் படித்த பரம்பரை. தலைமுறை தலைமுறையாக, திருச்செந்தூருக்கு அடிமைப்பட்டவா. அவாளுக்கு வெகு நாளாகக் குழந்தையே யில்லாமெ யிருந்து, முருகன் அருளாலே, ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

பெண். அய்யோ, பாவம்.

ஆண். ஆனல்....பிறந்த குழந்தை....ஊமை.

பெண். அட பாவமே!

ஆண். வயசாறு அஞ்சு ஆச்சு. அம்மான்னு கூடச் சொல்லவல்லே. பெற்றவர்களுக்கு எப்படி இருக்கும் மனசு. கண்ணீரும் கம்பலையுமா, முருகா! ....உன் பேரைக்கூடச் சொல்ல முடியாமெ ஒரு பிள்ளையைக் கொடுத்திருக்கியேன்னு வருத்தப்பட்டா. உடனே, முருகன் அருளாலே குழந்தை வாயைத் திறந்து பேசிடுத்து!

பெண். முருகா....ரட்சி....

ஆண். முருகன் தான் ரட்சித்தான். கந்தர் கலி வெண்பா பாடித்து. குழந்தைக்குப் பாட்டு பாட்டா வருது. கோயில் கண்ட இடமெல்லாம் கும்பிடறது. பாடறது. வயசு ஆக ஆக, வித்தையும் புத்தியும் பிரமாதமா இருக்கு. இருபது வருஷம் ஆச்சு. மதுரை மீனட்சி பேரிலே ஒரு பிள்ளைத் தமிழ் பாடினர், குமர குருபரர். அப்போ மதுரை

மதுரையாகவே யில்லை........பழைய கௌரவத்தைப் பேசறது....பாடினால் குற்றம் கண்டுபிடிக்கிறது. இதெல்லாம் ரொம்ப மலிஞ்சு, அவந்தரையா யிருந்தது. ராஜா திருமலை நாயகருக்கு வேலைக்கு மேலே வேலை. குமரகுருபரர் தன் நண்பர் முத்தையாவோடு, ஒரு நாள் மதுரைக்கு வந்தார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில். பக்தர்களின் கூட்டம் ஏராளமாக இருக்கிறது. இடையே குமர குருபரர் சந்நிதானத்தில் நின்று, மீனாட்சி அம்மைமீது பிள்ளைத் தமிழ் பாடிக்கொண்டிருக்கிறார். அர்ச்சகர் முதலியவர்கள் ஆவலுடன் கவனித்துக்கொண் டிருக்கிறார்கள். மதுரை மண்ணில் பிறந்தோம் என்பதற்காகவே, தனக்கும் தமிழ் தெரியும் என்ற கர்வம்கொண்ட கூழு என்ற மதுரைவாசி ஒருவன், அவர் பாடுவதைக் கேலியாகப் பார்த்துக்கொண்டு நிற்கிறான்.

குமரகுரு. முத்தையா! அம்மையைத் தெரிசிக்க வேண்டுமென்று வெகு நாளாக ஆவல் கொண்டிருந்தேன். அவள் திருவருள் இன்று அவள் சந்நிதியில் நம்மைக் கொண்டுவந்து சேர்த்தது. செந்தமிழ் மதுரைத் தெய்வத்துக்குப் பூமாலையைக் காட்டிலும் பாமாலை சாத்துவதுதான் சிறந்தது.

முத்தையா. பிள்ளைத் தமிழிலே அன்றைக்குச் சொன்ன பாடலை, அம்மையின்முன் பாடுங்கள், கேட்போம்.

குமர.

பரிமளமூரிய உச்சியின் முச்சி பதிந்தாடச்—சுடற்பொற்
பட்டமுடன் சிறுசுட்டியும் வெயிலொடு
பனிவெண் ணிலவாடத்,

திருநுதன் மீதெழு குருவெயர்வாடத் தெய்வமணம் கமழுந்
திருமேனியின் முழுமரகத வொளி எண்
திக்கும் விரிந்தாடக்,
கருவிழி நாறு குதம்பை ததும்பிய காது குழைந்தாடக்,
கதிர்வெண் முறுவல் அரும்ப மலர்ந்திடு
கமலத் திருமுக நின்
அருள்விழி யொடும்வளர் கருணை பொழிந்திட,
ஆடுக செங்கீரை!
அவனி தழைந்திட மௌலி புனைந்திவண்
ஆடுக செங்கீரை!

குருக்கள். ஐயா தாங்கள் எந்த ஊர்?

குமர. ஸ்ரீ வைகுண்டம். குமரகுருபரர் என்று பெயர்.

குருக்கள். இந்தப் பாட்டு யார் பாடினது?

குமர. அன்னை மீனாட்சி.

கூழ. புதிசா ஒரு பாட்டுப் பாடிப் பிட்டாரில்ல, கேழ்கிற கேழ்விக்குச் சரியாப் பதில் சொல்ல மாட்டாரு. கேட்டாச் சொல்லுமே.

குமர. தங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது?....

கூழ. இது முத்தமில் சேத்திரம். உங்க பாட்டுக்கு அப்பனை பாட்டெல்லாம் இங்கே ஆடிக் காத்துலே தூல் பறந்தாப்போலே பறந்து போவும்.

முத்தையா. எங்க ஊரு தெரியுமில்லே......., பொதியமலைச் சாரல். எங்க மலைக்காத்துத்தான் உங்க ஊரிலே தமிழா வீசுது. எங்க தாம்பிர பரணியிலே தண்ணி ஓடல்லே....தமிழே ஓடுது.

கூழ. எங்க வைகையிலே மட்டும் எண்ணவாம்?

முத்தையா. தண்ணியும் ஓடல்லே! தமிழும் ஓடல்லே!!....நீங்க இரங்கி ஓடிணுத்தான்.

கூ-மூ. [கோபமாக] இது தமில்ச் சங்கம் இருந்த இடமாக்கும்.

முத்தை. ஆமா...........இலே இருந்த மரமே! போங்க.... பேசவந்துட்டான். வாங்க புலவரய்யா போகலாம்.

[கையைப் பிடித்துக்கொண்டு, போக முயலுகிறன்.]

கூ-மூ. கத்துக் குட்டிகல்.... பாட்டென்ன, பதமென்னன்னு கேட்டுப்பிட்டா நீட்டுவான் கம்பி.

குமர. அய்யா! உங்களுக்கு என்ன ஆக வேண்டும்? ஏன் வீண் வம்பு இழுக்கிறீர்கள்?

கூ-மூ. அது யாராயிருந்தாலும் சரிதான் பாட்டுன்னு எழுதிணு, நாங்க பாத்து அரங்கேத்தம் ஆகித்தான் வெளியே வரணும்.

குமர. பிறகு....

கூ-மூ. அரசர் திருமலே நாயக்கரிட்டே சொல்லுவோம்.

முத்தை. என்ன சொல்லுவீர்கள்?

கூ-மூ. அதை ஏனய்யா நீ கேழ்க்கிறே? எங்களுடைய அவிப்பிராயத்தைச் சொல்லுவோம்.

முத்தை. ஆக, யாராவது இந்த ஊருக்கு வந்து பாட்டெழுதிப் பேரு வாங்கணும்ணு, முதல்லே ஒரு பள்ளிக்கூடம் போட்டு, உங்களே அறிவாளிகளாக்கி விட்டு, அப்புறம்தான் எழுதணும்.

குமர. முத்தையா, அவர்கள் சொல்லுவது நிஜந்தானே....படித்தவருக்கு மட்டும் பாட்டு எழுதிணுல் பாட்டு நிற்காது. படியாதவர்களும்

அதை ரஸிக்கும்படி செய்துவிட்டால், பாட்டு கல்ப கோடி காலம் நிற்கும். அவர் அந்த வழியில் நம்மைத் தூண்டுகிறார்.

முத்தை. [சலிப்பாக] இதென்னமோ புதுத் திருவிளையாடலா யிருக்கிறது.

குமர. முத்தையா, நான் எனது பாடலை அரங்கேற்ற நினைக்கிறேன்.

முத்தை. [வெறுப்பாக] இந்த மனிதர்களிடத்திலா!

குமர. ஆம், இவர்கள் முன்னிலையிலே

கூழு. அப்படீன்னா முதல்லே எங்ககூட வாங்க.

குமர. இல்லை, தாங்கள் சென்று வாருங்கள்

[என்று சொல்லி, இருவரும் பிரகாரத்தின் வழியே புறப்பட்டு வருகிறார்கள்.]

முத்தை. இவர்கள் முன்னிலையில் தாங்கள் அரங்கேற்ற விரும்புவது என்னமோ எனக்குப் புதிர் போடுவதுபோல் இருக்கிறது. இவர்களுக்கும் பாட்டுக்கும் என்ன சம்பந்தம்? தற்குறிகளுக்கு தமிழில் என்ன ஆசை!

குமர. வைத்தியன் வேரை விரும்புவான். இலையை மாலைகட்டி விரும்புவான். புஷ்பத்தை ஸ்திரி விரும்புவாள். பழத்தை எல்லோருமே விரும்புவார்கள்.

முத்தை. இப்ப என்ன? அரண்மனைக்கா போகவேணும்

குமர. நள்ளிரவில் அரசரிடம் போய்க் கேட்க முடியுமா?

முத்தை. அரங்கேத்த வேணும் என்று....

குமா. எழுதச் சொன்ன தெய்வத்துக்குப் எப்படி அரங்கேத்துவது என்பது தெரியாதா? வா போவோம்.....

நள்ளிரவு. திருமலை நாயக்கர் மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருக்கிறர். கனவுகண்டு, திடுக்கிட்டு விழித்து எழுகிறர். அருகில் சயனித்து இருக்கும் மகாராணியைக் கூப்பிட்டு,

திருமலை. ....தேவி! ....தேவி!!....

தேவி. [மகாராணி எழுந்து] என்ன! என்ன!!

திருமலை. நமது தலைநகருக்கு யாரோ ஒரு புலவர் வந்திருக்கிருராம். இன்று மீனுட்சி சந்நிதிக்குச் சென்றிருந்தாராம். பாடினராம். மனமுடைந்து திருப்பரங் குன்றத்துக்குப் போய்விட்டாராம்.

தேவி. [ஆவலோடு] பாடினரா! என்ன பாடினர்?

திருமலை. மீனுட்சி பிள்ளைத்தமிழ் என்று ஒரு நூலாம். நாளை அதைச் சந்நிதியில் வைத்துக் கேட்கும்படி உத்தரவு.

தேவி. உத்தரவா?

திருமலை. ஆம். இப்பொழுதுதான் காதோடு யாரோ சொல்லுவதுபோ லிருந்தது.

தேவி. அரண்மனைக்கு வரவழைத்துப் பாடச் சொல்லுங்களேன். நானும் கேட்கலாம்.

திருமலை. யாரோ? எவரோ? என்னமோ? வருவாரோ? வரமாட்டாரோ?

தேவி. உங்கள் ஆக்ஞையைக்கூடத் தட்டுவார்கள் உண்டா?

திருமலை. அவர்களுக்காகத் தெய்வமே என்னிடம் வருகிற தென்றுல், என் உத்தரவு அவர்களிடம் செல்லுமா?

அடுத்த நாள். மதுரைக் கோயிலில், திருமலை நாயக்கர் தமது ஆஸ்தானக் கவிஞர்களுடன் வந்து காத்துக்கொண்டிருக்கிறார். குமரகுருபரர் வரவில்லை. அவருடைய பீடம் மட்டும் காலியாக இருக்கிறது. சந்தேகத்தோடு குருக்களை அழைத்து விசாரிக்கிறார்.

திருமலை. ஸ்வாமி! அவர் நேற்று பாடும்போது தாங்கள் பாத்தீர்களா?

குருக்கள். [பணிவோடு] இங்கு வரவா எல்லோரும் தன்னை மறந்துதான் பாடுறா. இன்னார் இனியார்னு நான் எப்படி அடையாளம் கண்டுபிடிக்கிறது.

கூழ. நான் பாத்தேன் மகராஸா!.... உங்க கிட்டே அரங்கேற்றம் செய்யாமல் இங்கே பாடக் கூடாதுன்னு சொன்னேன்.

திருமலை. [கோபத்துடன்] நீயா! ....மழையையும் காற்றையும் நீ தடுக்கமுடிகிறதா? கவிதை வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த நீ யார்?

கூழ. [இறுமாப்புடன்] தமிழை ஆதரிக்கிறவர்கள்னு ஒரு வேலையை வச்சிருக்கிறதனாலேதான்.

திருமலை. உளறாதே. தமிழை நீ ஆதரிக்கிறாய் என்று இரைந்து சொன்னால் உலகத்தார் சிரிப்பார்கள். என் தாயார் குழந்தையா யிருக்கிறாள்; நான்தான் எடுத்து வளர்க்கிறேன் என்று ஒருவன் சொன்னால் யாராவது கேட்பார்களா?

கூழ. மகராஸா! மண்ணிக்கணும். என் தாயாரின் வயசு காலத்திலே நான்தானே ஆதரிக்க வேணும்?

திருமலை. இளமை மாறாதது தமிழ்; சுவை கெடாதது தமிழ்; கொடுக்கக் கொடுக்கக் குறையாத

நிதி தமிழ். கெடுக்க இயலாத வானம் தமிழ். உன் கௌரவத்துக்காக, அதற்கு வயது கற்பித்து முதுமை யாக்காதே.

[என்று சொல்லிக்கொண்டே, தன்னை யறியாமல் தனது ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கிறார்.]

குருக்கள். என்ன எழுந்திருக்கிறீர்கள்?

திருமலை. எழுந்தேனா! ....ஆம்....ஏன் எழுந்தேன்?

குமர குருபரர். [வந்துகொண்டே] அரசே! உன் சரீரத்திலும் என் சரீரத்திலும் உலவும் ஒருவன் உன்னை எழுந்து நிற்கச் செய்தான். என்னை வரச் சொன்னவனும் அவனே.

திருமலை. ஸ்வாமி, வாருங்கள்....[பீடத்தைக் காட்டி] அமருங்கள்.

குமர. அரசே! இன்று அம்பிகையின் சந்நிதியில் நீ கேட்கச் சில பாடல்கள் பாடப்போகிறேன்.

திருமலை. ஸ்வாமி! தாங்கள்தானா? அய்யனே! நேற்று எனக்கு ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருக்கக் கூடாதா?

குமர. புஷ்பிக்க வேண்டியது மரம். மணத்தை உலகத்தில் பரப்ப வேண்டியது காற்று. இரண்டும் தாமாகவே நடந்துவிட்டால், வண்டு தானே தேனிருக்கும் இடத்தைத் தேடிவரும்.

திருமலை. உங்கள் சித்தம். என்னை அழைத்திருந்தால், தாசனுக்கு ஒரு வேலை கொடுத்ததாக ஆகும்.

குமர. நம்மிருவரையும் சந்திக்கச் செய்த சக்தி அந்தக் கருத்தைக்கொண் டிருக்கலாம். தவிர, இவ்வூரில் ஒரு காலத்தில் தமிழும் செறுக்கும் மிகுந் திருந்தன. இப்பொழுது செறுக்கு மட்டும் இருப் பதைக் கண்டேன். ஒவ்வொருவரும் தமிழ்ப் பாடு பவனை ஏளனம் செய்கிறார்கள். பாடுவதில்லை. யாத் திரைக் கோஷ்டியுடன் செல்லும் ஒருவன் மற்றவர் கள் நடை யுடை பாவனைகளைக் குற்றம் கூறிக் கொண்டே நின்றால், கோஷ்டி போய்விடும். அவனால் கடைசிவரை முன்னேற முடியாது. இவைகளை யெல்லாம் இன்று மீனாட்சி நிவர்த்திப்பாள் என்று எண்ணுகிறேன்.

[குமரகுருபரர் பாடுகிறார்.]

தொடுக்குங் கடவுட் பழம் பாடற்
றொடையின் பயனே! நறை பழுத்த
துறைத் தீந்தமிழினின் ஒழுகு நறுஞ்
சுவையே! யகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக் கோயில்
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென்பிடியே! யெறி தரங்க
முடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோவியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்காடேந்துமிள
வஞ்சிக்கொடியே! வருகவே!
மலையத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே! வருக வருகவே!!

திருமலை. [சுகந்த மணம் வீசுகிறது ஆச்சரியத்துடன்].... என்ன வாசனை!

கூழு. சாம்பராணி புகையாட்டம் இருக்கே!

குமர. தெய்விக மணம் கமழுகிறது.

முத்தை. அடேயப்பா!....பிரகாசம் அதிகமாயிருக்கிறதே!....

கல் கல் கல் என்று சிலம்பொலி முழங்க, தெய்விக மணம் கமழும் ஒரு பெண் குழந்தை நடந்து வருகிறது. கூடி இருந்தவர்கள் பிரமித்துப்போய், குழந்தையையே பார்த்த வண்ணம் இருக்கிறார்கள்.

முத்தை. யாரு அந்தக் குழந்தை? மகாராஜா! தங்கள் குழந்தையா?

திருமலை. அவ்வளவு அழகான குழந்தை எனக்கேது? அர்ச்சகர் குழந்தையோ என்னவோ?

மீனு. ராஜா! உன் மடியிலே நான் உட்காரலாமா?

திருமலை. என் பாக்கியம்! உட்காரு அம்மா.

மீனு. [குமரகுருபரரைப் பார்த்து] பாத்தியா, பாட்டுக் கேக்கணும்னு நான் வந்திருக்கிறேன். வந்தவுடனே நீ ஊமையாட்டமா பாட்டை நிறுத்திப் பிட்டியே?

குமர. இதோ பாடுகிறேன் அம்மா!....

மீனு. நன்னுப் பாடணும். பாடினு உனக்கு சன்மானம் கொடுப்பேன்.

குமர. அன்னையே! சன்மானமா கொடுக்கிருய்!

பெருந்தேனிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக! முழுஞானப்
பெருக்கே வருக! பிறை மௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடு நல்

விருந்தே வருக! மும்முதற்கும்
வித்தே வருக! வித்தின்றி
விளைக்கும் பரமானந்தத்தின்
விளைவே வருக! பழமறையின்

குருந்தே வருக! அருள்பழுத்த
கொம்பே வருக! திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருந்தே வருக! பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே!
மலயத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே! வருக வருகவே!!

மீனாட்சி. [பாட்டு முடிந்ததும்] ரொம்ப நன்னாயிருக்கு....ரொம்ப ரொம்ப நன்னாயிருக்கு. ஏன், ராஜா நன்னாயிருக்கில்லே?

திருமலை. திவ்யமாயிருக்கு.... உன் பேச்சு மாதிரியே அந்தப் பாட்டும் இருக்கிறது.

மீனாட்சி. அப்படீன்னா, உன் முத்துமாலையைக் கொடேன். பாடினவருக்குக் கொடுப்போம்.

திருமலை. இதோ [மாலையை நீட்டுகிறார்.]

மீனாட்சி. குமரகுருபரா! முதலில் முத்தைப் பெற்றுக்கொள்....முக்தி பிறகு அளிக்கிறோம்.

[என்று சொல்லி, மாலையை அளித்துவிட்டுக் குழந்தை மறைந்துவிடுகிறது.]

குமர. தாயே! உன் கருணையை என்னென்று புகழ்வேன். அரசே! நீரே பாக்கியவான். நீரே சிறந்தவர். நான் என்ன பாடி என்ன? அம்பிகையைப் பாடும் பாக்கியம்தான் எனக்குக் கிடைத்தது. அவளே வந்து உன் மடியில் தவழும் பாக்கியத்தை நீ பெற்றாய்!

திருமலை. ஸ்வாமி! உங்கள் பாடலைச் செவி குளிரக் கேட்டதன் பலன் இது. அடியேனைப் புகழாதீர்கள். திருமலை வணங்குகிறேன்.

குமர. உன் செங்கோல் ஓங்குக! நீதி தழைக்கட்டும்!

திருமலை. பிரபோ! நீதி என்றவுடன் இன்னொன்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். நீதியைச் சொல்லும் நூல்களெல்லாம் வடமொழியிலேயே இருக்கின்றன. திருக்குறளோ சற்று கடின நடையில் இருக்கிறது. தாங்கள் தயைகூர்ந்து, எல்லோருக்கும் எளிதில் விளங்கும்படி, எளிய தமிழில், ஒரு நீதி நூல் செய்து தரவேண்டும்.

குமர. நீதி நெறி விளக்கம் செய்து நாளடைவில் அனுப்புகிறேன்.

திருமலை. உத்திரவு. மந்திரி! பல்லக்கு பரிவாரம் முதலியன தயார் ஆகட்டும்.

குமர. அரசே! எனக்கு எதற்கு இவையெல்லாம்? திருப்பதிகள் தோறும் சென்று தெரிசிக்கப் போகிறேன். அதற்கு இந்த ஆடம்பரங்கள் வேண்டாம்.

திருமலை. எங்கெங்கு செல்லப்போகிறீர்கள்?

குமர. கால் போகு மிடங்களெல்லாம். முக்கியமாகத் திருவாரூர், வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி, இவற்றுக்குச் சென்றுவிட்டுத் தருமபுரம் மடத்தின் தலைவராகிய மாசிலாமணி ஞானதேசிகரையும் சந்திக்க வேண்டும் என்பது எனது ஆவல்.

புள்ளிருக்கும் வேளூர். முத்துக்குமரன் சந்நிதியில், ஓர் கணிகை பரத நாட்டியம் ஆடிக்கொண் டிருக்கிறாள். சிவஸ்தலங்கள் தோறும் யாத்திரை செய்துகொண்டு வரும் குமாரகுருபரரும் முத்தையாவும் அங்கு வருகிறார்கள்.

ராகம் காம்போதி

பல்லவி

முருகையனே—முருகையனே—அய்யனே (முரு)

முடுகு

முகில் நிற மரகத மயில்மிசை நடமிடும் (முரு)
மோக வினைக்கு மருந்தாக விளங்கிவரும் (முரு)

சரணம்

செஞ்சிலம்பலம்பக் கொண்டைக் குஞ்சலங்குலுங்க—நெற்றிச்
சிந்துரத் திலகம் சுற்றி முத்தென வியர்வரும்ப,
அஞ்சலஞ்ச லென்று மனச்சஞ்சலம் தவிர்க்கவரும்
செஞ்சரண மலர் தஞ்சம்—தஞ்சம் சரவணபவ (முரு)

முத்தை. புலவரையா! தெரியாமத்தான் கேள்கிறேன். பக்திப் பயிர் வளர்க்கும் வைத்தீஸ்வரன் கோயிலிலே பரத நாட்டியம் என்னத்துக்கு?

குமர. பக்தியை வளர்க்கத்தான்.

முத்தை. எப்படி வளரும்! ஆண்டவன் சந்நிதியிலே அழகான பெண்பிள்ளையை நிறுத்தி ஆடவிட்டா மனசு எங்கே போகும்?

குமர. மனதைக் கட்டுப்படுத்த வேண்டும்....

முத்தை. மாடா.... கன்னு.... கட்டுப்படுத்துறத்துக்கு....மனசுல்லே?

குமர. கையை வளைக்க முடியாதவனல் ககனத்தைப் பிடிக்க முடியுமா? மனதை வசப்படுத்த முடியாதவன் மற்றவரை வசப்படுத்த முடியாது.

முத்தை. உங்களுக்கு வேதாந்தம் உடம்போடே பிறந்திருக்கு....எங்களுக்கெல்லாம்....

குமர. கல்லைக் கடவுளென்று தரிசிக்கவரும் பக்குவம் ஒருவனுக்கிருந்தால் கணிகையைக் கல்லாக நினைக்க முடியாதா? கவனத்தை ஏன் மாயையில் செலுத்த வேண்டும்?

முத்தை. இவ்வளவு தொந்தரவு என்னத்துக்கு? இங்கே ஆடாம இருந்தால்தான் என்ன?

குமர. எப்படி இருக்க முடியும்? பழம் சாப்பிடுபவன் ஒருவன் கடித்துத் தின்பான்; ஒருவன் உறித்துத் தின்பான்; ஒருவன் நறுக்கித் தின்பான்; எல்லோரும் விரும்புவது சுவைதானே? பக்திச் சுவையை அனுபவிப்பவர்களும் அப்படியேதான். ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் சுவைப்பார்கள்.

முத்தை. என்னமோ வாதம் சரியாயிருக்கு.... மனசு மாயை கேக்குதில்லே. மந்திரத்தையும் மாயையும் வச்சவந்தான் எடுக்க வேணும்.

குமர. ஆம். அவன்தான் இவன். மன நோய்க்கு மருந்தூயும் வல்லவன் இவன். வைத்திய நாதன். பிறவியை நோயென்று கருதும் எம்

போன்றவர்களுக்கு அந்தப் பிணியை நீக்கும் பெருந்தகை.

பொழியுங் கருணைப் பெருவெள்ளப்
புணரி பெருகி யலை யெறியப்
பொங்கியெழுந்த பெருங்காதற்
புளகம் போர்ப்பப் போது செயும்

விழியு மனமுங் குளிர் தூங்க
விரிநீர்ச் சடிலத்தொருவ னிரு
வீக்கு உதவுந் திருச்செவிகள்
விருந்தாட்டயர, விரைகொழித்து

வழியுங் கொழுந்தேன் பிழிந்திட்டு
மதுரவமுது குழைத்தூற்று
மழலை ததும்பம் பழமறையை
வடித்துத் தெளித்த வார்த்தை யொன்று

மொழியும் பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே!
மும்மைத் தமிழ் தேர் கந்தபுரி
முருகா! முத்தந் தருகவே.

[பாட்டு முடிந்ததும்] முத்தையா! நாம் தருமபுரத்துக்குச் செல்ல வேண்டுமே?

முத்தை. விசாரித்தேன். பக்கத்தில் தான் இருக்கிறதாம். சென்று வருவோமே.

தருமபுர ஆதின மடம். சிவனடியார்கள் புடைசூழ, மடத்தின் தலைவர், மாசிலாமணி ஞான தேசிக மகா சந்நிதானம் அவர்கள் சிவ பூஜை செய்துகொண் டிருக்கிறார். அடியார்கள் திருவாசகம் ஓதுகிறாகள்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க!

பூஜையில் லயித்து இருந்த ஞான தேசிகர், ஏதோ அருள் நோக்கும் கிடைத்ததுபோல், பூஜை நடுவில் பேச ஆரம்பிக்கிறர்.

தேசிகர். செந்திலாதிபன் துணை....சிஷ்யர்களே! குமரகுருபரன் இன்று இங்கு வரும்.

கட்டளைத் தம்பிரான். இங்கு வருவாரா? எப்படி?

தேசிகர். அன்னை நிரம்பத் திருப்பணிகள் வைத்திருக்கிருள். அதைச் செய்வதற்காக வரும்.

குமரகுருபரரும் முத்தையாவும் வருகிறர்கள். குமரகுருபரர் ஞான தேசிகரின் பாதத்தில் வீழ்ந்து வணங்குகிறர்.

குமர. அடியேன் வணங்குகிறேன். குமரகுருபரன்.

தேசிகர். குமரகுருபர! எழுக. தங்கள் தமிழ்ப் பணி எம்மட்டிலிருக்கிறது?

குமர. ஜெயக்கொடி நாட்டிவிட்டேன். இது வரையில் நான் செய்த நூல்களே உலகத்துக்குப் போதும்.

தேசிகர். [திடுக்கிட்டு] என்ன?

குமர. சந்நிதானம் கேள்விப்பட்டுக்கூட இருக்க முடியாது. அவ்வளவு தமிழ் நூல்களைக் கொடுத்திருக்கிறேன் நான்.

தேசிகர். நான்....நான்....யார் செய்தது?

குமர. நான் தான். [*இதைக் கேட்டுத் தேசிகர் சிரிக்கிறார்.*]

குமர. என்ன சிரிக்கிறீர்கள்?

தேசிகர். இல்லை. செத்த பாம்பு காற்றைக் குடித்து உயிர் பெறுவதுபோல, புகழைக் கேட்ட வுடன் அகங்காரம் தலை தூக்குவதைக் கண்டேன்.

குமர. செய்த காரியத்தைச் சொல்லுவது அகங்காரமா?

தேசிகர். குமரகுருபரா! பின் மாலையில் மலரும் மல்லிகை தெரியுமா?

குமர. தெரியும். அந்திமல்லி என்று சொல்லுவார்கள்.

தேசிகர். ஆம். நமது மடத்து நந்தவனத்திலே அந்த மல்லிச்செடி யொன்று இருக்கிறது. அது ஒரு நாள் சாயங்காலம் ஆயிரக்கணக்கான புஷ்பங்களைப் புஷ்பித்தது. பொறிவாணம் வைத்ததுபோல பூத்துக் குலுங்கியிருந்தது. அடிக்கடி தன்னைப் பார்த்துக்கொண்டது. அகங்காரம் ஏற்பட்டது; இந்த மடம் இல்லாவிடில் சந்தை மடம் என்று நிமிர்ந்து நடக்க ஆரம்பித்தது. நிமிர்ந்தால் அகஸ்மாத்தாக ஆகாயத்தைப் பார்த்துவிட்டது. ஆகாயத்தில் என்ன இருந்தது தெரியுமா? கோடானு கோடி நக்ஷத்திரங்கள் மின்னின. புஷ்பத்தை வாரி இரைத்ததுபோல் சிதறிக்கிடந்தன. ஜொலிப்பதைக் கண்டுவிட்டது. உடனே ஒரு பெருமூச்சு விட்டுத் தலையைக் குனிந்துகொண்டது.

குமர. என்னைவிட மற்றவர்கள் எவ்வளவோ அதிகமாகச் செய்திருக்கலாம். இதற்காக நான் செய்தது குறைந்துவிடாதே?

தேசிகர். அதே செடி. அடுத்த நாட்காலை. பண்டாரம் அவ்வளவு புஷ்பத்தையும் பறித்துவிட்டார். செடிக்கு ஏக்கம் தாங்க முடியவில்லை. 'அட ஈஸ்வரா!' என்று சொல்லி வருத்தத்துடன் நிமிர்ந்தது. வானத்தைப் பார்த்தால் அங்கும் நக்ஷத்திரங்களைக் காணேம். ....ஓஹோ ....எடுப்பவனும் கொடுப்பவனும் எவனே ஒருவனுக இருக்கையில், எனக்கு எதற்காக அகங்காரம் என்றது அந்தச் செடி.

குமர. [உண்மையை உணர்ந்துவிடுகிருர்; உடல் பதறுகிறது.] ஆம். நான் என்ன செய்தேன். ஊமையை நீக்கியவன் உவந்து கொடுத்ததை என்னுடையது என்று சொல்ல முடியுமா? பிசகு, என்னை மன்னித்து எனக்கு ஞானேபதேசம் செய்ய வேண்டும்.

தேசிகர். இப்போது முடியாது.

குமர. ஏன் ஸ்வாமி?

தேசிகர். பக்குவப்படும் காலத்தில் புஷ்பம் தானுகவே பழுக்கும்.

குமர. ஸ்வாமி! அரசர் தந்த ஆடம்பரங்களை வேண்டாம் என்றேன். கால் நடையாகவே க்ஷேத்திரங்களெல்லாம் சென்று தரிசித்தேன். இவைகளைச் செய்துங்கூட எனக்கு ஏன் பக்குவம் ஏற்படவில்லை?

தேசிகர். சிஷ்யா! உன் பக்குவம் மாதுளங் கனியைப் போலிருக்கிறது. மாதுளம் பழமும்

பழுத்த பழந்தான். ஆனால், அதன் தலையில் ஒட்டிக்கொண்டிருக்கும் புஷ்பம் இருக்கிறதே அது அகங்காரம். அந்தப் பழத்தை உடைத்துப் பார்த்தால் தனித் தனியாக நன்மணிகள் இருக்கும். ஆனால், சுவைக் கதுப்பு ஒன்று சேர்ந்திருக்காது. செதில்கள் படர்ந்து இருக்கும். மற்றக் கனிகளைவிட மதுரம் குறைவு........ சக்கை அதிகம்.

குமர. பிரபோ! எப்பொழுதுதான் எனக்கு ஞானோபதேசம் கிடைக்கும்?

தேசிகர். மரம் பழுத்தால் தானாக வரும் பட்சிகளைப்போல், மனம் பழுத்தவுடன் ஞானம் வந்து சேரும்.

குமர. அதற்கு ஏதேனும் ஒரு மார்க்கம் சொல்லுங்கள்.

தேசிகர். சிதம்பரத்துக்குச் செல். இன்று வரை நீ கருவியைக்கொண்டே கர்த்தாவைக் கண்டிருக்கிறாய். சிதம்பரத்தில் உருவமில்லாத பரவெளியை வணங்கு. சூனியத்தை சுவரூபமாகக் கண்டு, பழகி, வந்து சேர்.

குமர. உத்தரவு.

சிதம்பரம். குமரகுருபரரும் முத்தையாவும் தில்லை வெளியைத் தெரிசனம் செய்வதற்காக வந்து சேருகிறார்கள். தில்லையம்பதி முழுதும் தெருவெல்லாம் தோரணங்கள் கட்டியிருக்கின்றன. வீதிகள் எங்கும் கோலம் இழைத்து, காவியடித்து இருக்கிறது. சுவரெல்லாம் வண்ணமும் சுண்ணமும் தீட்டப் பெற்றிருக்கின்றன. அஷ்டதிசைகளும் பூமியும் வானமும் அலங்கரிக்கப்பட்டு, ஆண்டான் தில்லை நடராஜன் திருவுல

வருகிறார். சைவ சமயம் தழைத்தோங்கும் சிற்றம்பல வீதிகளில், தேவார, திருவாசக, வேதபாராயண இன்னிசைகள் முழங்குகின்றன.

குமர. முத்தையா! உலகமெல்லாம் இயங்குவதன் தத்துவத்தை நடராஜமூர்த்தி அறிவிக்கிறார். உலகம் நன்கு வாழும் என்று உடுக்கடித்துக் குறிசொல்லுகிறார்.

> **கூற்றிருக்குமடலாழிக் குரிசின் முதலோ ரிறைஞ்சக்**
> **கொழுந்தேன் பில்கி,**
> **யூற்றிருக்குந்தில்லை வனத்தசும்பிருக்கும் பசும்பொன்**
> **மன்றநின்றொரு தாளூன்றி**
>
> **வண்டுபாடச், சுடர் மகுடமாடப்—பிறைத்**
> **துண்டமாடப், புலித்தோலுமாடப்—பகி**
> **ரண்டமாடக் குலைந்த கிலமாடக்—கருங்**
> **கொண்டலோடுங், குழற் கோதையோடுங்—கறைக்**
> **கண்டனாடுந்திறம் காண்மினோ! காண்மினோ!!**

சிதம்பரத்திலிருந்து தருமபுரத்திற்கு வரும் பாதை அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. தருமபுரத்தின் வாசலில் மேளதாளங்களுடன் ஞானதேசிகர், குமரகுருபரரை வரவேற்க நின்றுகொண்டிருக்கிறார்.

தேசிகர். கட்டளைத் தம்பிரான் அவர்களே! இன்று குமரகுருபரர் சிதம்பரத்திலிருந்து வருகிறார். அவரை நாம் வரவேற்க வேண்டும். புறப்படும்.

> **அவமாசிலா மனத்தார்க் கோருயிரா ஞானோற்**
> **பவமாசிலா மணிச்சம் பந்தா - தவமார்**
> **ததியருளத் தானே நின் சந்நிதிப்பட்டேற்குக்**
> **கதியருளத் தானே கடன்.**

[என்றே பாடிக்கொண்டே வருகிறார் குமரகுருபரர்.]

தேசிகர். வரவேண்டும்.

குமர. ஸ்வாமி! அடிமைக்கா இவ்வளவு மரியாதை.

தேசிகர். குருபரா, அடிமையென்பதும், அரசனென்பதும், ஞானிகளுக்குள் இல்லை. தங்களுக்காகத் திருமலை நாயக்கர் ஏராளமான செல்வத்தை அனுப்பியிருக்கிறார்.

குமர. செல்வமா? எனக்கெதற்கு ஸ்வாமி? அவைகளை எப்படி உபயோகிப்பதென்பதுகூடத் தெரியாதே?

தேசிகர். அது ஸ்ரீ காசிக்குச் சென்று தமிழ் மொழி வளர்ச்சிக்கு உழைக்கட்டும். அங்கு வரும் யாத்ரீகர்களுக்கு உதவி செய்யட்டும்.

குமர. திருப்பணி பெரிதாக இருக்கிறதே? இந்தச் செல்வம் போதுமா?

தேசிகர். ஞானிகள் மனது வைத்தால் உலகத்தையே படைக்கலாம். செல்வமா பெரிது?

குமர. சித்தப்படியே நடக்கட்டும். மூத்தையா! இப்பொழுதே இது காசிக்குச் செல்ல நினைக்கிறது.

மூத்தை. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறட்டும்.

தேசிகர். குருபரா! தங்களுக்கு ஞான உபதேசம் செய்ய வேண்டுமென்று கேட்டதே?

குமர. ஆம், கேட்டதுண்டு.

தேசிகர். தங்களைச் சிதம்பரத்துக்கு அனுப்பும்போதே உங்களுக்கு உபதேசம் ஆகிவிட்டது. நமது தொண்டர் குழாத்தில் அதுவும் ஒன்றாய்ச் சேர்ந்துவிட்டது.

குமர. ஐயனே! சந்நிதானத்தைத் தெரிசித்தது முதல் என்னைப் பிடித்திருந்த பந்த பாச விலங்குகள் தெறிபட்டு ஓடுவதைக் கண்டேன். இன்றுதான் அதன் காரணத்தைத் தெரிந்துகொண்டேன். காசிக்குச் செல்ல அனுமதி.

தேசிகர். செல்லுக.

காசி விஸ்வேசர் கோயில். குமரகுருபரர் தெரிசனம் செய்கிறார். எங்கும் வடமொழி முழக்கம் மிகுந்த காசிக் கோயிலில், குமரகுருபரர் தெள்ளிய தீந் தமிழில் காசிக் கலம்பகம் பாடுகிறார். எல்லோரும் அவரையே நோக்குகிறார்கள்.

குமர. மூத்தையா! காதில் உபதேசம் கடவுள் செய்யும் பதி இது. அஞ்சக்கரம் சொல்லி வஞ்சப் பிறவி அறுக்கும் எம்பெருமானை வணங்குவோம்.

அழல் விழித்தனை! பவமொழித்தனை!
ஆறணிந்தனை! மாறணிந்தனை!
மழுவலத்தினை! முழுநலத்தினை!
மானடத்தினை! மானிடத்தினை!
அலகிறந்தனை! தலை சிறந்தனை!
அருள் சுரந்தனை! இருள் துரந்தனை!
உலகளித்தனை! தமிழ் தெளித்தனை!
ஒன்றுமாயினை! பலவுமாயினை!

[காசிக் கலம்பகம்.]

மூத்தையா! இப்பொழுதே அரசனிடம் சென்று நமது தர்மத்திற்கான உதவியைப் பெற வேண்டும். வாருங்கள்.

காசிராஜன் தர்பார். ஒரு தூதன் வந்து, அரசனிடம்

தூதன். மஹாராஜ், தக்ஷின்ஸே தோ ஸாது ஆயே ஹைன்.

மகராஜ். கோன்? ஸாது? யஹான் கிஸ்லியே? அச்சா அந்தர் ஆனேதோ.

குமர. திருவருள் காக்க! [என்று சொல்லி ஒரு எலுமிச்சம் பழத்தை நீட்டுகிறார். அரசன் எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறான்.]

முத்தை. மகாராஜாவுக்கு மரியாதை தெரியாதோ?....ஏன் காணிக்கை எடுத்துக் கொள்ளவில்லே.

மகராஜ். ஏ க்யா ஹை? நீம்பு க்யோ?

தூதன். மகாராஜாவுக்கு இந்த எலுமிச்சம் பழம் எதற்கு? அவர் தோட்டத்திலே நல்ல நல்ல பழம் இல்லையா?

குமர. எலுமிச்சம் பழம் கொடுக்க வந்தோம் என்று நினைப்பது தவறு. மரியாதை செலுத்துகிறோம்.

மகராஜ். ஹேய்! க்யா சாஹ்தே ஹை? பூச்சோ....

தூதன். என்ன வேணும்னு....

குமர. நாங்கள் தொண்டு செய்ய வந்திருக்கிறோம். அதற்குப் பணவுதவி செய்ய வேண்டும்.

மகராஜ். தர்ம்? ஏ ஸாதுலோக்கி மாம்லா. கூச் நஹி மிலேகா....ஜாவ்.

தூதன். பணம் தரமுடியாதென்கிறார்.

முத்தை. வந்தவர்களுக்கு ஆசனமளித்து உட்காரக்கூடச் சொல்லாதவரா தர்மம் பண்ணிப்பிடப்போறாரு.

மகராஜ். வோ க்யா கஹ்தா?

தூதன். ஆப்கே ஆஸன் நஹீ தியா.

மகராஜ். ஹ....ஹ....ஹ........[சிரிப்பு] ஆஸன்? க்யா? முஸாபிர், ஸாதுலோக்கோ ஆஸன்? அச்சா....போலோ, நவரத்தன்ஸே நயே சிம்மாஸன் பனுனேகேலியே ஹுக்கும் தியாஹை.

தூதன். உங்களுக்குப் புதுசா சிம்மாசனம் பண்ணச் சொல்லி யிருக்கிறாராம். போயிட்டு வாங்க.

குமர. உங்கள் அரசர் தரும் ஆசனம் பாச வலைபோன்றது. எனக்கு ஆசனம் அன்னை தருவாள்.

மகராஜ். க்யா? கோன் தேகா?

குமர. தாயே! உன் பணி செய்ய வந்திருக்கிறேன். அரசன் உன் குழந்தையைத் தெரிந்து கொள்ள வில்லை. இந் நாட்டில் உன் பெருமை எங்கும் நிலைக்க நீதான் உதவி செய்ய வேண்டும்.

மண் கண்ட வெண்குடைக்கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண் கண்டளவிற் பணியச்செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில், உன்போற்
கண்கண்ட தெய்வம் முளதோ
சகலகலாவல்லியே.

உய் என்று புயற் காற்றுப்போல ஒரு சத்தம் உண்டாகிறது—சிம்மாசனம் ஒன்று ஆகாயத்திலிருந்து இறங்கி வருகிறது. அதில் குமரகுருபரர் அமருகிறார். அரசன் திகைக்கிறான்.

மகராஜ். அரே, ராம் ராம், மாப்கீஜியே. ஆப் க்யா சாஹ்றதே ஹை? பர்மாயியே?


குமர. மகராஜ், இதர் கேதாரீஸ்வர் கா ஏக் மந்திர், ஔர் குமார ஸ்வாமிகே நாம்மே ஏக் மட் பனேகே தர்ம் மாங்கதாஹூம்.

முத்தை. என்ன ஆச்சரியம்....சாமிகூட அந்த பாஷை பேசுதே.

குமர. முத்தையா அன்னை சகல கலா வல்லியின் அருள். ஹிந்துஸ்தானி பாஷையை ஓதாது உணர்ந்தேன்.

மகராஜ். ஸாதுஜி! ஆப்கா குலாம் ஹூம். ஆப்கோ ஜோ குச் சாஹியே, மை திலாவூங்கா.

குமர. முத்தையா! மகாராஜாவே நம்முடன் கூட இருந்து திருப்பணியைச் செய்கிறேனென்று சொல்லுகிறார். நாளையே குமாரசாமி மடமும் கேதாரீஸ்வரர் ஆலயமும் காசி மாநகரத்து வீதியில் ஓங்கி எழும்.



விஷ வித்து

ஒரு கிராமத்தில் விவசாயிகள் வசிக்கும் தெரு. தென் வடல் ஓடிய தெரு. இரு புறத்திலுமாக, சுமார் இருபது வீடு களுக்கு மேல் இருந்தன; பெரும்பாலும் கூரை வீடுகள். இரண் டொரு ஓட்டு வீடும் ஒரேயொரு மச்சு வீடும் இருக்கின்றன. வீதியில், வீட்டுக்கு வீடு,வாசலிலே வைக்கோல் போரும் நெல் பட்டரைகளும் அவரவர்கள் இயல்புக்குத்தக்கபடி இருக்கின்றன. தெருக் கோடியில் நாலைந்து பார வண்டிகள் கிடக்கின்றன. வீட்டு வாசல்களில் ஆடுகளும் வண்டி மாடுகளும் உழவு குண்டைகளும் கட்டிப் போட்டிருக்கிறார்கள். சித்திரை வைகாசி மாதம். முதல் உழவு முடிந்து முதல் மழைக்காக காத்திருக்கும் தருண மாதலால், விவசாயிகளுக்கு வேலை அதிக மில்லாமல், வீட்டிலேயே தங்கி இருக்கிறார்கள். தெரு நடுவில் ஒரு பெரிய கூரை வீடு. அதன் வாயிலில் இருபது வண்டி வைக்கோல் போரிடப்பட் டிருக்கிறது. பக்கத்திலே பெரிய நெல் பட்டரையும் இருக்கிறது. கோழிகளும் குஞ்சுகளும் ஆட்டுக் குட்டிகளும் நிறைந்து அந்த வீட்டுக்காரன் பெரிய குடியானவன் என்பதைக் காட்டுகிறது. வீட்டின் நடையில் 60 வயதுள்ள கிழவன் பெரியய்யா உட்கார்ந்து இருக்கிறான். அவனுக்கு எதிரில் அவன் மகன் சின்னக் கறுப்பன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு நிற்கிறான். சின்னக் கறுப்பன் கடுங் காளை. பெரியவர், மகனைக் கண்டிக்கிறார்.

பெரியவர்: இந்தாப் பாரு, சின்னய்யா! வர வர உனக்கு கோவம் அதிகமா வருது. கோபம் சண்டாளம்ணு சொல்வாங்க, அடுத்த வீட்டுப் பெரிய

வரும் நானும் அண்ணன் தம்பிகளாட்டம் இருந்தோம். இப்ப அவரு மகனும் என் மகனும் அடிச்சிக்கிட்டிருந்தா ஊருக்கு நல்லா யிருக்குமா?

சின்னய்யா. போங்க அப்பு. அவன் என்ன குடும்பு குடியானவன் கணக்காவா பேசுறுன்? பெரிய சந்நியாசி கணக்காவுலே பேசுறுன்.

பெரியவர். நீ பேசாததையா அவன் பேசிப்புட்டான்?

"அப்பு அப்பு" என்று கூப்பிட்டுக்கொண்டே, சின்னக் கறுப்பன் மகள் சின்னக் குட்டி, ஓடிவருகிறாள். சுமார் வயது எட்டு இருக்கும்.

சி. குட்டி. அப்பு! அப்பு!! நம்ம வீட்டுக் கோழி இருக்குது பாரு?

சின்ன. ஆமா.

சி. குட்டி. அது குட்டிச் சுவத்துமேலே ஏறிக் குந்திக்கிட்டிருந்துச்சு.

பெரிய. சரி சரி போ. நாங்க பேசிக்கிட்டிருக்கிறோம்.

சின்ன. [அக்கரையோடு] ஹூ. பிறகு?

சி. குட்டி. நான் தொரட்டி எடுத்துகிட்டுப் பத்தினேன்.....குதிச்சு பக்கத்து வீட்டுக் கொல்லையிலே போய்........

சின்ன. [கோபத்துடன்] போயுரிச்சா, பொறிச்சுத் தின்னுட்டானு?

சி. குட்டி. இல்லே அப்பு! அங்கே போய் முட்டை வச்சிருக்கு.

பெரிய. முட்டை இட்டுருக்குதா? நீ பாத்தியா?

சி. குட்டி. உம். கண்டேன்.

பெரிய. போனுப் போகுது போ? ஒரு முட்டைதானே?

சின்ன. ஒரு முட்டையானுத்தான் என்ன? சும்மாவா வருது. [மகளைப் பார்த்து] ஏய் மூதேவி! முட்டையை எடுத்துக்கிட்டு வருவியா? இங்கே நின்னுக்கிட்டுக் கதை படிக்கிறியே.

அடுப்படியில் சின்னக் கறுப்பன் மனைவி ராமாயி, இந்த பேச்சுகளைக் கேட்டுவிட்டு, ஆத்திரத்தோடு,

ராமா. ஆமா, குட்டி! கதை படிக்கத்தான் வீட்டிலே ஒரு கிழவன், ஒரு பெரியாம்பிளே ரெண்டு பேரு இருக்காகளே. நீ போய் அடுத்த வீட்டுக் காரன் காலிலே விழு.

பெரிய. ஏ ராமாயி....பொம்பிளேயா லெட்சிண மாப் பேசு.

சின்ன. [அலட்சியமாக] த்சு....சும்மாயிரு அப் பேன். ஏ, குட்டி,! [என்று தன் மகளைத் தட்டி அடித்து] கோழியைப் பக்கத்து வீட்டிலே போக விட்டுப்பிட்டு நீ ஏன் குட்டி இங்கே வந்தே? இனி, கோழியைப் பத்தாதே? போ, ராஸ்கோல்....போய் அந்த முட்டையை வாங்கிக்கொண்டாந்து கொடுத்திட்டு, வீட்டுக்குள்ளே நுழை....

பெரிய. அட சின்னேயா! சின்னேயா!! பாவம்டா, என்னே அடடா....

ராமாயி. கொன்னு போட்டுடு. மூதேவி! பொளேக்கத் தெரியாட்டியும், புள்ளேயை அடிக்க வாவது தெரியுதில்லே, போட்டு அடி....

சின்ன. இங்கே வா குட்டி....

[என்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அடுத்த வீட்டுக்குப் போகிறான்.]

அடுத்த வீட்டு வாசல். சின்னக் கறுப்பன் வேகமாக வருகிறான். வீட்டு வாசலில் நின்று ஆத்திரத்தோடு அண்ணே, அண்ணே என்று கூப்பிடுகிறான். வீட்டுகாரன் முத்தன் மனைவி கறுப்பாயி உள்ளிருந்தபடியே யாரது என்று கேட்கிறாள்.

சின்ன. ஏ அண்ணே! அண்ணே!!

கறுப்பி. யாரது?

சின்ன. உங்க வீட்டு ஆம்பிளே இருக்கிறாரா?

முத்தன். [தூங்கி எழுந்து வெளியே வருகிறான்] என்னப்பாது?

சின்ன. நம்ம வீட்டுக் கோழி வந்து ஏதாவது முட்டைகிட்டை இட்டுருக்குமா?

முத்தன். ஏன்? அதுக்கு உங்க வீட்டுலே இடமா யில்லே?

சின்ன. உங்கிட்டே ரோசனே கேக்க வல்லேங் கறேன். முட்டையிட்டுச்சாமே, எடுத்து வச்சிருக்கி யான்னு கேக்கறேன்?

கறுப்பி. நம்ம வீட்டிலே என்ன, முட்டைக்கி முடையா? கோழிக்கி முடையா? வேணும்னு நாலு முட்டை வேணும்னு கேக்கறது. இதுக்குப் பொய் சொல்லுவானே?

சின்ன. ஆமாடியாத்தா, உங்க தர்மத்திலே தானே ஊரே பொளேக்குது....

முத்தன். அடே உசாரப் பேசு, ஆமா....

சின்ன. அடே தெரியும்டா, முட்டையைக் கொண்டாந்து கொடுத்திட்டு, வேலையைப் பாருடா....

முத்தன். எடுத்தவனைக் கேளுடா.
சின்ன. நீதாண்டா எடுத்தே.

[ஓங்கி ஒரு அறை அறைகிறான்.]

முத்தன். அட, ங்கொப்பிரானே..........அடிக்கவா வரே..........இவனும் ஒரு அடி பொருக்கக் கொடுத்தான்.

பெரிய. [கிழவன் ஓடிவந்து] அடேடேடே, பயகளா....அடே வெலகுடா, வெலகுடா....

சின்ன. விடு அப்ப....இவனை உண்டு இல்லேன்னு பார்த்துப்பிடறேன்.

முத்தன். போங்கம்மான்....என்னம்மோ....

பெரிய. இனி என் கண் காண ஒருத்தரும் அடிச்சுக்கப்பிடாது. அட! பயலே கோழி முட்டையிட்டுச்சோ இல்லியோ, சின்னக் குட்டிப் பேச்சைக் கேட்டுக்கிட்டுக் கக்ஷை கட்டிக்கிட்டு நிக்கிறியே? போங்கடா.

சண்டை சாமாதானமாகிறது. இந்தச் சமயத்திலே வீதியிலே தமுக்கு அடிப்பவன் போகிறான்.

தமு. அடி. வார மாதம் 17ம் தேதி வெள்ளிக்கிழமை வடகாட்டு அய்யனார் கோவில்லே குருதை எடுப்பு வச்சிருக்கு. வீட்டுக்கு வீடு படி அருசியும் புள்ளிவரி கால் ரூபாயும் கூடத்து வாசல்லே கட்டச் சொல்லி ஊரார் உத்தரவு. 17ந் தேதி வடகாட்டு அய்யனார் கோவிலிலே குருதை எடுப்பு....

வடகாட்டு அய்யனார் கோயில் வாசல். கோயில் வாசலில் புரவியெடுப்பு. மண் குதிரைகள் எல்லாம், வரிசை

யாக நிற்கவைத்திருப்பது, நிஜக் குதிரைகள் அணிவகுத்து நிற்பது போலவே தோன்றுகின்றன. குடியானவர்கள் திருவிழாக் கொண்டாடுகிறார்கள். ஒரு புறத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து குலவையிட்டு, கும்மியடிக்கிறார்கள். மற்றொரு புறத்தில் பறைத் தப்புகள் முழக்குகின்றன. ஒரு புறத்தில் கரகம் எடுத்து ஆடுகிறார்கள். ஒரு சிலம்பக் கோஷ்டி சிலம்பம் பழகுகிறது. கூடத்து வாசலில் பானை, சலங்கை, சால்ரா, தொந்தினா முதலிய வாத்தியங்களை வைத்துக்கொண்டு, பக்கத்து வீட்டு முத்தையா காமன் பாட்டு பாடிக்கொண்டிருக்கிறான். அவனுக்கு எதிரில் சின்னக் கறுப்பன் சவால்விடக் காத்துக்கொண்டிருக்கிறான்.

முத்தன்.

அடி ரதியே, ரதிக் கிளியே,
ரதிக்கேத்த மம்முதனே,
அதிவேகமாக வந்து,
அகிலமெல்லாம் காரு மென்று,
இந்திரன், தேவாதி தேவர்களும்,
இரதி மனவாளன் கால்புடிக்க,
சந்திர சூரியர் இரண்டுபேரும்,
சாமரம் வெள்ளைக் குடைபுடிக்க,
தென்றல்க் காத்திலே மம்முதனும்,
தேவியும் தேருமேலே ஏறிக்கிட்டு,
எமயமலே மேலே எம்பெருமா நிட்டையிலே,
சமய மறியாமே சந்நிதியில் வந்து நின்னுந்...
சந்தனம் பூப்பூத்த காட்டுக்குள்ளே,
தாயும் பராசக்தி தவமிருந்தாள்,
அந்த நன்னேரத்தைப் பாத்துக்கிட்டே
ஐயன் பரமனுந் தவமிருந்தார்.

சின்ன.

நிறுத்து நெறுத்திக்க நிறுத்து நெறுத்திக்க.
நீ படிச்சப் பாட்டுப்போதும் நெறுத்திக்க.
ஹைங்-ஹைங்-நீ படிச்ச பாட்டுப்போதும் நெறுத்திக்க
அட காமதேவன் தெகன மென்னு கதைபடிக்கிறே,
நடுச் சாமத்திலே, வீட்டுக்குப்போய் கதவிடிக்கிறே!

முத்தன்.

பாட்டுலே பதிலெடுத்துப் போடு போடு,
படிக்கத் தெரியாட்டிச் சும்மா ஓடு ஓடு
ஆகம புராண மெல்லாம் பொய்யாகுமா
அரட்டக் கல்லி பேச்செடுத்தா மெய்யாகுமா?
ஆமணக்கம் பாலெடுத்து நெய்யாகுமா?
அடுப்பிலே நெருப்பில்லாட்டி ஜொய்யாகுமா?

சின்ன.

மாடுமனே வீடுவாசல் மாப்பிளே மருமகளும்
மன்மதன் எரிஞ்சிருந்தால் உண்டோ உண்டோ,
மனிசப்பய கூட்ட முந்தான் உண்டோ,
மக்களும் பொறக்கிறது உண்டோ உண்டோ,
நீ வாய் திறந்து பாடுறதும் உண்டோ உண்டோ.
நீ வக்கணேயாப் பேசுறதும் உண்டோ உண்டோ.

முத்தன்.

ஜெல்லிக்கட்டு மாட்டைப் போலே
தில்லு முல்லு மூச்சுவிட்டு தீம்தடாக்காப்
பாட்டுப் பாடிப் பாயுறே
சும்மா, தெருவிலே திரிஞ்சுக்கிட்டு மேயுறே
தெருத்திண்ணேயிலு இங்கே வந்து சாயுறே.

சின்ன: அடே,

முட்டையைத் திருடிப்பிட்டு மட்டையடி பட்டவனே
முன்னே வந்து காமங்கதை சொல்லுறே,
முந்தினப் பழங்கதையைச் சொல்லுறே.

முத்தன். எவன்டா திருடன்? நீ திருடன், ஒங்கப்பன் திருடன், ஒங்க பாட்டன் திருடன்....

சின்ன. அறைஞ்சேன்னு பொடலி தெரிச்சுப் போகும். [பிறகு இந்த இடத்தில் அடிதடி முற்றிப் பெரும் கலகமாகிறது.]

வெதுநாளைக்குப் பிறகு ஊர் கூடத்து வாசல். கூடத்திலே அம்பலகாரர் சேர்வைகாரர் முதலிய எல்லோரும் நியாயம் சொல்ல உட்கார்ந்து இருக்கிறார்கள். நடுவே நாட்டாண்மைக் காரர் உட்கார்ந்திருக்கிறார். கூட்டத்துக்கு எதிரில் ஒரு புறத்தில் சின்னக் கறுப்பன் கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கிறான். மற்றொரு பக்கத்தில் முத்தனும் எண் சாண் உடம்பு ஒரு சாணாகக் குன்றி, கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கிறான்.

நாட்டாமை. முத்தையா! நேத்து சின்னய்யா மக சின்னக் குட்டியை அடிச்சதுண்டாடா.

முத்தன். என் பனையிலே இருந்த நொங்கை வெட்டி தின்னுச்சு. அடிச்சேன். களவாண்டா சும்மா விட்டுட முடியுமா?

வயிராவி. ஏ சின்னக் குட்டி! நேத்து என்ன நடந்திச்சு?

சி. குட்டி. என்னைய இவுரு அடிச்சுப் பிட்டாருங்க.

வயிராவி. எங்கே?

சி. குட்டி. தலையிலே.

வயிராவி. எந்த இடத்திலேன்னு கேக்கறேன்.

சி. குட்டி. தலையிலேதான்னு சொல்றேனே.

வயிராவி. அடச் சை மூக்கரை. ஒங்க வீட்டிலேயா? வயலிலிருந்து வறபோதான்னு கேக்றேன்.

சி. குட்டி. வயலுக்கு போய்ட்டு, குப்பை கொட்டிட்டு, வரப்பு வழியா நடந்து வந்தேன். நேரம் உச்சிப் பொழுதிருக்கும். ஒண்டியா வர பயந்து வந்தது. திரும்பிப் பார்த்தேன். ஆத்தியடி நாத்தங்கா உள்வாயிலே ஓரிப் பய மாடு ஓட்டிக்கிட்டிருந்திஞ்சு.

வயிராவி. ஓரிப்பயல்னு யாரு?

சி. குட்டி. தெக்கு வீட்டு மூத்த மாமன் மகனைத் தெரியாதாக்கும்.

வயிராவி. யாரு இந்தக் மூத்தய்யா மகனா?

சி. குட்டி. ஆமா.... அதைக் கூப்பிட்டேன். அது வந்திச்சு. ரண்டு பேருமா மானா மருதையிலேன்னு பாடிக்கிட்டு துணைக்குத் துணையா நடந்து வந்தோம். வார வழியிலே பொன்னஞ் செய் வரப்பிலே வெடலைப் பனை இருந்திச்சு. அதிலேருந்து தள தளன்னு குமிளு கணக்கா ஒரு கொலை நொங்கு வெட்டித் தந்திச்சு ஓரி. நான் அதைக் குடிச்சிக்கிட்டே இருந்தேன்.

வயிராவி. அட அடா சேதியைச் சொல்லு குட்டின்னு கேட்டா, கதை சொல்றியே?

நாட்டாமை. உ உ. சொல்லட்டும் குளப்பாதே.

சி. குட்டி. அப்போ கரை வழியா அவுரு வந்தாரு. அவுக அப்பனைக் கண்டதும் ஓரிப் பய ஓடிப்போயிறிச்சு. அவர் மட்டும் வந்த வரத்திலே என்னை கருக்கு மட்டையை எடுத்துகிட்டு ஓங்கி அடிச்சுட்டாரு. இதைப் பாருங்க முதுகெல்லாம்.... நெத்தம்கூட வந்திருக்குது.

நாட்டாமை. அந்த மரம் மூத்தய்யா வீட்டு மரம்னு உனக்கு தெரியுமா?

சி. குட்டி. இவுரு வீட்டு மரத்திலே நான் ஏன் திங்கப்போறேன். எங்க ஓரி வீட்டுப் பனை; நான் தின்னேன்.

நாட்டாமை. ஒங்கப்பனுக்கும் அவுக அப்பனுக்கும் சண்டைங்கறபோது உங்களுக்குள்ளே என்ன குட்டி கிளே.

சி. குட்டி. அவுங்க பெரியவங்க சண்டை போட்டுக்குவாங்க. நாங்க சின்னப் புள்ளெங்க தானே?

நாட்டாமை. ஏங்குட்டி! அவரு மரத்திலே போய் களவான்டேன்னு கேட்டா?

சி. குட்டி. யாரு களவாண்டாங்களாம். எம் புருஷன் பறிச்சுக் கொடுத்திச்சு. நான் தின்னேன்.

நாட்டாமை. யாரு? உம் புருசனா?

சி. குட்டி. ஆமா, அதைத்தானே நான் கட்டிக்கப் போறேன்.

நாட்டாமை. சண்டைக்காரனையா?

சி. குட்டி. ஆம்புளையும் ஆம்புளையுமா இருந்தாச் சண்டைப் புடிச்சுக்கலாம். நான் பொம்புளெப் புள்ளேதானே. நாங்க ஏன் சண்டை புடிச்சிக்கிறோம். [கூட்டத்திலே சிரிப்பு.]

நாட்டாமை. என்ன முத்தையா என்ன சொல்றே? உம் மகந்தானே பறிச்சிருக்கிறானும்.

முத்தன். அதை நான் கண்டுகிட்டா இருக்கேன்?

நாட்டாமை. உம் மகன் எங்கே? அவனைக் கூப்பிடு.

முத்தன். நேத்து மாட்டைக் கொண்டாந்து கட்டிட்டுப் போனவன்தானும். ஆளையே காணோம்.

நாட்டாமை. சரி, முத்தையா அம்பலம். இப்போ என்ன சொல்றே. குத்தத்தை ஒப்புக் கிறயா?

முத்தன். நான் அவன் பறிச்சுக் குடுத்தாங் கிற சேதி தெரிஞ்சு அடிச்சிருந்தா குத்தம். தெரியாமத்தானே அடிச்சேன்.

சி. குட்டி. தெரியாமல் அடிச்சா வலியாமல் இருக்குமா?

வயிராவி. உஸ்.

நாட்டாமை. இந்தா வயிராவி, துருநாத்து மடலேக் கொண்டா. சின்னய்யா ஒங்கையாலே துருநாத்தை எடுத்து முத்தையா கையிலேபோடு. அவர் கையிலே இருந்து நீ வாங்கிப் பூசிக்க. இரண்டு பேரும் ராசியாப் போயிடுங்க.

சின்ன. அவந்தொட்டு நானு வாங்குவேன். ஊருக்குச் சம்மதமா இருக்குதா. விசத்தை அவங் கையாலே குடுக்கச் சொல்லுங்க. அப்படியே வாங்கி முளுங்கிப்புட்றேன். இந்த ராசிப் பேச்சு மட்டும் பேசாதீங்க.

நாட்டாமை. பிறகு?

சின்ன. செஞ்சது குத்தம்னு ஊர்க் காலிலே விழுந்து கும்பிடச் சொல்லுங்க.

கூட்டம். ஹா ஹா ஹா ஹா....

சின்ன. என்ன? ஆஹாண்ணு, குத்தத்துக்குத் தானே கும்பிடச் சொல்ருக.

நாட்டாமை. என்ன முத்தையா?

முத்தன். எனக்கும் வயசு பாதிக்குமேலே ஆயிடுச்சு. இன்னிக்கிவரையில் ஒரு தப்பு தண்டா

வுக்குப் போனேன், காலிலே விழுந்தேங்கற துல்லே. மனிசன் மானத்துக்குத்தான் வேட்டி கட்றுன். அது போச்சுன்னு அப்புறம் ஒண்ணு மில்லே. மானத்தை விட்டவன் ராசாவிலேயும் பெரியவன். அவனேக் கேட்கிறவங்க யாரு மில்லே.

சின்ன. உங்களுக்கெல்லாம் காது கேக்குதா? கேட்டுக்குங்க. இவுருக்கு மானம் போயிடுச்சுன்னு, அப்புறம் யாரும் இவரை அடக்க முடியாதாம்.

வயிராவி. உஸ்.

நாட்டாமை. ஊம்.... சரி.... ஊருக்கெல்லாம் சொல்றேன். முத்தையா அம்பலம் அடிச்சது குத்தம்தான்.... தெரியாமச் செஞ்சாலும் குத்தம் குத்தம்தான். அதுனுலே ஊராரு காலிலே விழுந்து குத்தத்தை ஒப்புக்குங்கன்னு சொல்லி....

கூட்டம். அது சரிதான்....அது சரிதான்....

முத்தன். காளியம்மா........ உம்........ நான் மனசை அடக்கித்தான் பாக்கிறேன். கேக்கல்லே.... ஊராரு காலிலே மட்டும் விழுகணுமா? எதிரி காலி லேயும் விழுகணுமா?

சின்ன. கேக்கிறீங்களா? சொல்றதை.

வயிராவி. அட சும்மாரப்பா.

முத்தன். நான் படிச்ச கூடம். நான் பொறந்து வளர்ந்த ஊரு. நான் குடுத்த மருவாதி. நானே எடுக்கப் படாது. சும்மா ஊருக்கெல்லாம் கும்பிடுவேன். உழுகிறவனேக் கும்பிட்டால் உழக் குக் கலங்காணும். குத்த வாளியா நின்னு கும்பிடத் தான் கூசுது....ஊருக்குச் சொல்றேன். நேத்து

வரைக்கும் ஒங்ககூடப் பழகின முத்தையா போனன். அவன் மானத்திலே வடுப்பட்ட தில்லே. இன்னிக்கு அது பட்டுடுச்சு. இனி இருக்கிற முத்தையா நாய்....எச்சிக்கலெ நாய்ன்னு வச்சுக்குங்க. இந்த இடத்திலே வந்து கையைக் கட்டிகிட்டு நிக்கறதுக்கே எனக்கு முதலிலே நடுங்குது.....நான் எப்படி உங்க காலிலே விழுகப் போரேன். ஊராரு சந்தோசத்துக்காக கும்பிடல்லே. எதிரி அவமானப்படுத்தணும்கிருன். அதுக்காகக் கும்பிடறேன்....தாயே காளியாத்தா....இந்தா. கும்பிட்டுட்டேன்.

[என்று தரையில் விழுகிருன்]

கூட்டம். ஹா ஹா ஹா....

நாட்டாமை. [அவனைத் தூக்கி நிறுத்தி] முத்தையாண்ணே....ஹா ஹா உம்....வா உட்காரு. வெற்றிலே போட்டுக்கோ.

முத்தன். [சிரிக்கிருன்—பெருமூச்சு.]

நாட்டாமை. வருத்தப்படாதே அண்ணே........

முத்தன். இல்லே....தலைக்கு மேலே வெள்ளம் போயிருச்சு. சாண் ஏறின என்ன....முளம் ஏறினன்ன? சரி, நான் வரேன்.

நாட்டாமை. அண்ணே வாயேன் விளக்கு வைக்கிற நேரம். கோயிலிலே போய் சாமி கும்பிட்டுட்டுப் போகலாம்.

முத்தன். காளியாத்தா, அப்படி யெல்லாம் கோயிலுக்கு வராப்பிலே வைக்கல்லே. நான் போறேன்.

வயி. மனுசன் மானம் வெக்கத்துக்குப் பயந்தாரு....நெஞ்சு கொதிச்சுப் போச்சு போருரு.

நாட்டாமை. ஊம்....

சின்னையா வீட்டில் கிழவன் நிலைகொள்ளாமல் தறுக்தும் நெடுக்துமாக மறுகிக்கொண்டு நிற்கிறன். அடிக்கடி தன் மகன் வருகிறனே வென்று வீதியைப் பார்த்த வண்ணம் இருக்கிறன் சின்னக் கறுப்பன் உள்ளே வருகிறன்.

பெரிய. [பதட்டத்துடன்] என்னடாய்யா? என்ன ஆச்சு?

சின்ன. [கர்வத்தோடு] செஞ்சவனுக்குச் செய்யறது, செத்ததுக்கப்புறமா?

பெரிய. அடப் பாவி. என்னடா நடந்திச்சு!

சின்ன. என்ன நடந்திச்சு. நல்லா வச்சுத் தீட்டிப்பிட்டாங்க.

பெரிய. என்ன அடியா?

சின்ன. அடிச்சாத்தான் ஆறிப்போகுமே?

பெரிய. அபராதமா?

சின்ன. நல்லா புத்தி வராப்பிலே ஊரார் காலிலே விளுந்து கும்பிட்டான்.

பெரிய. அட துரோவிப் பயலே. மோசம் பண்ணிப்புட்டியேடே?

சின்ன. ஏன் என்னவாம்?

பெரிய. தீராப் பகையை வளத்துக்கிண்டு வந்துட்டியேடா? இனி கொலை விழுந்தாலும் கேள்வி முறையில்லாமேப் போயிடுமே?

சின்ன. போயிடுமோ. நாயம் விட்டிடுமோ?

பெரிய. என்னடா மனிசனுக்கு மருவாதி உள்ளவரைக்கும் தானேடா நியாயம் அநியாயத்துக்கு பயப்படுவான். இனி முத்தையாவுக்கு என்ன

இருக்குது? மானம் போனதோட்டே வாழ்வு போச்சு. நாளேயே உன்னைக் குத்திக் கொன்னுட்டு அவனும் குத்திக்கிருன்னு வச்சுக்கோ. ஊருக்குப் பயப்படணுமா? உலகத்துக்குப் பயப் படணுமா? என்ன சும்மா இருக்கே?

சின்ன. [ஏளனமாக] ஹா....

பெரிய. அன்னிக்கே சண்டை வேண்டாம் னேனே கேட்டியா?

சின்ன. அதுதான் மூண்டு போச்சே?

பெரிய. இன்னமும் மோசம் போயிறல்லே. நெருப்பைப் பொறியிலே அணைச்சுடலாம். பத்திக் கிட்டு எரிய ஆரம்பிச்சுட்டா அணைக்க முடியாது.

சின்ன. [சலிப்போடு] என்ன செய்யணும்கிறே?

பெரிய. நீ வீட்டிலே இரு. நான் போய் அவனைக் கூட்டியாறேன்.

சின்ன. அவன் காலிலே நான் விளுகனும் கிறே?

பெரிய. வேண்டாம்....வா மூத்தையா அண் ணேன்னு சொல்லு. ரெண்டு பேரும் ராசியாப் போயிடுங்க. ஒரிப் பயலுக்கும் சின்னக் குட்டிக்கும் கலியாணம்னு நிச்சயத்தைப் பண்ணிக்கிட்டு ரெண்டு பேரும் சந்தோசமா யிருங்க; நான் பாத் துட்டுக் கண்ணை மூடறேன்.

சின்ன. ஏப்பு, நீதான் கிழவன். ரெத்தம் செத்துப் போச்சு. என்னையும் ஏன் இப்படி யெல் லாம் இளுத்தடிக்கிறே?

பெரிய. அட மறுக்கொள்ளிப்பயலே.உழுகிற வன் சண்டைப் பிடிச்சா உலகு பட்டினியாய்க்

கிடந்து போகும்டா. இரண்டு வருசமா சண்டை புடிச்சிருக்கிறியே, வீட்டைப் பாத்தியா? வேளாமை யைப் பாத்தியா? குருவை நெல் விதைக்குங் கண்டு விக்கவும் வருமே. கோடைக்கு விதை இருக்கா? குதி ரெல்லாம் தூங்குதேடே? வயல் கதிரு அறுக்காமே கிடந்து முளைச்சுப்போச்சு? ஆறு சோடி மாடு ஒரு சோடியாப் போச்சு. வீடு கூரை பிரிஞ்சு கிடக்கு. போர் பிரிஞ்சுகிடக்கு, வரப்பு வெட்டல்லே. வாய்க்கா வெட்டல்லே. வயல் வெட்டல்லே. அவன் தூங்கினை? முளிச்சிருக்கானு? சோறு திங்கருனு? சுகமா இருக்கிருனன்னு எதிரியைப் பத்தியே நெனைச்சுக்கிட்டு ஒன்னை மறந்திட்டி யேடா? நீ ஒரு மனுசந்தானு? அடே நீ அவன் காலிலே விளுக வேண்டாம். நான் விளுகிறேன். சாகப்போற வயசிலே என்னுலே ஒரு உபகாரமாச் சும் இருக்கட்டும். ஏண்டா சும்மா இருக்கே? அடே பொகையறபோதே அமுத்திப்புடு. புடிச்சா விடாது....ஒருத்தனேடே ஒருத்தன் பகைச்சுக் கிட்டே இருந்தா உலகத்திலே சமாதானமே உண்டாகாது.

சின்ன. சரி போங்க, கூட்டியாங்க.

இந்தச் சமயத்தில் ராமாயியின் இரைச்சல் கேட்கிறது. ஊர்ப் பெண் பிள்ளைகள் நாலைந்து பேருடன் பேசிக்கொண்டே வீட்டுக்குள் நுழைகிறள்.

ராமா. அவன் விளுந்தது போருது. அத்தப் பொட்டச்சிறுக்கியை இல்லே விளுகச்சொல்லணும்.

சின்ன. என்ன புள்ளே.

ராமா. இந்த வீட்டை வேரோடே பேத்துப் புடப் போருங்களாம், புருசனும் பெஞ்சாதியும்.

சின்ன. எப்பச் சொன்ன?

ராமா. அட, ஊருணிக் கரையிலே மீட்டங்கி கூடிப் பேசினுகளாம். அவளைக் கொண்டுபோய்க் கூடத்து வாசல்லே கட்டி, புளிய மிலார் எடுத்துப் போட்டிருக்கணும்.

பெரிய. ஏ ராமாயி....சனியனுட்டம் வந்து சண்டையை விலைக்கு வாங்கிக்கிட்டே இருக்கியே?

சின்ன. சும்மா இரப்பேன். ஒனக்கு ஒன்னும் தெரியாது. ஏ புள்ளே! அந்த மம்மட்டியை எடு. [என்று சொல்லிவிட்டு, தானே போய் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு புறப்படுகிருன்.]

பெரிய. அடே சின்னய்யா! சின்னய்யா!!

சின்ன. ஏ புள்ளே! கிளவனை வெளியே விடாதே. அடுத்த வீட்டுக்குப் போயிருவான். நான் வரேன். அறைக் கதவை இழுத்துச் சாத்திப்புடு.

ராமா. ஆமா நீ எங்கே போரியாம்?

சின்ன. வயலிலே போய் மடையைத் திருப்பி விட்டுட்டு வாரேன்.

ராமா. விளக்கு வச்ச பொறவா? மடை திருப்புவாங்க. நாளைக்குப் பாத்துக்கலாம்.

சின்ன. இல்லே புள்ளே, வீட்டிலே இருந்தா கிளவன் தொந்திரவு பெரிய தொந்திரவா இருக்கு.

ராமா. ஆமா, சோறு?

சின்ன. வந்து சாப்பிடறேன்.

ராமா. இருட்டிலே பாத்துப் போ. ஒண்டி சண்டியா அவன் கிட்ட அம்புட்டுக்காதே.

சின்ன. ஹாஹா. இது நல்ல தொழிலாப் போச்சு. போ போ.

நள்ளிருட்டு. வயலுக்கு நடுவே சின்னக் கறுப்பன் வாய்க்காலை வெட்டி, தண்ணீரை மடக்கி, தன் வயலுக்குப் பாய்ச்சுகிறன். அப்போது குடியானத் தெருவில் இவன் வீட்டுக்குக் கொல்லைக்குச் சமீபமாக, ஒரு வெளிச்சம் தெரிகிறது.

சின்ன. என்ன வெளக்குத் தெரியுது.... நம்ம வீட்டுக் கிட்டே இல்லே தெரியுது.....யாரு? கிளவன் கிளவன் தேடறாரா? [இரைந்து] என்ன....யாரு அங்கே. என்ன பதிலயே காணோம்....[ஓடுகிறன்] அட கேட்டா காதா கேக்கலை யாரு, விளக்கு....

முத்தன். [கையில் பந்தத்துடன் நின்றுகொண்டு வெறி பிடித்ததுபோல் சிரிக்கிறன்.]

சின்ன. அட நீயா? அங்கே என்னய்யா செய்யுறே?

முத்தன். உன் குச்சைக் கொளுத்தப் போறேன்.

சின்ன. கொளுத்திறியா, போடடா பந்தத்தை.....

முத்தன். அடே கிட்டத்திலே வராதே.... பாத்தியா கட்டைக் கம்பு. மண்டையைப் பிளந்திடுவேன்.

சின்ன. டேய் டேய்....[என்று தடுக்கிறன்.]

முத்தன். என்னடா டேய். [தலையில் அடிக்கிறன்.]

சின்ன. ஹா. அப்பேன்! அப்பேன்!

[கீழே விழுகிறன்.]

நெருப்பு பற்றுகிறது; தெருவில் இரைச்சல்.

ராமா. அய்யோ, நெருப்பு, நெருப்பு, ஆத்த சின்னக்குட்டி, சின்னக்குட்டி. ஓடு ஓடு....எடு புள்ளே!

பெரிய. அய்யோ ஆ ஆ தீ....தீ....அடே பயலே. சின்னய்யா சின்னய்யா....அய்யோ கதவைத் திற.... கதவைத் திற....சின்னய்யா

ஒருவன். தண்ணீ.... தண்ணீ

மற்றொரு. கொண்டா கொண்டா கொண்டா.

வேறொரு. ஊத்து ஊத்து ஊத்து.

முத்தன். அய்யோ நெருப்பு, நெருப்பு.... அட ஓரி ஓரி ஓரிப்பயலே. அய்யோ நம்ம வீட்டி லேயுமா புடிச்சிக்கிச்சி. ஓரிப்பயலே.

ஒரு. டேய், அந்த வீட்டுக் கூரையிலே ஊத்துங்கடா.

பெரிய. சின்னய்யா! சின்னய்யா!!

ஓரிப்பயல். சின்னப்புள்ளே கிழவன் எங்கே? கிழவன் எங்கே?

சி. குட்டி. அய்யோ பாட்டன் உள்ளே தான் இருக்கும். அறைக்குள்ளேயே கிடக்கு.....

அடுத்த நாள் காலை. தெரு முழுதும் எரிந்துவிட்டது. வீதியெங்கும் நெல் பட்டரைகள் எரிந்து, பொறி சிதறிக்கிடக்கிறது. நேற்று செல்வத்தோடு லட்சுமி களையுடன் விளங்கிய அந்தத் தெரு, இன்று சுடுகாடு போல் காட்சி அளிக்கிறது. ஒரு மரத் தடியில் உடல் முழுதும் தீ சுட்ட புண்களுடன் கிழவன் உயிருக்கு மன்றாடிக்கொண்டு கிடக்கிறான்.

சி. குட்டி. அப்பேன்.

ஓரி. சின்னய்யா அம்மான்.

சின்ன. எங்கெல்லாம் தேடுறது. நெருப் பிலே விளுந்திருக்குமோ?

ஓரி. சேச்சே, அதெல்லாம் இருக்காது. சின்னய்யா குரல் கேக்கிறது. புகையிலே அமுத்திப்பிடு; பிடிக்கவிடாதே.

சி. குட்டி. எங்கப்பன் குரலாட்டம் இருக்குதே.

சின்ன. ஹூ புகையிலே அமுத்திப்பிடு; பிடிக்கவிடாதே.

ஓரி. அந்தாலே வாய்க்காலுக்குள்ளே கெடக்காரு அம்மான்.

சி. குட்டி. அப்பேன், அப்பேன்.

சின்ன. புகையிலே அமுத்திப்பிடு; பிடிக்க விடாதே.

ஓரி. இந்தாங்க....ஏ குட்டி! இந்தத் துண்டை எடுத்து முகத்திலே தொடை.

சி. குட்டி. அப்பேன்....பாட்டன் செத்துப் போகப்போறது. ஒன்னைக் கூப்பிடுது.

சின்ன. ஹா. யாரு எங்கப்பனு?

ஓரி. ஆமா.... உடம்பிலே நெருப்புச் சுட்டுப் புண் புண்ணு இருக்குது. மரத்தடியிலே கொண்டு போய் போட்டிருக்காங்க.

சின்ன. ஹா எங்கப்பனு.... அப்பேன் அப்பேன்.... [எழுந்து ஓடுகிறுன்.]

ஓரி. ஓடாதீங்க. ஓடாதீங்க.

பெரிய. ஹா ஹா காளியாத்தா. சின்னய்யா! சின்னய்யா!

சின்ன. அப்பேன்.

கூட்டம். வழியை விடு. வழியை விடு.

சின்ன. அப்பேன்.

பெரிய. சின்னய்யா.

சின்ன. அய்யோ, சண்டாளப் பய.

பெரிய. உஸ்....கொஞ்சம் எல்லோரும் அங் கிட்டுப் போங்க.... நான் என் மகன்கூட பேசணும் ....எல்லோரும்.

கூட்டம். உ உ போறோம்....

பெரிய. சின்னய்யா!

சின்ன. ஹா.

பெரிய. யாருடாப்பா தீக்கொளுத்தினன்?

சின்ன. அந்தச் சண்டாளன்தான் அப்பு.

பெரிய. முத்தையாவா? நீயா?

சின்ன. என் கண்ணுலே கண்டேன் அவன் தான் அப்பு.

பெரிய. முட்டாப் பயலே நீ வாயாலே சுட்டே அவன் தீயாலே சுட்டான். அவன் நெஞ்சிலே நெருப்பு வச்சே. அவன் உன் குடியிலே வச்சான். யாருடா அவராதம் செஞ்சவன்....அடே ஒரு கோளி முட்டைச் சண்டை குடியிருப்பையே கொளுத்திப் புட்டிச்சிடா. யாருடா குத்தம் பண்ணினவன்? அடே புகையிலே அமுத்திப்பிடு; புடிக்கவிடா தேன்னு சொன்னேனே கேட்டியா? அடே ஒன் வீடும் போச்சு. அவன் வீடும் போச்சு. ஊர்ப் பயக வீடும் போச்சு. எதிரியும் நீயும் ஒரு மரத்தடியிலே பொங்கித் திங்கிறதுலே வந்து முடிஞ்சிடுச்சு. யாராலேடா இதெல்லாம்?

சின்ன. என்னலேதான்.

பெரிய. உன்னலேதானே....நீ தானே அப ராதி.

சின்ன. ஆமா....

பெரிய. இனியாச்சும் புகையிலேயே அமுத்திப்பிடுவியா ?

சின்ன. இனி என்ன இருக்கு? அதுதான் குடியிருப்பு முளுக்கவே போச்சே?

பெரிய. வீடுதான் போச்சு, வினை போகல்லே. இங்கே வா....முத்தையா நெருப்பு வைக்கிறபோது நீ மட்டுந்தானே பாத்தே?

சின்ன. ஆமா....

பெரிய. வேறெ ஒருத்தருக்கும் தெரியாதே?

சின்ன. தெரியாது.

பெரிய. சரி........ என் கையிலே அடிச்சுச் சத்தியம் பண்ணு....ஒன் எதிரியைக் காட்டிக் கொடுக்கல்லேன்னு சத்தியம் பண்ணு. அடுத்த சண்டைக்கு இதுதான் வித்து. இதை விதைக்காதே....உம் கையில் அடி........

சின்ன. அப்பு....அப்பு சொல்லல்லே அப்பு.... சொல்லல்லே அப்பு....உன் பேச்சைக் கேக்காமே வீடு வாசல் எல்லாம் போச்சு அப்பு....எல்லாம் எரிஞ்சு போச்சு அப்பு. [அழுகிருன்.]

பெரிய. மகனே, அஞ்சாதே.... உன்னைப் புடிச்ச கெட்ட குணம் இந்த நெருப்பிலே எரிஞ்சு போச்சு. அம்பிட்டுத்தான். ஏண்டா எம்புட்டு நெருப்புப் பிடிச்சாலும் ஆத்தா பூமாதேவியை அசைக்க முடியுமா? ஒரு வருசம் நல்லா விளைஞ்சுட்டா வீடு வாசலுக்கா பஞ்சம்....சின்னய்யா வா....இனி நீ சொகம்மா இருப்பாய்....சந்தோசமா இருப்பே.... இந்தா என்னையைக் கட்டிக்க....

கிழவன் இறைவனடி சேருகிறன்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு சின்னய்யா வீட்டில் வாழைமரம் கட்டியிருக்கிறது. தோரணங்கள் தொங்குகின்றன. சின்னய்யாவும் முத்தையாவும் ஒரு பிறப்பம் பாயில் உட்கார்ந்திருக்கிறார்கள் அவர்களுக்கு நடுவில் ஒரு சந்தனப் பேலா இருக்கிறது.

சின்ன. ஏ முத்தையா வந்தவங்களுக்கெல்லாம் இலையைப் போட்டு பலகாரம் பச்சினத்தை எடுத்து வைப்பியா? மாப்பிள்ளை வீட்டுக்காரன் சும்மா இருக்கியே?

முத்தன். ஆமாடாப்பா. உம் வீட்டிலே பெண்ணு எடுக்கப்போக நானே வேலெ வெட்டியும் பாக்கவேண்டிருக்கு.

சின்ன. ஆமா, ஓரிப்பயலும் சின்னக்குட்டியும் எங்கே காணோம்....

முத்தன். அட உம் மகளும் மருமகனும் எங்கே போனுங்களோ எனக்கா தெரியும்? அந்தா வீட்டுக்குள்ளேருந்துதானே வருதுங்க.

[ஓரியும் சின்னக்குட்டியும் படைப்பு வீட்டிலிருந்து வெளியே வருகிறார்கள்.]

சின்ன. ஆத்தா ஏன் கண் கலங்கி யிருக்குது? ஏப்பா ஓரி?

முத்தன். அவுங்க பாட்டன் தெய்வமா விளங்குறுரு; ரெண்டுபேருமாப் படைக்கிற வீட்டிலே போய் அவரை நினைச்சுக் கும்பிட்டிட்டு வாராங்க.

சின்ன. ஆமாமா அவரு சொல்லாட்டி, நீ எந்தச் செயலிலே இருப்பியோ, நான் எப்படிப் போயிருப்பேனே? அவரு வார்த்தையினலேதானே

நம்ம சண்டையே தீர்ந்திச்சு. இந்தக் கலியாணத் தைப் பார்க்க அவருதான் இருக்கல்லே.

சி. குட்டி. அவரு இருக்கிறார் அப்பு. நேத்து ராத்திரி கினவிலே வந்து சிரிச்சுக்கிட்டே நின்னாரு.... எம் புருசன் கையிலே என் கையைப் புடிச்சுக் கொடுத்தாரு.

ஓரி, சின்னக்குட்டி, சின்னையா, முத்தையா, நல்வநக்தும் கண்களில் கண்ணீர் வழிந்தோடுகிறது.



இடைக்காடர்

வைகை யாற்றின் கரையிலே ஒரு தோப்பு. கொடுக்காப் புளி மரங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கின்றன. இதை ஒட்டிய எருப் பொட்டலில் பிரிவு பிரிவாக, பல பசு மந்தைகள் மேய்ந்துகொண் டிருக்கின்றன. உச்சி வேளையாதலால், வெயில் தாங்காத சில பசுக்கள் மர நிழலில் படுத்து அசைபோடுகின்றன. இளங் கன்றுகள் மட்டும் துள்ளி விளையாடிக்கொண் டிருக்கின்றன.

ஒரு வேப்ப மரத்தடியில் இரண்டு பேர் உட்கார்ந்து இருக்கிறார்கள். இவர்களில் சுமார் 25 வயதுடன் கட்டுமஸ்தான தேகத்துடன் காணப்படுபவர்தான் இடைக்காடர். வயது சென்ற கிழவனாகிய மற்றொருவன் கருப்பக் கோனார்.

பல்லவி

நுனிப்பில்லு மேயாதே—பசுவே (நுனிப்)

அனுபல்லவி

நுனிபில்லிலே—கிழங்
இனிப்பமையாதால் (நுனிப்)

பனிப்பில்லு மேயாதே—பசுவே
பனிப்பில்லுப் பகட்டில்—பசி தனியாது (நுனிப்)

தனிப்பில்லு மேயாதே
தனிப்பில்லு மேய்ந்தால்—தரைதரிசாகிடும் (நுனிப்)

நுனிப்பில்லு பனிப்பில்லு தனிப்பில்லு நீக்கியே
நும்பசி தீரவே—பைம்பசும் புல்மேய் (நுனிப்)

சரணம்

கொம்பு படைத்ததற்கே—சண்டையிடாதே
குளம்பு பிளந்ததினால்—குதித்துவிடாதே
வம்பு செய்வாருக்கும்—மகிழ்பாலூட்டியே
மாநிலம் வாழவே—ஆனினமே நீ (நுனிப்)

கிழ. எடைக்காடா, நீ நல்லாத்தாண்டா பாடரே. அந்த வயசுலே எனக்குப் பாட்டுன்னு உசுரு....ஒரு ராகெத்தெ இப்படி எடுத்துவிட்டேன்னு ஊரு கிடுகிடுத்துப்போகும்.

இடை. என்னமோ நல்ல வேளை. நான் அப்போ பொறக்கவில்லை.....ஆமா கறுப்பக் கோனாரே, கஞ்சி கொண்டாந்திருக்கியா, இல்லையா?

கிழ. நான் ஏண்டா அதைச் சொமந்துக்கிட்டு வாரேன். கிளவி யிருக்கிறா, கொண்டுகிட்டு வாரா....

இடை. கறுப்பக் கோனாருக்கு வயசு 50 ஆச்சுன்னாலும் பேச்சாலே ஒன்னும் குறைச்ச லில்லே.

கிழ. வயசுலே கிளவனாயிட்டேன்னு பார்க்காதே. அப்பா மனசுலே கிளவனாகல்லே.

தூரத்தில் தலையில் கஞ்சிக் கலயத்துடன் கிழவி வருகிறது தெரிகிறது.

இடை. அந்தா....உங்க வீட்டுக் கிளவி வருது.

கிழ. [கிண்டலாக] ஏ புள்ளே! உன்னை இடைக்காடன் கிளவிங்கிறான்.

சிகப்பி. பின்னே என்ன குமரியா நான். தலை நரைச்சு, பொடலம் பூவாட்டம் இருக்கு.

கிழ. அடே, நரைத்த தலையா? பூவுதான் வச்சுக்கிட்டு வாரியாக்கும்னு பார்த்தேன்.

சிகப்பி. உனக்கு எப்பவும் இந்தக் கேலி தான். கஞ்சி குடிக்கவல்லியா ?

இந்த சமயத்தில் ஒரு ஞானி பாடிக்கொண்டே வருகிறார்.

சாம்ப சதாசிவ சம்போ சம்போ
சாம்ப சதாசிவ சம்போ

அன்பும் சிவமுமி ரெண்டென்பர் அறிவிலார்.
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்.
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்,
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.

இடை. சாமி வாருங்கள்.

கிழ. சாமியாரே மடியிலே ஏதாவது பாக்கு கீக்கு இருக்குதா ?

ஞானி. மடியிலே கனமில்லேப்பா.

கிழ. சரிதான் வளியிலேயும் பயமில்லே.

ஞானி. ஆமாமா. நல்ல வழியிலே போக ஆரம் பிச்சுட்டுது.

கிழ. ஆமாம். பொண்டாட்டியா புள்ளையா ; வயலா, வரப்பா. சோறு கண்டயிடம் சொர்க்கம். சொர்க்கத்துக்குப் போனாலும் சோத்து மூட்டை யைத்தான் தேடுவே.

சிகப்பி. [அடுத்த மரத்தடியில் சோற்றை இறக்கிவிட்டு, பறிமாறிக்கொண்டே கிழவி கூப்பிடுகிறாள்] ஏய் மச்சான் !

கிழ. இந்தா வந்துட்டேன். [கிழவன் எழுந்திருக் கிறான்.]

இடை. எங்கே எந்திருச்சிட்டே.

கிழ. நான் சன்னாசிகளோடே பேசிக்கிட் டிருந்தா, எங்க கிளவிக்குப் பிடிக்காது வாரேன். [போகிறான்.]

ஞானி. மாயை. கூப்பிட்டுவிட்டது.

இடை. அது கூப்பிடாட்டியும் கிளவன் போயிடுவான். சாமி வெய்யிலிலே நடந்து வந்திருக்கிறீர்களே? கொஞ்சம் பால் சாப்பிடுறீங்களா?

ஞானி. இந்த உச்சி வேளையில் பால் கிடைக்குமா?

இடை. பசு தரும். தாயும் பசிக்கிற நேரமெல்லாம் பால் கொடுப்பாங்க. இதோ தருகிறோன்.

மந்தைப் பக்கம் நோக்கி பசுக்களைப் பாடி அழைக்கிறார்.

பல்லவி

மாநிலமே காக்கும் ஆனினமே—மன
மகிழ்வுடனே இங்கு ஓடிவாரீர் (மாநி)

அனுபல்லவி

வாணிலக் காமதேனுவைப் போலும்
வரந்தரும் இந்திரன் தருவைப் போலும் (மாநி)

சரணம்

தன்னினம் வாழவும் மன்னுயிர் வாழவும்
தன் தாயைப்போலே நாளும் தருவீர்
இன்னமுதே தரும் இரண்டா மன்னையே
இரக்கத்தின் உருவே தரைக்கணிகலான (மாநி)

[பசுக்கூட்டம் ஓடிவருகிறது.]

ஞானி. நீ அழைத்தவுடனே பசுக்கள் ஓடி வருகின்றனவே!

இடை. தாயாய் புள்ளையாய் பழகின இனமுங்க.

ஞானி. மனிதர்களோடும் இப்படித்தானே பழகுகிறாய். அவர்கள் இப்படி நடந்துகொள்ளுகிறார்களா?

இடை. எங்கே சாமி....அவங்களுக்குப் பல யோசனே. அவனவனுக்கும் வவுத்துப்பாடு இருக்கு தில்லே?

ஞானி. மிருகங்களுக்குந்தான் வயிறு இருக்கிறது.

இடை. பத்து பசு இருந்தா அதை மேய்க்க ஒரு இடையன் இருக்கான். அதுகளுக்கு என்ன சாமி கவலே. மனுசனுக்கு அப்படியா?

ஞானி. அப்பா பசுவை மேய்க்க இடையன் இருக்கிறதுபோல், மனிதனே மேய்க்கவும் ஒருவன் இருக்கிருன்.

இடை. அது யாரு சாமி. புதுசா யிருக்கு. அவரு பெயரென்ன?

ஞானி. அவருக்குப் பதி என்று பெயர். உன்னே அவர் காப்பாற்றுவதால் அவரைப் பசுபதி என்று கூப்பிடுவார்கள்.

இடை. அப்படி ஒருத்தர் இருந்தா உலகத்துலே எல்லோரும் சந்தோஷமா யிருக்கணுமே சாமி....சரி ஒருத்தனேடு ஒருத்தன் அடிச்சிகிட்டுக் கஷ்டப்பட்டுக்கிட்டுத்தானே இருக்கிருன்?

ஞானி. கட்டுத்துறையைவிட்டு வெளியே வராத பசு என்னவாகும்?

இடை. உண்ணி புடிச்சுப்போகும்....

ஞானி. இந்தக் கஷ்டத்தை விலக்குவதென்ருல் என்ன செய்ய வேண்டும்?

இடை. தும்பைத் தெரிச்சு விரட்டுணும்.

ஞானி. என்ன சொல்லுகிருய்?

இடை. கவுத்தை அவுத்துவிட்டுடணும்.

ஞானி. அதுதான் தத்துவம். முளையை அடித்து, பசுவை இழுத்துப் பிடித்து, பூமியோடு கட்டிவைத்திருக்கும் அந்தத் தும்பைத்தான் பாசம் என்று சொல்லுகிறூர்கள். அந்தப் பாசம் அறுந்துவிட்டால், பசு, தானுகவே பதியினுடைய அருகில் வரவும், பதியின் அருள் பெற்று வாழவும் வழியுண்டு. ஆசைக் கயிறு அறுகாத பக்ஷத்தில் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டுதா னிருப்பார்கள்.

ஆசையென்னும் பகைமாறிற்-ருண்டவகோனே-இந்த
அண்டமெலாம் கண்டறிவாய்—தாண்டவக்கோனே.
பற்றே பிறப்புண்டாக்கும்—தாண்டவக்கோனே—அதை
பற்ருதறுத்துவிடு தாண்டவக்கோனே.

இடை. சாமி உங்க வாக்கு தேனுட்டமா யிருக்கு. அதைக் கேக்கக் கேக்க என் மனசு இளகுது.

ஞானி. கேட்க்கும்போதே இவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டால், அனுபவத்தில் எவ்வளவு ஆனந்தம் ஏற்படும் என்பதை யோஜித்துப்பார்

இடை. அதையும் சொல்லுங்க சாமி.

ஞானி. தேனைச் சுவைக்கத்தான் முடியும். அந்த இன்பத்தைச் சொல்ல முடியாது.

இடை. சாமி, இந்த விநாடி முதல் என் ஆசையை எல்லாம் விட்டுட்டேன். எப்படியாவது நானும் இந்த ஜனங்களும் ஆனந்தத்தை அடையுனும்னு மட்டும் ஆசையாகஇருக்கு சாமி.

ஞானி.
ஒன்றைப் பிடித்தோற்கே—பசுவே
உண்மை வசப்படுமே.
நின்ற நிலைதனிலே—பசுவே
நேர்மை அறிவாயே.

இந்த ஆசை குற்றமில்லை. ஒருவனைப்பற்றி ஓரகத்திருக்க, ஆசை வைப்பது பாக்கியம். நான் சொல்லும் இந்த மந்திரத்தை ஜெபித்துக் கொண்டேயிரு. உன் சித்தம் அடங்கி நிம்மதி கிடைக்கும்.

இடை. ஓம் நம சிவாய........[என்று காதில் சொல்லுகிறார். இடைக்காடர் உக்ர சித்தத்துடன் சொல்ல ஆரம்பிக்கிறார்.]

ஞானி. சிவாயா நமவென, சித்தம் உருக்கி இதைச் சொல்லிக்கொண்டே யிருக்கட்டும். ஓம் நமசிவாய....ஓம் நமசிவாய....ஓம் நமசிவாய....
ஓம் நமசிவாய....ஓம் நமசிவாய........[ஞானி மறைகிறார்.]

காடெங்கும் ஓம் நமசிவாய என்று பஞ்சாட்சரம் முழங்குகிறது. இடைக்காடர், தன்னை மறந்து உருவேற்றிக் கொண்டே யிருக்கிறார். கட்டைபோல் தரையில் சாய்கிறார். அவரைச் சுற்றி ஒருசோதிப் பிழம்பு தெரிகிறது. இதைக் கண்ட கிழவன் ஓடிவருகிறன்.

கறு. இடைக்காடா! இடைக்காடா!....ஏ முத்தா செல்லா, ராக்கா, ரெங்கா, ஓடியாங்க....ஓடியாங்க.

[இடையர்கள் திசைக்கொருவராக வருகிறார்கள்.]

முத்தன். இடைக்காடா!
ராக்கன். அண்ணே!

கறு. இடைக்காடா!

ராக். என்ன! பேச்சு மூச்சைக் காணம்?....

கறு. அட கொஞ்ச நேரத்துக்கு முன்னலே நல்லா யிருந்தானே அய்யா! ராக்கா, உடம்பைத் தொட்டுப் பாருவே, உசுரு இருக்குதா, இல்லி யான்னு?

ராக். நீதான் தொட்டுப் பாருவே.

கறு. எனக்குப் பொணம்னு பொல்லாப் பயம் அப்பா, நான் தொட மாட்டேன்.

ராக். [உடம்பைத் தொட்டுப் பார்த்து] உடம்பிலே சூடு இருக்குது. உசிரைக் காணமே?

சின். [கறுப்பக்கோனைப் பார்த்து] சூடு மட்டு மில்லே மச்சான்....சுத்தி ஒரே வெளிச்சமாவுல்லே இருக் குது, சோதி கணக்கா?....

கறு. சரி சின்னையா! நீயும் உங்கக்காளும் வீட்டுக்குப் போங்க....ஏ புள்ளே! போ, போ.......

[கறுப்பாயியும் செல்லையாவும் போகிறார்கள்.]

கறு. ஏண்டா சோதிப் புல்லை மிதிச்சிருப் பானே?

ராக். உடம்பு பளபளன்னு இருக்குதே. நாகரத்தினப் பாம்பு கடிச்சிருக்குமோ?

இடைக்காடர் முகத்தில் புன்சிரிப்பு தவழ்கிறது; மெதுவாகச் சொல்லுகிறார்.

இடை. ஓம் நமசிவாயம்.

கறு. [இரைந்து] அ டே டே! எடைக்காடன் பொழச்சுக்கிட்டான் அப்பா.

இடை. [அமரிக்கையாக] நான் இறக்கவில்லை.

கறு. என்ன உளர்ரே?

இடை.

ஆயிரத்தெட்டு அண்டமுங் கண்டேன்;
அந்த அண்டத் துள்ளே நிற்பதும் கண்டேன்.
மாயிறு ஞாலம் நூற்றெட்டும் பார்த்தேன்;
மந்த மனத்துறும் சந்தேகம் தீர்த்தேன்.
தாந்திமித்திமி தந்தக் கோனுரே
தீந்திமித்திமி திந்தக் கோனுரே.

[கடைசி அடி பாடும்போது எழுந்து ஆனந்த தாண்டவம் செய்கிருர்.]

செல். என்ன ஆட்டத்துலே ஆரம்பிச்சுட்டே?

கறு. அட சொல்லிப்பிட்டு ஆடப்பா.

ராக். ஏண்ணே, ஏதாவது காத்துக் கறுப்பு அடிச்சிருக்குமோ. [ஒருவரை யொருவர் நோக்குகிருர்கள்.]

கறு. அட மூஞ்சியும் முகமும் ஏதோ மறுக் கொண்டவன்போலேதா னிருக்கு. ரெங்கா! நீ போய் நாட்டாமைக்காரர் கிட்டச் சொல்லு.

இடை. [ஆனந்தமாக] மருள்கொள்ள வில்லே. அருள்கொண்டேன். ஐயன் ஆடிய ஆனந்தக் கூத்தைக் கண்டேன்.

கறு. [கேலியாக] ஆனந்தக் கூத்தா? சிலம் பரத்துக்குப் போயிருந்தியா? அங்கேதான் நட ராசர் ஆடுவார்னு சொல்லுவாங்க?

இடை. சிதம்பரத்துக்குப் போக வேண்டிய தில்லே.

பல்லவி

சித்தம் சிதம்பரமே செய்கையொழிந்தே
திரைவிலகுங்கால் (சித்)

அனுபல்லவி

சித்தம்பல கவலைக்காளாகாமல்
நீர்மலிவேணியன் தாள் நினைவே கொண்டால் (சித்)

சரணம்

தன்னையறிந்தவர்க்கே சாத்திரமேனோ,
தர்மம் தெரிந்தவர்க்கே தலங்களும் ஏனோ,
உன்னையறிந்துகொண்டால் உபதேசமேனோ,
உண்மையறிந்துவிட்டால், உறவு முறை ஏனோ (சித்)

திருக்கூத்து கண்டேன்.

ராக். ஆடினாரா? ஆடிட்டு என்ன சொன்னரு?

கறு. அவரா.... சொன்னரு.... இடைக்காடா! பாலிலே தண்ணிவிடாதேன்னு.

இடை. பாலில் நீர்கலந்ததுபோல் என்னோடு கலந்துவிடு என்று சொன்னர்.

கறு. ஏண்டா கரண்டகத்துலே கைலாசங் காட்டுறயே என்ன? கேப்பையிலே நெய் ஒளுகுதுன்னு கேக்கறவனுக்குப் புத்தியில்லேன்னு பார்த்தே. ஆளு இருந்த இடத்தைவிட்டு எந்திரிக் கல்லே, நீ எங்கே போய் ஆண்டவனைப் பார்த்தே?

இடை. சிந்தையிலே அன்பு கொண்டேன். சிவம் கண்டேன். என் சித்தத்தை கோயிலாக்கி னேன். அதில் அவன் குடிகொண்டான். ஊனக் கண்ணை மூடினேன். ஞானக் கண்ணை திறந்துவிட் டான். மாயக் கூத்தை மறந்தேன். நேயக் கூத்தை ஆடினன்.

கறு. [உதட்டைப் பிதுக்கி] சரிதான்........பித்துத் தான் பிடிச்சுப்போச்சு....

இடை. நான் பித்தனல்ல, சித்தன்.

கறு. [ஆச்சரியத்தோடு] சித்தனு? யாரு? நீயா?

இடை. ஆம், ஞானியாரைக் கண்டதும் நீ எழுந்து போய்விட்டாய். அவர் எனக்கு உபதேசம் செய்தார்.

கறு. நான் எந்திருச்சிப் போனது நல்லதாப் போச்சு. இல்லாட்டி என்னையு மில்லே....

ராக். உனக்கு அப்படியெல்லாம் ஒண்ணும் வந்துராதண்ணே. [இடைக்காடாரை நோக்கி] எடைக் காட்டு........எடைக்காட்டு........ஆமா, நீங்க........சாமி சித்தர்னு சொல்லுதே....அப்படின்னு வாதம் செய்யத் தெரியுமா?

இடை. அப்படி என்றால்?

ராக். பித்தளையை தங்கமாக்கத் தெரியுமான்னு....

இடை. ஓ, இதுவா? எங்கே? நீ சோறு வைத்திருக்கும் சட்டியை எடு. தொட்டுப் பார்ப்போம்.

ராக். [சட்டியை எடுத்து அவரிடம் நீட்டுகிறான். அவர் தொடுமுன்பு சட்டியை இழுத்துக்கொள்கிறான்] அது....அது வேண்டாம்....திங்கிற சோறு தங்கமாய் போச்சுன்னு எதைத் திங்கறது?

இடை. ராக்கப்பா! ஏன் பயப்படுகிறாய்? இங்கே வா. [என்று அன்போடு அவன் பக்கம் நெருங்குகிறார்.]

ராக். [விலகி விலகிப் போய்க்கொண்டே] அட தொடாதே யப்பா, என்னை. என்னைத் தங்கமாக்கிப் பிட்டியானு, நான் எப்படி சாப்பிடுகிறது. சோத்தையும் தொட வேண்டாம் சாப்பிடுகிறவனையும் தொட வேண்டாம். என் மயிலைக் காளை கழுத்திலே இருக்கிற மணிக் கோவையை மட்டும் தொடுங்க

பாப்பம். ப....ப....ப [மாட்டை இழுத்துக்கொண்டு வருகிறான் இடைக்காடர் மாட்டுக்குப் பக்கத்தில் வருகிறார்.]

ராக். மணியை மட்டும் தொடுங்க....கழுத்தை தொட்டுராமே.

இடை. ஓம் நமசிவாய....[என்று கூறிக்கொண்டே மணியைத் தொடுகிறார்.]

ராக்கன் திடுக்கிடுகிறான். கூடி இருந்தவர்கள் எல்லோரும் திகைக்கிறார்கள். வெண்கல மணி தங்கமாக மாறி பத்தரை மாற்றுப் பசும்பொன்னைப் பிரகாசிக்கிறது.

ராக். அடே....சத்தியமா....பித்தளை பளுத்து தங்கமாயிருச்சே....இடைக்காட்டு சித்தரே! நான் உங்களை சோதனை பண்ணினது பிசகு. எங்கள் பிழையைப் பொறுக்கனும். உங்க பேர் விளங்க ராப்பிலே அந்த மணி மட்டும் என்னைக்கும் தங்கமா யிருக்கணும். நான் வர்ரேன். த....த....த....[என்று மாட்டை யோட்டிக்கொண்டே ஊருக்குள்ளே ஓடுகிறான்]

கறு. [அதைப் பார்த்துக் கொண்டே யிருந்துவிட்டு] இந்தப் பயலுகளெல்லாம் நன்னிகெட்ட பயலுகளப்பா....ஒரு கோவை மணியைத் தங்கமாக்கிக் கொடுத்தியே, அந்த விசுவாசம் இருக்குமா அவனுக்கு....ஓடிவிட்டான் பாரு.

இடை. கிழவனாரே உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?

கறு. எனக்கென்ன வேணும்....காடு வாவாங்குது. வீடு போபோங்குது. ஆனா....சொன்னா ஒண்ணும் கிண்டல் பண்ணமாட்டியே?

இடை. சும்மா சொல்லுங்கள். உங்களுக்கெல்லாம் சந்தோஷம் உண்டாக்குவதற்காகவே நான் உபதேசம் பெற்றேன்.

கறு. இல்லே....இந்தாப் பாரு....எனக்கும் வயசு 50—52 ஆகுது. ஏதோ பழமும் தின்னு கொட்டையும் போட்டுட்டேன். நாலு புள்ளேயாச்சு, குட்டியாச்சு....அந்தப் பொம்பளே, கிளவியும் ஆண்டனுபவிச்சு பஞ்சுப் பொட்டி கணக்கா ஆயிட்டா....இருந்தாலும் பாரு....இந்த மனசு இருக்குதே....

இடை. என்ன ?

கறு. உன்னலே முடிஞ்சிச்சுன்ன என்னே.... ஒரு பத்து வயசு, இருபது, முப்பது வயசு இளமையாய்

இடை. இவ்வளவுதானே .... ஓம் நமசிவாயம் கறுப்பக் கோனரே! இருபத்திரெண்டு வயதுள்ள வாலிபன் போலாவீர்....[என்று தொடுகிருர்.]

கறுப்பக் கோனரின் தலே நரைமயிர்கள் கறுகறு என்று சுருட்டை சுருட்டையாக மாறுகின்றன. முகத்திலுள்ள சுருக்கங்கள் மறைகின்றன. கூன் நிமிருகிறது. உடல் கட்டு மஸ்தடைகிறது. ஆளே மாறிவிடுகிறன். தன் உடம்பை ஆச்சரியத்தோடு பார்க்கிறன்.

கறு. அடே, என் உடம்புதான ? குப்புனு மாறிப் போச்சே ?

என்று சொல்லிக்கொண்டே வீட்டை நோக்கித் குதித்துக் குதித்து ஓடுகிறன்.

இடை. கறுப்பக்கோன், கறுப்பக்கோன் எங்கே ஓடுகிறீர் ?

கறு. [திரும்பிக்கூடப் பாராமல்] வீட்டுக்கு.

இடை. அவனுவது கும்பிட்டுவிட்டுச் சென்ருன். இவர் சொல்லிக்கொள்ளவே இல்லை.

கிராமத்துச் சாலையில், தங்கமணியுள்ள மாட்டை ஓட்டிக் கொண்டு ராக்கன் போகிறன். அவனைக் கூப்பிட்டுக்கொண்டே அவனுக்குப் பின்னடி கறுப்பக்கோன் ஓடி வருகிறன்.

கறுப். ராக்கா! ராக்கா!!

ராக். [ராக்கன் திரும்பி, கூப்பிடும் ஆளைப் பார்த்து விட்டு, புது மனிதருடன் பேசுவதுபோல்] யா ர ப் பா து. பேரைச் சொல்லிக் கூப்பிடுறது?

கறு. [சிரித்து] அட நாந்தாண்டா கறுப்பக் கோனுரு. எடக்காடன் என்னையும் எளமையாக்கிப் பிட்டாம்பா.

ராக். [கூர்ந்து கவனித்துவிட்டு] அதுதானே பாத் தேன். சாடை ஒண்ணுயிருக்கேன்னு. சரிதான் போ....இனிச் சோத்துக்குக் கேடுதான்.

கறு. [யோசித்து] ராக்கா! எனக்கு ஒரு உவ காரம் செய்யணுமே?

ராக். என்ன?

கறு. உனக்கே என்னை அடையாளம் தெரி யல்லையே! ஒரு சமயம் எங்கவீட்டுப் பொம்பளைக்கு என்னை அடையாளம் தெரியுதோ யில்லையோ. நீயும்கூட வந்து........

ராக். அதுக்காக என்ன, மாட்டை வீட்டுக்கு ஓட்டிவிட்டுட்டு வரேன். [தன் வீட்டு கொல்லைக்குள் மாட்டை ஓட்டிவிட்டு, கறுப்பக் கோனுருடன் சேர்ந்து நடக்கிறுன்.]

கறுப்பக்கோனர் வீடு.—ஒரு கூரைவீடு, உள்ளே ஒரு கூடம். அதில் பின்புறக் கதவு ஒன்று இருக்கிறது. கோனர் மனைவி சிகப்பி ஏதோ வீட்டு வேலை செய்துகொண் டிருக்கிறள். அவள் மகள் காளிக்குட்டி என்னும் வயது வந்த பெண் கொட்டாங்கச்சியை உடைத்து பொட்டுத்தீத்திக் கொண் டிருக்கிறள்.

சிக. எங்கே அந்தக் கெளவனை இன்னும் காணும்! கடைக்கு கிடைக்குப் போயிருக்குமா? காளிக்குட்டி தெருக் கதவை அடச்சுத் தாப்பாப் போட்டுடியா? இருட்டிப் போச்சே.

காளி. வெளக்கைக்கூடப் பொறுத்திவச்சுட் டேன். [கதவு தட்டும் சப்தம் கேட்கிறது.]

சிக. யாரது?

கறு. அட நான்தான்.

சி. [குரலைத் தெரிந்துகொள்ள முடியாமல்] அவரு வீட் டிலே யில்லை. அப்புறம் வாங்க.

கறு. ஏ புள்ளே....

சி. அட யாருங்கறேன், மானம் மருவாதி யில் லாமப் பேசிக்கிட்டு.

கறு. அடி நான்தான்டி, கதவைத் தொற.... கெளட்டுப்பய மகளே. [கிளவி பயப்படுகிறுள்.]

சி. அட ஆம்பிளே வீட்டிலே யில்லேன்னு இப்படியா அக்கிருமம். [ரகஸ்யமாக] காளிக்குட்டி! காளிக்குட்டி!! நீ உள்ளே போயிடு. டே தம்பி கொல்லே வழியா ஏறிக்குதிச்சு ஓடிப்போயி, ஒம்மாமன் செல்லனைக் கையோடு கூட்டிக் கிட்டுவா.

கறு. [கோபத்தோடு] ஏ செகப்பி கதவைத் தொறக்கிறியா இல்லியா?

சி. [நடுங்கி] காளிக்குட்டி! அந்த ஒரலே எடுத்து கதவுக்கு முன்னுலே முட்டுக்குடு.

கறு. [இரைந்து] அட கூப்பிட்டுக்கிட்டே யிருக்கேன், கதவைத் தொறக்கிறியா இல்லியா?

செல். [கொல்லேக் கதவைத் திறந்துகொண்டு தம்பி செல்லேயா வருகிருன்.] என்ன அக்கா?

சி. அட கெளவன் வயலுக்குப் போயிருக்குது யாரோ காலிப் பயவாசல்லே வந்து நின்னுக்கிட்டு....

செல். ஹா யாரடாவன் [என்று ஆத்திரத்துடன் கதவைத் திறக்கிருன்.]

வெளியே நிற்கும் வாலிபக் கறுப்பக்கோனேயும் ராக்கனேயும் பார்க்கிறன். உள்ளம் மாறி இளமை பெற்றிருக்கும் கறுப்பக்கோனே அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லே.

கறு. என்ன மச்சான், இவ்வளவு நேரம் கதவு திறக்க?

செல். டேய், யாரைப் பார்த்து மச்சாங்கிறே?

கறு. சர்த்தாண்டா....ஒங்கக்கா புருஷன் ஒன்னே எப்படிக் கூப்பிடுவான்!

செல். அறைஞ்சேன்னு செகுள் பேந்து போயிரும் பேந்து....

கறு. சரிதான் சரிதான். ராக்கா நீ சொல்லு....

ராக். ஆமாமா. செல்லா ஒம் மச்சான் கறுப்பக் கோனருதாம்பா இவரு.

செல். நீயுமா பொய் சாட்சி சொல்லவந்தே....

கறு. டேய் செல்லா என்ன அவன்மேலே போய்ப் பாயறே.... [என்று சொல்லிக்கொண்டே உள்ளே போகிருன்.]

செல். அடக்கு வாயை. இனி ஒரு படி தாண்டினு மொழங்காலைப் பேத்துப்பிடுவேன். பேசிக்கிட்டே உள்ளே போறியே....நில்லு.

கறு. [மனைவியிடம்] ஏன் புள்ளே....என்னை அடையாளமா தெரியல்லே?

ராக். ஏ காளிக்குட்டி, உனக்குமா உங்கப்பனைத் தெரியல்லே.

செல். சொல்லிக்கிட்டே இருக்கேன், பொம்பிளை யிருக்கிற வீட்டிலே வந்து காலித்தனமா பண்றே....[என்று கறுப்பக்கோனை ஓங்கி அடிக்கிருன். இரண்டு மூன்று அடிகள் விழுகின்றன.]

கறு. டேய், செல்லா! செல்லா!! இரு இரு அடிக்காதே. ஏம்புள்ளே நெசமாவே என்னைத் தெரியவில்லையா? மகளே உனக்குக் கூடவா தெரியலே. எடைக்காடன் என்னை எளமையா ஆக்கிவிட்டான். வாலிபம் திருப்பிருச் சுன்னும் கட்டின பொண்டாட்டிக்கு மூகசாடை கூடவா தெரியாமெப் போகும். [என்று அழுகிருன்.]

சிக. செல்லா, பேசாததெல்லாம் பேசுருன். என்ன பார்த்துக்கிட்டே சும்மா நிக்கிறியே, புடுச்சு தூணிலே கட்டப்பா....

செல். பின்னே என்ன விட்டுடவா போறேன்? அடே கோவிந்தா! ஏழுமலே! [தூரத்தில் வைக்கோல் போர்மேல் வேலைபார்த்த குடியானவர்கள் ஓடிவருகிருர்கள்.]

இவனைப் புடிச்சுக் கட்டுங்கடா....புளிய மரத்திலே ஏறி ரெண்டு மிளாரு ஒடிச்சாங்க.

இடைக்காட்டூரில் உள்ள கிராமப் பொதுச் சாவடி. ஊர் பெரிய தனக்காரர்கள் எல்லோரும் கூடி இருக்கிறார்கள். நடுவிலே நாட்டாண்மைக்காரர் உட்கார்ந்திருக்கிறார். அவருக்கு வயது 45 இருக்கும். நல்ல வலுவுள்ள தேகம். அழகிய மீசை. படிப்பால் ஏற்பட்ட களை இல்லாவிட்டாலும் அறிவுக் களை ததும்பும் முகம். அவர் முகத்தில் துழப்பமான குறிகள் தென்படுகின்றன. அவருக் கெதிரில் ரெங்கன் என்ற ஒருவன் கையைக் கட்டிக்கொண்டு நிற்கிறான். நாட்டாமைக் காரர் ஊராரைப் பார்த்து பேசுகிறார்.

நாட். ஊருக்கெல்லாம் ஒரு வார்த்தை. ஏழுமலை கோனார் மகன் இடைக்காடனுக்குப் பயித்தியம் பிடிச்சுப் போச்சாம். அவன் சொத்துக்களை ஒரு ஒழுங்கு பண்ணியாகணும். அதுக்காகத்தான் ஊரைக் கூட்டம் கூட்டியிருக்கு.

இடை. [இதைக் கேட்டுக்கொண்டே வந்து] நாட்டாமைக்காரரே, என்னைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். எனக்குப் பயித்தியமில்லை.

நாட். [அலட்சியமாக] அதை நீ சொன்னா ஒப்புக்க முடியுமா? ஊராருல்லே சொல்லணும்?

இடை. சொத்துக்குடையவன் நான். என் சொத்துக்களை நீங்கள் காப்பாற்ற வேண்டியதில்லை.

நாட். சொந்த புத்தியோட பேசறவன் இப்படிப் பேசுவானா? அந்தக் குடும்பத்திலே நீ நேத்தைக்குப் பொறந்தவன். நாளைக்குப் போறவன். எப்பவும்

கூடவே யிருந்துகொண்டு செலுத்தறவங்க நாங் களில்ல? இந்த இடைக்காட்டூர் கிராமம் ஒன்பது கரையிலே ஒரு கரை ஒண்ணுமில்லாமெப் போச் சுன்ஞ ஊருக்கில்லே அவுமானம்....

இடை. நாட்டாமைக்காரரே! நான் ஞானி யாகிவிட்டேன்; என்னல் ஊருக்கு மதிப்பு உண்டு.

நாட். அப்படி ஒண்ணுமில்லே. நீ குடியும் குடித்தனமுமா பத்துப் புள்ளே குட்டிகளோடு இருந் தாத்தான் ஊருக்கு உபயோகம்.

இடை. எந்த நேரமும் மாய்கையில் உழன்று உண்பதும் உறங்குவதுமாக இருக்கும் இல்வாழ்க் கையைவிட ஞான மார்க்கம் சிறந்த தல்லவா?

நாட். அப்படி இருந்தா....சாமி எல்லோரையும் சன்னியாசியாகவே படைச்சிருப்பாருல்லே? உலகத் துலே புறந்துட்டா உலகத்து வழக்கத்தை ஒட்டித் தான் நடக்கணும். அவன் தான் மனுசன். மற்றவன் கள் எல்லாம் உலகத்துக்கு ஆகாதவன்கள்.

இடை. நான் ஆசையை அறுத்துவிட்டேன். என் சொத்துக்களேத் துறந்துவிட்டேன். உலகத் தைப்பற்றி எனக்குக் கவலே யில்லே.

நாட். அப்படியாஞ உன்னேப்பத்தியும் எங்க ளுக்குக் கவலே யில்லே. எங்கேயோ உபதேசம் வாங் கிக்கிட்டாணும் ஆடரான். ஸ்ரீ ராமனேயும் கிருஷ்ண னேயும் நாங்க ஏன் கும்பிடுறம். தெய்வப் பொறப் புங்கறத்துக்காகவா கும்பிடுறம்.

இடை. பின் எதற்காகக் கும்பிடுகிறீர்கள்?

நாட். தெய்வமே வந்து புறந்துங்கூட தன் சக்தியை எல்லாம் சுருட்டிவச்சிக்கிட்டு, கடேசிவரை

மனுசனுட்டமா நடந்துக்கிட்டதுக்காகத்தான் கும்பிடுறம்....

இடை. இதற்குச் சக்தியே வேண்டாமே.... நானும் உங்களைப்போல் பாஷாண்டியாய் இருந்திருக்கலாமே?

ரெங். அடே, உன் சக்தி என்ன செய்யும்? உழுகாமே நிலம் விளையுமா? மழை இல்லாமே வைகை ஆத்துலே தண்ணிவந்துடுமா?

இடை. வேண்டுமானுல் இதோ வரவழைக்கிறேன். உங்கள் துன்பத்தைப் போக்குகிறேன். உங்கள் ஏழ்மையை விரட்டுகிறேன். உங்கள் பிணிகளை விலக்குகிறேன். உங்களுக்கு எது வேண்டுமென்ருலும் செய்கிறேன். களை எடாமல் ஜலம் விடாமல் கதிர் ஒரு முழம் காண வேண்டுமா? கண்ணுக்கினிய காட்சிகள் வேண்டுமா? வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் கொடுக்கிறேன். நீங்கள் எப்படியாவது சந்தோஷமாக இருங்கள். அது போதும்.

இந்த சமயத்தில் ராக்கன் நடல் தெறிக்க ஓடிவந்து அலறுகிறன்.

ராக். நாட்டாமைக்காரரே, ஊராரே,.......... போச்சு. எம்பிட்டு மயிலைக் காளை போச்சுங்க.

நாட். [அதிகாரத்தோடு] மயிலைக் காளையா?

ராக். ஆமாங்க, கழுத்திலே தங்க சலங்கை போட்டிருந்தேன். யாரோ மாட்டை வெட்டிப் போட்டுட்டு, மணியைக் கொண்டுபோயிட்டான்.

கூட்டம் முழுதும் அய்யோ சு, சு, என்று பரிதாபப் படுகிறது. இடைக்காடர் ராக்கன் அருகில் வருகிறர்.

இடை. அப்பனே, கவலைப்படாதே. அந்த மாடு போனாலென்ன? உனக்கு ஆயிரம் மாடுகள் உண்டாக்கித் தருகிறேன்.

ராக். எத்தனை மாடு வந்தாலும் என் மயிலைக் காளை ஆகுமா?

நாட். [எழுந்து அக்கரையோடு] ராக்கா, உன் மாட்டுக்குத் தங்கச் சலங்கை ஏது?

ராக். இவரு, இடைக்காடர் தொட்டாருங்க, தங்கமாச்சு.

நாட். நிசமாவா? இடைக்காடரே, இதற்கென்ன சொல்கிறீர்கள்?

இடை. எதற்கு?

நாட். அந்த மாடு வெட்டுப்பட்டதற்குக் காரணம் யார்?

இடை. அதன் விதி.

நாட். [கோபத்தோடு] விதி நேத்துவரையிலே ஒண்ணும் செய்யல்லியே? சும்மா கிடந்த மாட்டுக்கு தங்கமணி போடப் போக மணியும் போச்சு, மாடும் போச்சு....ஊரிலே ஒரு மனுசன் திருடனாகியிருக்கான். ஒருவன் நஷ்டப்பட் டிருக்கான். ஊர் கூட்டத்துக்கு ஒரு விசாரணை, இவ்வளவும் யாராலே?

இந்த சமயத்தில் எடைக்காடரே, எடைக்காடரே, என்று கூப்பிடும் குரல் கேட்கிறது. புது வாலிபன் கறுப்பக் கோனார் ஓடி வருகிறார்.

நாட். யாரப்பா அது?

கறு. நாட்டாமைக்காரரே, உங்களுக்கும் கூட அடையாளம் தெரியல்லியா? கோடிவீட்டுக் கறுப்பக் கோனுருல்லே?

நாட். கறுப்பனு, அவன் மகனு?

கறு. கறுப்பந்தாண்ணே....கறுப்பனே தான். இடைக்காடர்கிட்டே இளமை வாங்கிக்கிட்டேன். வீட்டிலே பொம்பிளே ஒண்டவிடம் மாட்டங்கறா.... மச்சினன் அடிச்சுப் போட்டுட்டான். செல்லமா வளத்த புள்ளேக ளெல்லாம் பார்க்கப் பயப்படுது. என்னே, எப்படியாச்சும் பழைய கறுப்பனு ஆக்கிவிட்டுடச் சொல்லுங்க. உங்களுக்குக் கோடி புண்ணியம்.

நாட். இடைக்காடரே, இது உண்மைதானு?

இடை. ஆமாம்.

நாட். வைராவி....அந்த அரிவாளே எடுத்துக்கிட்டுவா. இடைக்காடரே கொஞ்சம் உள்ளே வாங்க....நாங்க கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருக்கம். யாரும் உள்ளே வாராதீங்க.

உள் கதவைத் திறந்துகொண்டு இருவரும் உள்ளே செல்லுகிறார்கள். நாட்டாமைக்காரர் கதவைத் தாளிடுகிறார்.

நாட். இடைக்காடரே, இந்தாங்க, அரிவாளேப் புடிங்க; உங்க கையாலே என்னேக் கொன்னுடுங்க.

இடை. ஏன் அப்பா?

நாட். நீங்க இருக்கிற ஊரிலே மனுசனுலே நாட்டாமை பாக்க முடியாது.

இடை. விஷயத்தை விபரமாய்ச் சொல்லுங்கள்.

நாட். நீங்க மனிச வர்க்கத்துக்கே நல்லது செய்யல்லே. உங்களாலே ஊருக்கே கெடுதல்.

இடை. எப்படி ?

நாட். நீங்க தொட்டது தங்கமாகுது....அதனாலே தங்கத்துக்கு மதிப்புக் கெட்டுப்போகுது. நெத்தி வேர்வை நிலத்தில் விழ உழச்சுக் காசு தேடினால்தான் தங்கத்தைக் கண்ணாலே காண முடிகிறது. அந்த ஆசையால்தான் மனுசன் உழைக்கிறான். ஆனால் இனிமே ஊராரெல்லாம் உங்களையே தொட்டுக்கிட்டே திரியும்.

இடை. அதனால் எப்படி ஊருக்குக் கெடுதல் உண்டாகும்.

நாட். இந்தாப் பாருங்க. இந்த சமுதாயம் இன்னைக்கி நேத்தைக்கி வந்ததில்லே. பண்டைய காலந்தொட்டு மனுசன் சக்தியை அளவெடுத்து ஆளுக்குத் தகுந்த வேலையைக் கொடுத்து, ஊர்கூடித் தேரிழுக்கிறமாதிரி உலகம் நடந்துக்கிட்டு வருது. உங்களைப்போல பத்துப் பேர் ஆரம்பிச்சா கட்டுக் கோப்புக் குலஞ்சு போகும். வெள்ளாமை விளைச்சல் இல்லாமப் போகும். அவனவன் பொழப்புலே அவனவனுக்கு அக்கரை இருக்காது. உழவன் தொழில் மறந்தா உலகம் பட்டினி கிடந்துபோகும்.

இடை. பிறகு என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறீர்கள் ?

நாட். மறுபடியும் மண் வெட்டியைத் தூக்கித் தோளிலே போடுங்க. வேட்டியை வரிஞ்சு கட்டிக்கிட்டு வெள்ளாமை விளைச்சலைப் பாருங்க. பொட்டிப் பாம்புபோலே அடங்கி இருங்க. பாம்புக்கு விஷமும்

படமும் கொடுத்தது பயமுறுத்தத்தான். கடிக்கிறதுக்காக இல்லே.

இடை. இனி என் மனம் அதில் நாடாது.

நாட். அப்படியானு இந்த ஊரை வாழ்த்திப்பிட்டு, எங்கேயாவது போயிடுங்க. இந்த ஊரிலே தலே காட்டாதீங்க.

இடை. சரி, அப்படியே செய்கிறேன்.

அடுத்த நாள் பகல், இடைக் காட்டூரை அடுத்த காடு. இடைக்காடர் மனவருத்தத்துடன் தள்ளாடி நடந்து வருகிறார் அவர் வாய் ஒரு பாட்டை முணுகிறது.

இடை.

இராகம் சாமா

பல்லவி

உள்ளம் உருகியே நல்லது செய்தேன்
ஊரும் பகையாச்சு - சொந்த
உறவும் பகையாச்சு

அனுபல்லவி

வள்ளம் நிறையவே அமுதை வட்டித்தே
வாயினில் ஊட்டியும்
பேயென வைதார் (உள்ளம்)

சரணம்

நன்மை செய்யாதாரை நாயென்பார்;
நலம்பல செய்தால் பேயென்பார்.
தின்மை செய்தாலும் தீயவனென்பார்
திறமழிந்திருந்தால் மரமிவனென்பார் (உள்ளம்)

திடீரென்று ஞானியார் பிரசன்னமாகிறார்.

ஞானி. இடைக்காடா! ஏன் வருந்துகிறாய்?

இடை. குருநாதா....வணங்குகிறேன்.

ஞானி. உம்....முதலில் வருத்தம். பிறகு வணக்கம். ஜென்ம வாஸனை விடவில்லை போலிருக்கிறதே? எங்கு செல்லுகிறாய்?

இடை. ஊருக்கு உபகாரம் செய்தேன், ஊர் பகையாகிவிட்டது. வேற்றூர்களுக்குப் போகிறேன்.

ஞானி. அந்த ஊரும் பகையாகிவிட்டால்?

இடை. அடுத்த ஊருக்குப் போவேன்.

ஞானி. எவ்வளவு ஜென்மங்கள்தான் எடுப்பாய். உம்....உன் யோகசாதனம் எவ்வளவி லிருக்கிறது?

இடை. எல்லாம் அடைந்துவிட்டேன். அஷ்டமா சித்திகளும் நினைத்த மாத்திரத்தில் செய்ய முடியும். நீர்மேல் நடக்கலாம்.

ஞானி. நடந்து பார்த்தாயா?

இடை. ஆஹா........

ஞானி. இதற்குப் பகவானைக் கும்பிட்டுத் தவம் கிடந்திருக்க வேண்டாமே....ஓடக்காரனைக் கும்பிட்டால் உன்னை அக்கரை சேர்த்திருப்பானே. உம்....இன்னும் என்ன செய்தாய்?

இடை. தராவைத் தங்கமாக்கினேன். மூப்பை இளமையாக்கினேன்.

ஞானி. இடைக்காடா, உதிர்ந்த பழங்கள்தான் உலகத்து மரங்கள். ஈச்வரனது சிருஷ்டிகளே அழிந்துவிடும்போது நீ சிருஷ்டித்தவைகள் அழியாமல் இருந்துவிடப் போகின்றனவா? உம் மாய்கையில் விழுந்துவிட்டாயே?

இடை. இது மாய்கையா?

ஞானி. ஆம். ஈசனை அடையத் தவம் செய்தாய். இந்தச் சித்திகள் கிடைத்தன. சித்து விளையாட ஆரம்பித்தாய். ஈசனை மறந்துவிட்டாய்.

இடை. உலகத்து மக்களுக்குள் சண்டை சச்சரவுகள் இல்லாமல் வாழ்வதற்காக அவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்க ஆரம்பித்தேன். அது பிசகா?

ஞானி. எல்லோருக்கும் உன்னல் கொடுக்க முடியாது. எல்லாவற்றையும் கொடுக்க ஒருவன் முன்வந்தால் வாங்குபவருக்கு ஆசை குறையவே குறையாது. குழந்தை அழுவது சகஜம்; அளவு தெரிந்து அமுதூட்ட அன்னைக்குத்தான் தெரியும். அதை ஈச்வரன் சரிவரச்செய்துகொண் டிருக்கிறார். உலகத்தில் எல்லாக் காரியங்களும் அவருடைய ஆக்ஞைப் பிரகாரமே நடக்கின்றன. அதில் நீ தலையிடாதே.

இடை. அப்படியானல் இது தவம் செய்து பிரயோஜனமில்லையா?

ஞானி. ஏழை பணிவுடன் இருப்பது ஆச்சரியமில்லை. பணக்காரனை பிறகு பணிவுடனிருப்பது தான் ஆச்சரியம். உன் சக்திகளை அடக்கிக்கொள், அடங்கியிரு, சும்மாயிருந்து சுகம் பெறுவாய்.

இடை. உண்மைதான் சுவாமி....அடிமைக்கு என்ன உத்தரவு.

ஞானி. கடவுள் உன்னை மனிதனைகப் படைத்திருக்கிறார். மனிதனுக்குரிய கடமையைச் செய். சிக்கிமுக்கிக் கல்லுக்குள் அக்கினி இருப்பதுபோல்

உன் சக்திகளை அடக்கி வைத்துக்கொண்டு, உலகத்தோடு ஒட்டி வாழ். அள்ளிக்கொடுத்து உலகத்தைக் குழப்பிவிடாதே. அளந்து கொடு. மனிதர்களின் ஆசையை வளர்க்காதே; அறிவை வளர்க்கப் பாடுபடு.

இடை. சித்தம்.

ஞானி. இடைக்காடரே! ஊரில் ஒரு பஞ்சம் உண்டாகப் போகிறது. அது விஷயத்தில் உமது உதவி ஊருக்குத் தேவையாக இருக்கும். இப்பொழுது முதலே தயாராக இருந்துகொள்ளும்.

இடை. எப்படி உதவி செய்வது?

ஞானி. மனிதன் தன்னுடைய சக்தியைக் கொண்டு எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்துகொண்டிரும். அற்புதத்தால் வேண்டாம்; அறிவை வளர்க்க வேண்டும்.

இடைக்காடர் ஞானியாரின் காலில் விழுந்து பணிகிறார். அவர் கீழே கிடக்கும்பொழுது ஞானியார் ஆகிய ஞானரூபன் இடைக்காடர் உடலுக்குள் பிரவேசித்து கலந்து விடுகிறார். பல வருஷங்களுக்குப் பிறகு இடைக்காட்டூரில் பொதுச் சாவடியில் ஊரார் கூடியிருக்கிறார்கள்.

நாட். இடைக்காடர் ஊருக்குத் திரும்பி வந்து விட்டாராமே?

செல். அவர் வந்து ரெண்டு வருசம் ஆச்சே. இப்போ ஆள் ரொம்ப கெட்டிக்காரனாய்ப் போயிட்டான். ஆயிரம் ஆட்டுக்கு மேலே இருக்குது. ஊரு ஊராப் போய் கிடைபோடறான். ஒரு ராத்திரி கிடைக்கு ஆறு மரக்கா வரகு கூலி வாங்கறானாம்.

மாசத்திலே வரகு மட்டும் முப்பது நாப்பது கலம் கிடைக்கும்போலிருக்குது.

நாட். பெண்டாட்டியா புள்ளையா, இம்புட்டு சம்பாதிச்சு என்ன பண்ணப்போறன்.

முத். அதுதான் வீடு கட்டுறனே.

ரெங். வீடு கட்டல்லியடா....ஒரு காணியை வளைச்சு ஏதோ கோவில் சுவராட்டம் ஒரு மதில் எடுத்திருக்கிறன்.

செல். செவுருகூட மத்த செவுராட்டமா இல்லையே. அரக்கு மாளிகை செவுராட்டம், அப்பி அப்பியில்லே இருக்குது.

முத். அண்ணே அவுரு வீட்டு ஆடுகள் எல்லாம் கூட இரை திங்கறதில்லேயாம்.

ரெங். தண்ணிங்கூட ஆத்துலே குளத்துலே குடிக்கிறதில்லை. கிழக் கரையிலே போய் கடல் தண்ணியைக் குடிச்சிட்டு வருது.

செல். கடல் தண்ணியா? உப்புக் கரிச்சுக் கிடக்குமே?

ரெங். ஞானியார் வீட்டு ஆடுகள் இல்லே. உப்புத் தண்ணியைக் குடிக்குது. எருக்கம் இலையை யும் விராலி இலையையும் திங்குது.

செல். எருக்கும் விராலியும் என்னைக்கும் கிடைக்கும்னு பார்த்தானே.

நாட். ஆமா இப்போ இருக்கிறது மாதிரி இன்னும் ரெண்டு வருஷத்துக்கு மழை இல்லாமப் போச்சுனு வச்சிக்க, எருக்கும் விராலியும்தான் இருக்கும். கம்மாய் கால் எல்லாம் வறண்டுபோகும். கடல் தண்ணீர் தான் இருக்கும்.

அந்த இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. ஊரில் பஞ்சம் வந்துவிட்டது. ஜனங்கள் உணவுக்கும் உடைக்கும் திண்டாட ஆரம்பித்தார்கள். எல்லோரும் கூட்டமாகக் கூடி இடைக்காடரின் வீடு தேடிச் சென்றார்கள்.

இடைக்காடர் கோட்டை, சுமார் நாலு குறுக்கம் அளவுக்கு மஞ்சு விரட்டுப் பொட்டலில் உள்ள மாட்டுத் தொழுவத்தைப் போல் ஒரு கோட்டை. அதில் குறுக்கும் நெடுக்குமாக சுவர் எடுத்து பல அங்கணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு அங்கணத்திலும் இருபது ஆடுகள் அடைக்கலாம். ஊரில் உள்ள ஆடு மாடுகளெல்லாம் மழையின்மையால் துடிக்கத் தண்ணீரும் இன்றி இறந்துவிட்டன. ஆனல், இடைக்காடர் வீட்டு ஆடுகள் மட்டும் கொழுத்துப்பெருத்து இருக்கின்றன. சுவரின் உயரம் கைமுழத்துக்கு மூன்று முழ உயரம்தான் இருக்கும். என்றலும் சுவர் முழுதும் மண் அள்ளி அள்ளி அப்பியிருப்பதால் துப்பல் துப்பலாக இருக்கிறது. கோட்டை வாசலில் ஒரு காவல் பரண். அதன்மேல் இடைக்காடர் ஒரு கறுப்பு கம்பளியைப் போர்த்திக்கொண்டு உட்கார்ந்திருக்கிறர். அவர் முகத்தில் திவ்ய தேஜஸ் தவழுகிறது. மார்புவரை நீண்ட தாடி தொங்குகிறது. கையிலே ஆடுமேய்க்கும் கோல் வைத்திருக்கிறர். கண்கள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. நாட்டாண்மைக்காரன் அவரிடம் வருகிறன்.

நாட். இடைக்காடரே, ஒரு காலத்திலே நானே உங்களை ஊரைவிட்டோடச் செய்தேன். இன்னைக்கு நானே உங்ககிட்ட வந்து கேட்டுக்கிறேன். இந்த ஊரை நீங்கள்தான் காப்பாத்தி யாகணும்.

இடை. அய்யா....என் கையில் என்ன இருக்கிறது. ஈசன் சித்தத்தை யாரால் மீற முடியும்?

நாட். ஊரெல்லாம் பசிக் கொடுமை, கட்ட வேட்டி கிடையாது. ரெண்டு வருசமா கால மழையில்லாமல் ஊரே கஷ்டப்படுது. எப்படியாவது ஏழை பாழைகள் பசியைத் தீர்த்து ஊருக்கு நல்லது செய்யணும்.

இடை. [யோசித்து] ஊராருக்கெல்லாம் ஒரு நாளைக்கு ஒரு வேளை கஞ்சி இங்கே கிடைக்கும்.

கூட்டம். அது போதும். நாங்க அன்னங் கண்டு ஆறு மாசமாச்சு அய்யா....

இடை. அன்பர்களே! எல்லோரும் ஒரு குரலாகக் கூறும் இந்த ஒற்றுமை உங்களுக்குள் எப்பொழுதும் இருந்திருந்தால், இன்று இப் பஞ்சமே வந்திருக்காது.

செல். நாங்களா மாட்டம்னேம். ஊர்ப் பயக ஒத்துக்கிட்டாத்தானே.

இடை. இப்படியே ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டு இருந்தால்....எப்படி ஒற்றுமை வரும்........ அன்பர்களே, இப்பொழுது உங்கள் எல்லோருக்கும் கஞ்சி வேண்டுமானுல் முதலில் தானியத்தைப் கழுவத் தண்ணீர் வேண்டும். இரண்டு அண்டா தண்ணீர் கொண்டு வாருங்கள்.

செல். குவளைத் தண்ணி அகப்பட்டா குடிச்சுப் பசி தீருவோமே, அண்டாத் தண்ணிக்கு எங்கே போவோம்.

இடை. அதோ ஏழாவது மைலில் கடல் இருக்கிறது. நிறைய நீர் இருக்கிறது. எல்லோரும் ஒற்றுமையாக முயன்ருல் இடைக்காட்டுருக்கும் கடலுக்கும் அஞ்சல்வைத்துக் கொண்டுவரலாம்.

இடைக்காட்டுநக்தும் கடலுக்குமாக வழி நெடுக கைக்குக் கை அஞ்சல் வைக்கிறார்கள். இடைக்காடர் தலைமை வகித்துப் பாடுகிறார்.

முத்தினைப் படைத்துமிழும் ஆழ்கடலே—நீ
முழுநீலம் ஆனதென்ன ஆழ்கடலே—நீ
செம்பவளக் கொடி படரும் ஆழ்கடலே—நீ
செம்மையர் யிராத தென்ன ஆழ்கடலே

தண்ணீர் வந்து சேருகிறது. உள்ளிருந்து ஒரு கலம் கேழ் வரகு எடுத்துவந்து கடல் நீரில்களைந்து ஆட்டுப் பாலில் வேக வைத்துப் பரிமாறுகிறார். ஜனங்கள் வயிறாரச் சாப்பிடுகிறார்கள்.

இடை. சிவ நாமத்தைச் சொல்லிக்கொண்டே சாப்பிடுங்கள்.

கூட்டம்.

சிவ சிவ சிவ சிவ சிவ நடராஜா
சிவ சிதம்பரமே ககன கனகசபேசா......

இடைக்காடரே, எங்க பசி தீர்ந்தது. உங்களைக் கும்பிடுகிறோம்.

இடை. நாளை இதே நேரத்தில் மறுபடியும் வாருங்கள்.

அன்று இரவு பகலில் சாப்பிட்டு ஜனங்கள் எல்லோரும் ஒரு மரத்தடியில் கூட்டம்கூடி ஆத்திரமாக பேசுகிறார்கள்.

செல். பகலிலே ஊத்தின கஞ்சி பசியைத் தான் கிளப்பிவிட்டிருக்கு.

முத். ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பிட்டுக் கொண்டு அவராலேதான் உயிர் வாழ முடியும்.

ஒருவன். ஏண்டா. இவ்வளவு பேருக்கும் எப்படிடா வடிச்சுப் போட்டாரு?

செல். இன்னைக்கிப் போட்டது மட்டுமில்லியே, எப்பவும் போடறம்னு வேறேல்லே சொல்லி யிருக்காரு.

ரெங். மூட்டை மூட்டையா வரகை உள்ளே குமிச்சி வச்சிருப்பாரோடா....

செல். எனக்கு அப்பவே சந்தேகம். இல் லாட்டி ஊரை வளச்சு செவுரு வைப்பாரா?

நாட்டாமை. ஊராருங்களுக் கெல்லாம் ஒரு வார்த்தை. இடைக்காடர் வீட்டிலே தானியம் ஏராளமா யிருக்கு. ராத்திரியே புகுந்து கொள்ளை யடிக்க வேண்டியது. புறப்படுங்க. உம்....

செல். இடைக்காடர் பார்த்து சபிச்சு பிட்டா....

ரெங். அட பட்டினியாலே சாகறத்தைவிட சாபத்தாலே செத்திட்டுப் போறோம். புறப்படுங்க.

கூட்டம் புறப்படுகிறது இருளில் இடைக்காடர் கோட்டைக்குள் புகுந்துவிடுகிறார்கள்; மெலிந்த இந்த மனிதர்களை ஆடுகள் முட்டித் தள்ளுகின்றன. உள்ளே தானியங்கள் இல்லை.

செல். வீட்டுலே ஒரு மணி வரகைக்கூடக் காணுமேடா?

இடை. [*உரக்கச் சிரித்துக்கொண்டே கூட்டத்துக்கு எதிரில் வந்து நிற்கிறார்.*] அடே ஊர் முழுவதும் கூடி யிருக்கிறாப்போலே யிருக்கிறதே, எங்கே வந்தீர்கள்? திருடவா? [*கூட்டம் மவுனமாக நிற்கிறது.*]

இடை. கொள்ளையடிக்க வந்தீர்களா? அது உங்களால் முடியாது. ஆடுகள் மனதுவைத்தால் தான் உங்களுக்கு வரகு கிடைக்கும்.

நாட். ஏன் அப்படி.

இடை. ஏன. உங்கள் குணம் தெரிந்துதான். வரகைக் குமித்து வைத்திருந்தால் கொள்ளை யடிப் பீர்க ளென்று எனக்குத் தெரியும். அதற்காகவே கேழ்வரகைக், களிமண்ணுடன் கலந்து, பாலை ஊற்றிக் குழைத்து, ஆட்டுக்காலால் மிதிக்கவிட்டு, சுவர் வைத்திருக்கிறேன். நீங்கள் எவ்வளவு சிரமப் பட்டாலும் மண்வெட்டி, கோடாரிகளால் இந்த சுவரை இடித்துவிட முடியாது.

நாட். ஆடுகளாலே மட்டும் முடியுமா?

இடை. அவைகளுக்கு ஒற்றுமை உண்டு. பொறுமை உண்டு. என் ஆடுகள் எருக்கம் இலை யைத் தின்கின்றன. உடம்பில் நமைச்சல் ஏற் படும். மந்தை ஆடுகளும் சுவற்றில் உராய்ந்து கொள்ளும். அப்பொழுது மண் உதிரும். உங்களால் அப்படிச் செய்ய முடியுமா? அந்த மண்ணோடு கலந்து உதிர்ந்த மணிகளைப் பொருக்கித்தான் உங்களுக்குக் கஞ்சி வார்த்தேன். இது தெரியாமல் கொள்ளையடிக்க வந்தீர்கள். குடியிருந்த வீட்டில் கொள்ளிவைக்க வந்தீர்கள். அன்னமிட்ட வீட்டில் கன்னமிடுவதுதானு மனித சுபாவம்.

ராக்கன்.
செல்லன்.
நாட்டாமை. } பசிக்குத் திருடினு பாபமில்லே....

இடை. ஆஹா, என்ன ஒற்றுமை, காலையில் என்னிடம் பிச்சை எடுக்க வந்தீர்கள். பிச்சை எடுக்கும்போது ஒற்றுமை........திருடும்போது ஒற்றுமை. உங்கள் வயிறு நிறைந்து வாழும்போது இந்த ஒற்றுமையைக் காணேமே! அய்யோ பாவம். இவ்வளவு ஒற்றுமையோ டிருக்கும் உங்களை வெறுங்கையோடு அனுப்ப எனக்குச் சம்மதமில்லை. என்னிடம் இப்போது இருப்பது இந்த ஒரு கம்பளிதான். இதை உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். யாராவது ஒருவர் எடுத்துக் கொள்ளுங்கள். [கம்பளியை எடுத்து நீட்டுகிருர்.]

முத். இங்கே கொடு.

செல். எங்கிட்டே கொடு.

ரெங். கொண்டாடா இங்கே.

கோவி. உனக்கு மட்டும் என்னடா கம்பளி.

[பலர் கையால் இழுத்ததால் கம்பளி சுக்குநூருகக் கிழிந்துபோகிறது]

இடை. கம்பளியைக் கிழித்துவிட்டீர்கள்........ கேவலம் ஒரு கம்பளிக்காக எனக்கு உனக்கு என்று அடித்துக்கொண்டு கம்பளியை கிழித்துவிட்டீர்கள் அல்லவா? இதேமாதிரி கடவுளே அனேகந் தடவைகளில் உங்களுக்கு நன்மை செய்ய வந்திருந்தும் உங்களுடைய ஒற்றுமை யில்லாத தன்மையினுல் அவைகளையும் அவலமாக்கிவிட்டீர்கள். இந்தக் கம்பளியை ஒருவர் போர்த்திக்கொண்டிருக்கக் கூடாதா? ஆளுக்கு அரை நாழிகை போத்திக்கொள்ள முடியாதா? இதைத் திரை கட்டி பத்து பெண்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள

முடியாதா ? .... என் ஆட்டு மந்தையைப் பாருங்கள். ஆயிரக் கணக்கான ஆடுகளிருக்கின்றன. ஒற்றுமையாகச் சென்று கடல் தண்ணீரைக் குடித்து ஒன்றுக்கொன்று சண்டையிடாமல் வந்து சேர்ந்து உங்களுக்கும் பாலைக்கொடுத்து அவைகளும் சௌக்கியமாய் வாழ்கின்றன. பஞ்சம் வந்ததற்காக என் மந்தை ஆடுகள் பட்டினி கிடக்கவில்லை. என்னுடைய கோட்டைச் சுவரைப் பாருங்கள். ஆட்டுப் பாலும் கரிசல் மண்ணும் கேழ்வரகும் சேர்த்துக் குழைத்து வைத்த அது எவ்வளவு ஒற்றுமையாக அப்படியே நிற்கிறது பாருங்கள். அறிவற்ற ஆடுகளுக்கும் அசையக்கூட சக்தியற்ற ஜடப்பொருள்களுக்கும் உள்ள ஒற்றுமை மனிதர்களாகிய உங்களிடம் வேண்டாமா? நவக்கிரகங்களைப்போல் வக்கரித்துக்கொண்டு சண்டை யிடுகிறீர்களே.

நாட். இடைக்காடரே! நீங்கள் சொன்னது உண்மைதான். இந்தப் பஞ்சத்துக்கு மட்டும் தப்பிப் புழச்சுட்டோமானு, ஊருலே ஒத்தரும் சண்டை போட்டுக்க மாட்டோம்.

இடை. இந்த உறுதி உங்களுக்குள் ஏற்பட்டு விட்டால், பஞ்சம் உடனே தீர்ந்துபோய்விடும்.

கூட்டம். இனி ஒற்றுமையா இருக்கம். இது உறுதி.

இடை. உங்கள் வாக்கு உண்மையாக இருந்தால், நீங்கள் ஒற்றுமையுடன் இருப்பீர்களென்று தெய்வம் நம்பினுல், இப்பொழுதே மழை பொழியும். நான் கட்டியிருக்கும் சுவர் கரையும். இதிலிருக்கும் வரகு இந்த ஊருக்குஆறு மாதத்திற்குச்சாப்பாட்டுக்

குக் காணும். அதற்குள் நீர் வளமும், நிலவளமும், பெருகி எங்கும் பயிர் செழித்து இன்ப வாழ்வு காண்பீர்கள்.

கூட்டம். தெய்வ சாட்சியாக ஒற்றுமையாக இருக்கமுங்க.

கூட்டப் பாட்டு

பல்லவி

ஒற்றுமை தனிலே வெற்றியைக் கண்டோம்
உலகம் இனி வாழும் (ஒற்று)

அனுபல்லவி

நற்றவமே செய்த ஞானிகளல்லோம்
ஒற்றுமையாலே உயர்ந்தவரானோம் (ஒற்று)

சரணம்

படைத்தவன் யாவரும் ஒன்றாய்ப் படைத்தான்,
படிவமெல்லோருக்கும் ஒன்றே அமைத்தான்,
நெற்றியும் மூக்கும் நிறமும் ஒன்றாகியும்
நெஞ்சினில் மட்டும் வஞ்சகமேனோ (ஒற்று)

வானம் பொழிகிறது. வையம் தழைக்கிறது.



திருச்செந்தூர் வேலன்

மதுரைக்கு அருகில் ஒரு கிராமம். சுமார் நூறு வீடுகளே இருக்கின்றன. அதில் குளக் கரையை அடுத்து, ஓர் கொல்லன் பட்டறை. பட்டறை வாசலில் இரண்டு மூன்று வண்டிகள் பழுதுபார்ப்பதற்காக, சக்கரங்கள் இன்றிக் கீழே கிடக்கின்றன. வட்ட வட்டமாக மூட்டங்கள் போட்டு, வண்டிப் பட்டாக்கள் காய்ந்துகொண் டிருக்கின்றன. உள்ளிருந்து சம்மட்டிச் சத்தம் கேட்கிறது. சுமார் நாற்பது வயதுடைய ஒருவர்; கையிலே வெள்ளிப் பூண்பிடித்த பிரம்பு; கச்சம் வைத்துக் கட்டிய வேட்டி; நெற்றியிலே விபூதி, சந்தனம், குங்குமம் மூன்றும் விளங்க வருகிறார். அவர் பக்கத்தில் பயபக்தி விஸ்வாசத்துடன் ஒருவர் கூடஒருத்தர். இருவரும் பட்டறைக்குள் நுழையத் தயங்குகிறார்கள். இவர்கள் இருவரில் ஒருவர் முத்துப் புலவர்; மற்றவர் அவருடைய கையேடு படிக்கும் சிஷ்யர் குருவையா.

சுப். கொள்ளன் பட்டறையிலே ஈக்கென்ன வேலை? வாங்கன்னா போகளாம்.

முத். ஈயாத புல்லரன்றோ புலவர்களை ஈயென்றும் எறும்பென்றும் அழைப்பர். நீரும் அழைப்பது நீதியல்ல. நாம் ஈயுமல்ல எறும்புமல்ல; வாரும் சற்று உட்சென்று வரலாம்.

சுப். இள்ளேன்னா. பகளிக்கூத்தன் பொள்ளாத ஆலு. போனா வம்புளே புடிச்சுக்குவான்.

முத். அவர் குணம் எப்படி இருந்தால் நமக்கென்ன? தொழில்தானே முக்கியம். வாருங்கள், இந்த எழுத்தாணி கூர்தீட்டவேண்டும்.

சுப். புளவரய்யா! இந்தக் கொள்ளனில்லாட்டி, வேறே கொள்ளனே கிடையாதா? இவன் அதனப்பிரசங்கி. இந்த முத்தமிள் சேத்திர வட்டாரத்திலேயே, தமிள் தனக்குத்தான தெரியும் என்கற கர்வம் உல்லவன். நீங்க போய் மாட்டிக்க வேண்டாம்.

முத். சரி, தாங்கள் செல்லுங்கள். நான் உட்சென்று வருகிறேன். [என்று சொல்லிவிட்டு, பட்டரைக்குள் நுழைகிறார் முத்துப்புலவர்.]

பட்டரையில் பகழிக் கூத்தர் மணைப்பலகையின்மீது உட்கார்ந்திருக்கிறார். சுமார் வயது 45 இருக்கும். கறுங்காலி வைரம்போல் கறுத்து மெருகு ஏறிய சரீரம், திருகிவிட்ட மீசை; வணங்கியே அறியாத நிமிர்ந்த உடம்பு. இரும்பை வளைத்துத் தொழில் செய்யும் அவருக்கு எதுகை மோனைகள் குற்றேவல் செய்கின்றன. பாடல் இயற்றத் தெரிந்தவர்; ஆனால் பாடுவதில்லை. உள்ளே நுழையும் முத்துப் புலவரைப் பார்க்கிறார். எதையோ எண்ணுகிறார். யாரோ ஒருவன் பாடிய பாடலை இரைந்து பாடிக் கொண்டே சம்மட்டியால் விண்விண் என்று அடிக்கிறார்.

முத். பகழியார் இருக்கிறாரா?

பக. நாம்தான். என்ன வேண்டும்?

முத். எம்மை உலகத்தவர் முத்துப் புலவர் என்றழைப்பர்.

பக. எங்கேயாவது பிரபுக்களை நாடிச் செல்லுங்கள். இது உழைப்பாளிகளை மதிக்குமிடம்.

முத். நாம் இங்கு வந்த காரியம் பிரபுக்களால் ஆகக்கூடியதல்ல.

பக. என்ன காரியமோ?

முத். கடினமொன்று மில்லை. இந்த எழுத்தாணி கொஞ்சம் மழுங்கல்.

பக. சகவாச தோஷம் போலும்.

முத். அப்படியல்ல. அதைக் கொஞ்சம் கூர்மைசெய்து தர வேண்டும்.

பக. புலவர் அவர்களே! அம்மாதிரி உள்ள சில்லரை வேலைகள் இங்கு செய்வதில்லை. இது. அம்பு, ஈட்டி முதலிய படைக்கருவிகள் செய்யுமிடம். போங்கள். வேறிடம் பாருங்கள். நான் கடுமையாய்ப் பதிலுரைத்ததற்கு........

முத். இல்லை, அதுவும் சகவாச தோஷந் தான். தெரியாதா?

பக. புலவரே! நன்கு கூறினீர். போய் வாருங்கள், வேலையைக் கெடுக்காமல்.

முத். பகழிக் கூத்தரே! நன்று பகன்றீர். வில்லம்பிற் சொல்லம்பு மேலதிகம் என்பதை அறிந்திருந்தும், உமது போர்க் கருவியைப் புகழ்ந்து எழுத்தாணியை இகழ்கின்றீர். இது தவறு என்பதை உணருவீர். [என்று கூறித் திரும்ப முயலுகிறார்.]

பக. புலவரே! கோபிக்க வேண்டாம். எங்கே....எழுத்தாணி? அடே பையா! அரம் எடுத்து ராவி, இதைக் கூர்மைப்படுத்து. புலவரே! தாங்கள் காலையில் வந்து இதை வாங்கிக்கொண்டு போகலாம்.

முத். இல்லை, இப்பொழுதே தந்தால் நல்லது.

பக. என்ன அவசரம்? இருளில்தான் பாட்டு எழுதுவதோ?

முத். இருள் விலகும்போது, எழுத வேண்டிய அவசியமே இல்லையே! நாளைப் புங்க

மரப்பட்டியில் ஒரு கலியாணம். அதற்கு ஒரு வாழ்த்துப் பாட்டு எழுத வேண்டும். வீட்டிலே நெல் இல்லை ; பட்டா மணியத்தைப் பார்த்து ஒரு பாட்டுப் பாட வேண்டும். மாடு கால் நொண்டுகிறது. வயித்தியன் சரியாகக் கவனிப்பதில்லை.

பக. மாடு நொண்டுவதற்கும் பாட்டு எழுதுவதற்கும் என்ன சம்பந்தம்?

முத். இல்லை. அந்த மாட்டு வயித்தியனுக்கு கலியுகப் புலிப்பாணி என்று பட்டங்கொடுத்தோம், பாட்டு எழுதிக்கொடுக்க வில்லை. அதற்காக வற்புறுத்துகிறான், இன்னும்.........

பக. நிறுத்தும். விழலுக்கு நீர் இறைப்பதா புலமை? தமிழ்ப் பண்டிதனுக்கு இருக்கும் அகௌரவம் போதாதா? மேலும் மேலும், கேடுகெட்ட பாட்டுக்களைப் பாடுவானேன். இம் மாதிரிப் பாட்டு எழுதினால் எழுத்தாணி மழுங்குவதோ டல்ல, புத்தியே மழுங்கிவிடும்.

முத். நாம் சாப்பிட வேண்டாமா?

பக. தமிழை நம்பும். சோறு கிடைக்கும்.

முத். பகழிக் கூத்தரே! உமக்குத் தொழில் இருக்கிறது; விண்ணாரம் பேசுகிறீர். எமக்கு?

பக. உமக்கும் உடம்பிருக்கிறது. ஊக்கமிருந்தால் உழைத்துச் சாப்பிடலாம்; வீணில் பாடிப் புலவனைப் பொய்யனாக்காமல் இருக்கலாம்.

முத். வயிறு பசிக்காதபோது .... நன்றாகப் பேசலாமையா, பேசலாம்.

பக. பட்டினியிலும் பகழிக் கூத்தன் பேசுவான்; பதரைப் புகழ்ந்து பாட்டெழுத மாட்டான்.

முத். ஆம். பகழிக் கூத்தரே! ஒரு சந்தேகம். தாங்கள் ஏன் தமிழறிவு இருந்தும் வாளாவிருக்கின்றீர்கள். ஏதேனும் பாடல் எழுதக் கூடாதோ?

பக. எனக்கு அது பிடிக்கவில்லை. தமிழனுக்குத் தமிழ் அறிவு வேண்டும். ஆனல், அது தன் ஆனந்தானுபவத்துக்காகத்தான் இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் உடையவன் நான்.

முத். அப்படி இருந்தாலும் பாட்டு எழுதலாமே?

பக. எழுதாமலு மிருக்கலாமே.

முத். எம்போல் எழுத வேண்டாம். தகுந்தவர்களைப் புகழ்ந்தெழுதுவதுதானே?

பக. புலவரே! அந்தப் பாதை அவ்வளவு சரியானதல்ல. இன்று தகுந்தவராகத் தோன்றுபவர், நாளை தகாதவராகத் தோன்றலாம்.

முத். பொருள்தானே நமக்கு வேண்டும்?

பக. பொருளும் புயலும் ஒரே இடத்தில் தங்குபவை யல்ல. மனிதனைப் புகழ்ந்தால், தமிழுக்கு அபராதம் செய்தவர்களாவோம்.

முத். [சிரித்துக்கொண்டு] மரம், செடி, கொடி முதலியவற்றைப்பற்றி எழுதுவது?

பக. நாம் எழுதாமலே அவை செழிக்கும்.

முத். கடவுளைப்பற்றி எழுதுவது?

பக. வெல்லப்பிள்ளையாரைக் கிள்ளி நைவேத்யம் செய்வானேன்?

முத். தொழிலைப்பற்றி எழுதுவது?

பக. ஏட்டுச்சுரக்காய் கறிக்காகுமா?

முத். உமக்கு வேண்டாவிட்டால் எம் போன்றவர்கள் பிழைப்பதற்காகவாவது எழுதிக் கொடுத்து உதவி செய்யலாமே?

பக. குற்றத்துக்கு உடந்தையா யிருப்பதும் குற்றமே!

முத். கூத்தரே! தெய்வம் கொடுத்த கல்லால் தெய்வத்தை சிலை வைத்துக் கும்பிடுகிறோம். தாய்க்குக் குழந்தையின் மதலையில் சந்தோஷ மில்லையா? குருவுக்கு சிஷ்யன் பாடுவதில் சந்தோஷ மில்லையா? தமிழ் தெரிந்தும் தெய்வத்தைக்கூடத் துதிக்காம லிருப்பது பாபம்.

பக. உம்மை, நாம் தெய்வத்தின் பிரதிநிதி யாகக் கருதவில்லை.

முத். குழந்தைகள் தகப்பனுக்குப் பிரதிநிதி என்பதற்கு அத்தாட்சி தேவையில்லை.

பக. போதும் விசித்திர வாதம். பாட்டு வேண்டுமானல் அந்தத் தெய்வம் வந்து கேட்கட்டும்; பாடுவோம். வலுவில் போய் மனிதனைப் பாடினலும் தெய்வத்தைப் பாடினலும் கேவலம் கேவலமே. [பையனைப் பார்த்து] அடே! எழுத்தாணி ஆச்சா?

பையன். இந்தாங்க. [பையன் கொடுக்கிறன்.]

பக. [அதை வாங்கிப் புலவரிடம் கொடுத்து] புலவரே! போய் வரலாம். பாட்டு எழுதுவதற்கு எழுத்தாணிக் கூர்மை மட்டும் போதாது.

முத்துப் புலவருக்கு எழுத்தாணியைக் கையில் வாங்கியதும் கோபம் வருகிறது.

முத். கூத்தரே! உமது கர்வம் பொடிபடும்.

உமது தமிழ் தழைக்கும். உத்திரவு பெற்றுக்கொள் கிறேன். [வெளியே போய்விடுகிறார்.]

பகழிக் கூத்தர் வீடு; இரவு படுக்கையில் படுத்த வண்ணம், பகழிக் கூத்தர் சிந்தனையிலாழ்ந் திருக்கிறார். காலையில் பட்டறையில் முத்துப் புலவருடன் நடந்த சம்பாஷணை அவருடைய சிந்தனையைக் கிளறிவிட்டு, மனதை ஆட்டி அலைக்கிறது. அவருடைய மனைவி அவருடைய கால்களை வருடிய வண்ணம் அவரிடம்.

மனைவி. முத்துப் புலவருக்கும் உங்களுக்கும் ஏதோ சண்டையாமே?

பக. ஏன், இங்கு வந்து ஏதாவது?

மனை. உங்களை அவர் என்ன செய்தார்?

பக. நான்தான் அவரை என்ன செய்தேன்?

மனை. ஏதோ சண்டையாம். பாட்டு எழுதுவதற்கு எழுத்தாணிக் கூர்மை மட்டும் போதாது என்று சொன்னீர்களாம்.

பக. அதற்கு அர்த்தம் என்ன வென்று உன்னிடம் வந்து கேட்டாரா?

மனை. நீங்கள் நினைக்கிறபடி முத்துப் புலவர் அவ்வளவு புத்தியற்றவரல்ல. ஏதோ காலம் கெட்டுக்கிடக்கிறது. தமிழை ஆதரிப்பவர்களில்லை; அதனால்தான் அவனையும் இவனையும் பாடி வயிறு வளர்க்கிறார்.

பக. வள்ளியம்மை! ஆதரிப்போரில்லாமல் அல்லல்படும் தமிழை, இவரும் சேர்ந்து கொலை செய்வானேன். உன்னிடமும் என்னிடமும் இரும்பைக் கொண்டுவந்து காண்பித்தால், அதை மதிக்

கத் தெரியும். உருக்கு, ஒழுகறை, பட்ட இரும்பு, கலப்பு, தேனிரும்பு, என்று தரம் பிரித்து மதிப் போம். தங்கத்தைக் கொடுத்தால், மாத்துப் பார்க் கத் தெரியுமோ? அதை, அது தெரிந்தவர்களிட மல்லவா கொடுக்க வேண்டும்?

வள்ளி. அது உண்மைதான். அடுத்த வீட்டு நாச்சியாயி வாங்கிவந்த பொன்னேலையை நான் பித்தளை என்று சொல்லி, சண்டை உண்டாக வில்லையா?

பக. அதே மாதிரி செய்ய இடம் கொடுக்கி ரூர் முத்துப் புலவர். ஒரு இடத்தில் போய் ஒருவனை கல்பக தருவே, மேரு மலையே, அரிச்சந்திரனே, என்று புகழ்ந்தார். பாட்டைப் பாடிக்காண்பித் தார். பதத்தைப் பிரித்துக் காண்பித்தார். அர்த் தத்தைச் சொன்னர். தன் கவியிலிருக்கும் நுட்பங் களைத் தானே புட்டுப்புட்டு எடுத்துவைத்தார். ஆனல், அவன் மாத்திரம் இடித்த புளி மாதிரி உட் கார்ந்துகொண் டிருந்தான்.

வள்ளி. பிறகு?

பக. பிறகு என்ன? எண்சாண் உடம்பை ஒரு சாணுகக் குறுக்கிக்கொண்டு, பல்லைக் காட்டி யாசகம் கேட்டார்.

வள்ளி. ஐயோ பாவம்! என்ன கஷ்டமோ? ஏதாவது கொடுத்தானு?

பக. உம். கொடுத்தான். போங்காணும், யாரைப் பார்த்து மரமென்றீர், கல்லென்றீர், யாரையா அரிச்சந்திரன்? வரிப் பணத்துக்காக நகையை வேண்டுமானலும் அடகு வைத்திருப்பேன்;

பெண்டாட்டி பிள்ளைகளை விற்றதில்லைங்காணும். மரியாதையாய் போம் என்று சொல்லி, நாயை அவிழ்த்து மேலே விட்டுவிட்டான். அலறிக்கொண்டு வீடு வந்துசேர்ந்தார்.

வள்ளி. ஆமா....முத்துப் புலவர் அரம் பாடு வாராமே?

பக. அது இருந்தால் எழுத்தாணியை நான் ஏன் கூர்படுத்திக்கொடுக்க வேண்டும்? இதெல்லாம் அதிகப்பிரசங்கித்தனம். படித்துவிட்டாலும் இப்படி எல்லாம் பேசக் கூடாது. கர்வப் பேச்சு.

வள்ளி. உங்களை யல்லவோ எல்லோரும் கர்வக் காரர் என்று சொல்லுகிறார்கள். தெய்வமே நேரில் வந்து கேட்கட்டும்; பாடுகிறேன் என்று சொன்னீர் களாமே!

பக. சொன்னாலென்ன? நானே வலுவில் தெய்வத்தைப் பாடினால் அது அகம்பாவம். மெய் மறந்து, பக்திப் பெருக்கில் என்னை அறியாமல் பாட்டுக்கள் வந்தால், அந்தப் பாட்டுக்கள் நன்றாய் இருக்கும்.

வள்ளி. அதுவும் நீங்கள் பாடியதுதானே?

பக. எப்படி நான் பாடியதாகும்? தமிழ் தானே பாடிக்கொண்டது. வள்ளியம்மை! பணத்துக் காகவோ வற்புறுத்தலுக்காகவோ எழுதும் பாட்டுக் கள், குமுட்டிவைத்து ஊதிப் பழுத்த பழங்களைப் போலாகும். தானாகப் பழுத்த பழத்திலுள்ள சுவை அதில் இராது.

வள்ளி. நிஜமாகவா?

பக. ஆம். மனிதர்களின் அழகும் கவிதை

யும் செயற்கையால் வந்துவிடாது. சிப்பிக்குள் முத்து உண்டாவதைப்போல, அதுவாக வளர்ந்து பக்குவப்பட்டு ஒளிவீச வேண்டும்.

வள்ளி. தமிழறிவு அதிகமிருப்பதால் கிடைக்கக் கூடிய தனிக் கௌரவத்தை விடலாமா?

பக. நீ நினைப்பது பிசகு. படிக்க வேண்டுவது கடமை. கடமை தவறியவர்கள் நிறைந்திருக்கக் கூடிய இடத்தில் கடமையைச் செய்தவன் அதைப் பெரிதாகப் பாராட்டிக்கொண்டால், தற்புகழ்ச்சி யில்லையா? தவிர, எனக்குப் பாட்டு எழுத வேண்டும் என்று ஆசை வந்தால்தான் பாட்டும் எழுதவரும்.

வள்ளி. அந்த ஆசை எப்படி வரும்?....என்னுங்க, உம்....தூக்கமா........

பகழிக் கூத்தர் தூங்கிவிடுகிறார்.

வள்ளி. தூங்குங்கள்....ஆமா, பாட்டுப் பாடற வேலையா? பட்டறை வேலையால்லியா? உறக்கம் வந்துவிட்டது.

நள்ளிரவு. முத்துப் புலவரின் வீடு. முத்துப் புலவர் அக்கறையாக ஏதோ கவனம் செய்துகொண்டிருக்கிறார். கையேட்டுக்காரச் சுப்பையா, புலவர் சொல்லுவதை எழுதிக் கொண்டிருக்கிறார்.

முத். படிக்கட்டும் எங்கே.

சிஷ்யன். மாதர் பிரைக் கனியா....ணே.

முத். அப்படி யல்ல அந்தப் பாட்டு. மாதர் பி—றைக்கணி—யஅஅ யஅஅ யஆணே, என்று பாட வேண்டும்....கபாடம் தாளிடப்பட்டிருக்கிறதா?

சிஷ். இருக்கிறது.

முத். எங்கே, மறுபடியும் படிக்கட்டும்.

சிஷ். மாதர் பி—ரைக் கனி யாணை.

முத். எங்கே, கையேட்டை எடுக்கட்டும். எழுதட்டும். மாதர் கண்ணுக் கணிகலனுய்,மதியுடை யோனுய், [என்று ஆவேசத்தோடு பாடி எழுதச் சொல்லுகிறார்.]

சிஷ். என்னங்க புளவரே! நாய், ஓனுய்னு எளுதச் சொல்றீங்க, ஏதாவது காடு சம்பந்தமான பாட்டோ?

முத். நமசிவாயம்! நமசிவாயம்!! என்ன மூளை? மாதர் பிறைக்கு அணியானை எங்கே பதத் தைப் பிரியுங்கள்.

சுப்பையா. மாதர் ஒன்னு. பிறைக்கு, இரண்டு.

முத். அப்படி யல்ல. மாதர் ஒன்று; பிறை இரண்டு, க்கு, நான்காம் வேற்றுமை உருபு, மூன்று அணி, நாலு, ஆனை ஐந்து அவ்வளவுதானே. எங்கே பொருளைச் சொல்லுங்கள்.

சுப். புளவரய்யா தூக்கம் வருதே.

முத். நாம் கவிதையில் ஆழ்ந்துவிட்டால், கண் விழித்திருப்பதையே அறியோம். சற்று பொறுங் கள். எங்கே பொருள் என்ன?

சுப். மாதர்—பெண்கல். பிறை — பிறை. நுதல்—நெற்றி. அனி, ஆனை. அதாவது பெண் களின் நெற்றிக்கு அனிகலனுகிய யாணை என்று கூறளாம்.

முத். உண்மை. ஆனல், இந்த இடத்தில் பிறை என்பது, கண்ணுக்குத்தான் பொருந்தும்.

சுப். அதெப்படிங்க! "இந்து நுதலும் பிறை யுமே" எங்கிற இடத்திலே மூன்றும் பிறைச் சந்திரன் போன்ற நெற்றிங்கறதுதானே பொருத்தம் ?

முத். அவையெல்லாம் அர்த்தம் தெரிந்து எழுதும் பாடல்களுக்கு? இந்தப் பாடல்கள் எல்லாம் அருட்கவிகள் தானே? வாய்க்கு வந்ததை எழுதியது தானே.

சுப். என்ன, தேவாரம், திருவாசகம்கூடவா !

முத். ஆம் அதிலென்ன சந்தேகம். ஒரு வருக்காவது அர்த்தம் தெரியாது....உமக்கு ஒரு இரகசியம் சொல்லுகிறேம். [இரகசியமாக] ஒரு சம யம் சிதம்பரத்திலே மாணிக்கவாசகர் அகப்பட்டுக் கொண்டுவிட்டார். நமது புலவர் கோஷ்டி விட வில்லே. உமது பாடலுக்கு அர்த்தம் என்ன என்று கேட்டேவிட்டார்கள்.

சுப். உம். பிறகு ?

முத். அவர் திணறிப்போய்விட்டார். கடைசி யில் வேறென்றும் தெரியாமல் இதுதான் அர்த்தம் என்று, நடராஜமூர்த்தியையே சுட்டிக்காட்டிவிட் டார்.

சுப். [சிரிக்கிறுன்] அவர் சம்பம் உங்களேப்போ லுள்ள புலவர்கள் கிட்டச் சாயுமா. ?

முத். முடியாது. படிப்பெங்கே, பாட்டெங்கே? நாம் எழுதும் இந்த நூல் மட்டும் கடவுள் கிருபையால் முடிந்தால்........

சுப். இந்த உலகத்திலேயே உங்களே ஒருத்த ரும் கட்டிப்பிடிக்க முடியாது.

முத். ஆம். தேவாரம் முழுவதுமே இம்

மாதிரி விரிவுரை எழுதிவிடுவதென்று நிச்சயம் செய்துவிட்டோம்........

சுப். ஐயோ........ எப்போ?........ ராத்திரிக்குள்ளேயா?

முத். ஆம்....உமக்கு உறக்கம் வந்தால் நீர் போகலாம்.

சுப். உங்களுக்குந்தானே, உறக்கம் வருது.

முத். நாம் உறங்குவோம்; உறக்கத்திலேயே பாடலும் எழுதுவோம்....

சுப். அது உங்களாலேதான் முடியும். நான் படுக்கிறேன். [படுத்துக் குறட்டைவிடுகிருன். முத்துப் புலவர் உட்கார்ந்தபடி உறக்கமும் பாட்டுமாகப் போராடிக்கொண் டிருக்கிருர்.]

வீட்டில், கட்டிலில் உறங்கிக்கொண் டிருந்த பகழிக் கூத்தர் "முருகா, முருகா" என்று கூவிக் கொண்டே எழுந்திருக்கிறர். கனவுலகத்தி லிருப்பவர் போல் ஆவேசத்துடன் "வேலாயுதம், வேலாயுதம்" என்று உருப்போடுகிறர். உடல் வியர்க்கிறது. முகத்தில் என்றுமில்லாத ஒளி ஒன்று திகழ்கிறது. கண்களில் கண்ணீர் பெருகுகிறது. கட்டிலில் சப்பணமிட்டு உட்காருகிறர். இரு கரங்களையும் குவிக்கிறர். 'வேலாயுதம் வேலாயுதம்' என்று வாய் ஓதிக்கொண்டே யிருக்கிறது. மனைவி வள்ளியம்மை அவர் அருகில் வருகிறள். உற்றுப்பார்க்கிறள். பதறுகிறள் வேர்வை ஆறுப்பெருகுவது காண்கிறள்.

வள்ளி. என்னங்க. அட தெய்வமே. என்ன? என்ன முணுமுணுக்கிறீங்க? இந்தாங்க. அப்பவே அந்தப் புலவர் வம்புக்குப் போகாதீங்கனேனே?

பக. வள்ளியம்மை! திருநீறு கொண்டுவா.

வள்ளி. இந்தாங்க. ஒடம்புக்கு ஒண்ணுமில்லேயே? இதென்ன இது? உடம்பு ஜில்லின்னு குளிந்திருக்குதே?

பக. ஞான பண்டிதன் துணை. வள்ளியம்மை! அருள் கிடைத்தது. அகம் குளிர்ந்தது. இகம் ஈடேறியது. உவகையடைந்தேன். ஊக்கங் காட்டுவேன். எழில் கிடைத்தது. ஏழ்மை நீங்கியது. ஐயம் தெளிந்தது. ஒருப்பட்டது மனம். ஓடுகின்றது வேலனிடம். கனவு கண்டேன். காலில் சதங்கையும் கையில் வேலும் மெய்யெல்லாம் விபூதியும் துலங்கக் கந்தன் தோன்றினன்.

வள்ளி. நிஜமாகவா?

பக. ஆம். தோன்றி, பூமாது போற்றும் புகழ் பகழிக் கூத்தா! என்று அழைத்தார். முருகா! சண்முகா! உன் கருணைதான் என்ன! சகல ஜீவ ராசிகளும் நிறைந்த இப் பூமண்டலத்தில் என்னை ஒரு பொருட்டாக எண்ணி, எனக்குக் காட்சி யளித்தாயே. "பூமாது போற்றும் புகழ் பகழிக் கூத்தன்" முருகனைக் கண்ணாரக் கண்டவன். உன்னைக் காணும் பிள்ளையைப் பெற்றதற்காக பூமாதை யல்லவா உலகம் போற்ற வேண்டும்?

வள்ளி. நாதா! சொல்லுங்கள் பிறகு?

பக. ஹா.....பிறகு பூமாது போற்றும் புகழ் பகழிக்கூத்தா நின் பாமாலை யாம் கேட்கப் பற்றோமா. வள்ளியம்மை! நான் கொடியவன். முருகன் தமிழ் தெய்வம். தமிழ் அவனுடையது. அவன் தந்த பிச்சை. இதுகாறும் அவனைத் துதிக்காமலே இருந்துவிட்டேன். காலத்தை வீணாக்கிவிட்டேன்.

வள்ளி. நாதா, வருந்தாதீர்கள். நாம் செய்த பாக்கியம் என்று சொல்லுங்கள். கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுங்கள்.

பக. வேண்டாம்..........துடைக்காதே.... அது கண்ணீரல்ல....ஆனந்தவாரி பெருகுகிறது. அவன் கண்களின் ஒளியைக் கண்டு, இந்தக் கண்களிலிருந்தும் அருள் பெருகுகிறது. கனவிலே வந்து தோன்றி, என் கருத்திலே ஒளித்துக்கொண்ட கருணை வள்ளலின் புகழைப் பாடுவேன், அதையே அனுபவிப்பேன். [காலைக் கோழி கூவுகிறது.] இதோ அவன் கொடி உயருகிறது. உலகத்தை ஊக்குகிறது. உயிர் உண்டாக்குகிறது. இருள் விலகி ஓடுகிறது. பகட்டும் மின்மினிகள் மறைகின்றன. ஜோதி தோன்றுகிறது. உலகம் ஒளி பெறுகிறது. விடிந்துவிட்டது.

வெளியே ஒரு தாதன் பாடிக்கொண்டு போகிறான்.

காயா மலர் நிறவா !—கருமாமுகில் போலுருவா !
கானக மாமடுவில்—காளியனுச்சியிலே
தூய நடம்பயிலும்—சுந்தர என்சிறுவா !
துங்க மதக்கரியின்—கொம்பு பறித்தவனே !
ஆயமறிந்து பொரு—வானெதிர் வந்தமல்லை,
அந்தரமின்றியழித்—தாடிய தாளிணையாய் !
ஆய எனக்கொருகால்—ஆடுக செங்கீரை !
ஆயர்கள் போரேறே—ஆடுகசெங்கீரை !!

பக. ஆம். பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக்கித் துதிக்கிறார். நானும் கந்தனைக் குழந்தையாக்கித் துதிக்கப்போகிறேன். வள்ளியம்மை! முத்துப் புலவரைக் கூட்டிவா.

மனைவி. இதோ வந்துட்டேன். [என்று வெளியே செல்லுகிறாள்.]

கனவிலே முருகன் அருளிய இந்தப் பாடலைத் தனக்குள் பாடிப்பாடிப் பார்த்துக்கொள்ளுகிறார்.

பக. பூமாது போற்றும் புகழ்பகழிக்கூத்தா! உன்
பாமாலை யாம் கேட்க பற்றுமா—யேமம்
கொடுக்க வறியோமா, கூற்றுவன் வாராமற்
றடுக்க வறியோமா தாம்.

முத். [ஓடோடி வருகிறார்] பகழிக் கூத்தரே! பண்டிதரேறே! வணக்கம்.

பக. முத்துப் புலவரே! உமது விதண்டா வாதத்தால் என் கண் திறந்தது. நேற்று இரவு அதே நினைவாக இருந்தேன்.

முத். எல்லாம் வள்ளியம்மை சொல்லத் தெரிந்துகொண்டேன்.

பக. புலவரே! உம்மை வணங்குகிறேன். இது முதல் நான் பாட்டெழுதும்படி திருவுள்ளம் தீர்மானித்திருக்கிறது. எழுதப்போகிறேன்.

முத். இது முதல் நான் பாட்டு எழுதுவதை நிறுத்திக்கொள்கிறேன்.

பக. ஏன்?

முத். தெய்வத்தின் நைவேத்யப் பொருளை மனிதனுக்கு உணவாக்காதிருந்தால், தெய்வம் தானே வந்து கேட்டு வாங்கிக்கொள்ளும் என்பதை உணர்ந்ததனால்.

பக. நல்லது, தாங்கள் உதவி செய்ய வேண்டுமே?

முத். தாங்கள் தீட்டிக்கொடுத்த எழுத்தாணி இதோ இருக்கிறது. தங்கள் அருளுக்கு உரிய சீடன் முத்து, காத்துக்கொண் டிருக்கிறேன்.

பக. திருவுள்ளம் காக்க. எழுதுங்கள்!

பகழிக்கூத்தர் சொல்ல முத்துப்புலவர் எழுதுகிறார். பாட்டு எழுதி முடிந்ததும், இருவரும் திருச்செந்தூர் பிரயாணமாகிறார்கள்.

திருச்செந்தூர் சந்நிதி வீதி. செந்திலாதிபன் சந்நிதானத்தில் பக்த கோடிகள் ஆடியும் பாடியும் துதிக்கிறார்கள். ஒரு புறத்தில் மேள வாத்தியம் முழங்குகிறது. சர்க்கரைக் காவடி எடுக்கும் பக்தர் ஒருவர் நடனமாடிக்கொண்டே செல்கிறார். மற்றொரு புறத்தில் புத்தப் புது தென்னங் குருத்தினால் காவடிப் பாந்து செய்து, பாற்செம்புகளைக் கட்டி, பாற்காவடி எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள் பக்தர்கள். பறைத் தப்பு முழங்குகிறது. ஹரிஜனங் கள் தோள்மீது தென்னமட்டையை வெட்டிவைத்து, நாலு நாலு இளநீர்களைக் கட்டித் தொங்கவிட்டு, ஏழைக்கும் தோழ னை இறைவனுக்கு காணிக்கை செலுத்துகிறார்கள். இடை யிடையே கரும்புகளில் பட்டாலே தொட்டி கட்டி, பாலர் களை சந்நிதானத்துக்குக் கொண்டுசெல் லுகிறார்கள். எங்கும் செந்தி லாதிபனுக்கு அரஹரோ, சேவற் கொடியோனுக்கு அரஹரோ என்ற கோஷம் முழங்குகிறது. சற்று ஒதுப்புறமாக, நாழிக் கிணற்று அருகில், பகழிக்கூத்தரும் முத்துப் புலவரும் நின்று பேசிக்கொண் டிக்கிறார்கள்.

பக. முத்தையா! இன்று என்ன கிழமை?

முத். ஞாயிற்றுக்கிழமை.

பக. நாம் இவ்வூருக்கு வந்து மூன்று நாளாகிவிட்டது. நாம் வந்த காரியம் இன்றைக் கேனும் நடக்க வேண்டும். திருவருட் சம்மதத்தை எதிர்பார்ப்போம்.

முத். புலவர் அவர்களே! திருவருள் சம்மதம் இருந்ததால்தானே இந்தத் திவ்ய பிரபந்தத்தைப் பாடி முடித்தீர்கள். இன்னும் அரங்கேற்றப் படாம லிருப்பதற்கும் திருவருள் சம்மதத்திற்கும் சம்பந்தமே யில்லை.

பக. அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை அறிந்தும், இப்படிச் சொல்லுவது முறையல்ல. இதுவும் அவன் செயல்தான்.

முத். இருக்கலாம். ஆனாலும் இந்த ஜனங்கள் படித்தவர்களல்ல....பாமரனிடம் பண்டிதன் போய் பல்லைக்காட்டி நிற்கவேண்டி யிருக்கிறது. அலைச்சலும் திரிச்சலும் அதிகமாக இருக்கிறது. மூன்று நாளாகப் பார்க்காத மனிதன் பாக்கியில்லை. ஆனால், ஒருவனாவது பாட்டைக் கேட்க மாட்டோமென்கிறான். வீணில் முட்டாள்தனமாக மூடபக்தி கொண்டு ஆடிப்பாடி, நெருப்பில் நடந்து, தன்னையும் பிறரையும் சிரமப்படுத்துவதில்தான் ஊக்கம் கொண் டிருக்கிறார்கள்.

பக. புலவரே! பக்தி என்னும் பயிர் தழைக்கும் வயலுக்கு அகங்காரம் உவடு. முதலில் இந்த உவடு ஒழிந்தால்தான் பயிர் முளைக்கும். பண்டிதனுக்கு அகங்காரம் இருக்கிறது. கடவுளைப் பாடும் பாடல்களில்கூட, கடவுளைவிடத் தன்னை அதிகமாகப் புகழ வேண்டுமென்ற எண்ணம் வைத்தே பாடுகிறான். அதனாலேயே பாடுபடுகிறான்.

முத். வித்தை தெரிந்தவன் அப்படித்தான் எழுதுவான்.

பக. வித்தை வேறு, புத்தி வேறு. இவைக

விருந்தால் பக்தியும் உண்டென்று சொல்லிவிட முடியாது. பழத்தில் தித்திப்பு உண்டாவதுபோல், காத்துக்கிடந்து தானுக உண்டாகும் இனிமை பக்தி.

மூத். மூடபக்தி பக்தியாகுமா?

பக. சுவைமிகுந்த பழம் போன்றது மூட பக்தி. படித்தவன் செய்யும் பக்தி இனிப்புப் பலகாரம் போன்றது. அபிவிருத்தி அடைந்ததாக எண்ணிக்கொண் டிருக்கும் மக்கள், கடைச் சரக்கைச் சேர்த்துக் கண்டுபிடித்தது பலகாரம். பழம் அப்படியல்ல. நெய்வேத்யத்திற்குப் பலகாரங்களைவிடப், பழம் சிறந்ததல்லவா? நமது பக்தியைவிட மூடபக்தி சிறந்தது.

மூத். நான் அதை ஒப்புக்கொள்ள வில்லை. நாம் படித்துத் தேர்ந்தவர்கள். பகுத்தறிவைக் கொண்டு, பாகுபாடு செய்து, பக்தி செய்யத் தெரிந்துகொண் டிருக்கிறோம்.

பக. புலவரே! வீணில் குட்டையைக் குழப்பிக்கொண் டிருக்கிறோம். முகம் பார்க்கக் கொடுத்த கண்ணுடியில், ரசம் பூசப்பட்டிருப்பதை வியந்து கொண்டிருக்கிறோம். அவர்களோ கண்ணுடியைப் பார்த்து ரசித்துக்கொண் டிருக்கிருர்கள். நாம் குட்டையைக் குழம்பாக்கிக், குழம்பைச் சேருக்கி விட்டோம்.

மூத். தாங்கள் பண்டிதராக விருந்தும் பண்டிதரை இழிவுபடுத்திக் கூறுகிறீர்கள். அது சரியல்ல.

பக. இழிவுபடுத்த வில்லை. தவறை உணர்ந்துகொண்டேன். இந்த சந்நிதானத்தில் ஒவ்வொரு பிரஜையும் சந்தோஷமாக இருக்க

வில்லையா? ஆடிப் பாடி மெய் மறந்து, ஆனந்த மாக இருக்கும் இவர்கள் மத்தியில் நாம் இருவர் மட்டும் கவலைப்பட்டுக்கொண் டிருப்பதன் காரண மென்ன?

முத். மதிக்கத் தெரியாத வியாபாரிகளிடம் சரக்கைக் கொண்டுவந்துவிட்டோம்.

பக. சரக்கை மட்டும் மதிக்க வேண்டு மென் பதா நமது விருப்பம்? நம்மையும் மதிக்க வேண்டு மென்று நாம் எண்ணுகிறோம். அதற்காகவே அரங்கேற்ற வருகிறோம். திருச்செந்தூரன் சந்நிதியில், ஈராறு விழிகளாலும் அவன் அருளும் கருணையை அள்ளிப் பருகித் திளைத்து, தன்னையே மறந்து வாழும் அவர்கள் நம்மைக் கவனிக்கவில்லை யென்று நாம் கூறுவது பிசகு.

முத். பின், ஊருக்குப் புறப்படுவோமா?

பக. வந்த காரியம் முடியவில்லையே!

முத். வருஷக் கணக்காய் காத்திருந்தாலும் அரங்கேற்றப் போவதில்லை. இந்த மனிதர்களிடம் அரங்கேற்றுவதைவிட........

பக. முருகனிடமே அரங்கேற்றிவிடலா மென்று கூறுகின்றீர்?

முத். இல்லை.

பக. ஆம் என்று சொல்லும்....கனவில் கண் டேன். இப்பொழுது கண்ணாரக் கண்டேன். இனி கருத்தில் காண்பேன். அவனுக்குப் பாடிய பாட்டை அவன் கோயில் வாசலில் நாமே பாடிவிடுவோம். அவன் ஒரு செவியாவது குளிர்ந்தால் அதுவே போதும், வாரும்.

முத். அரங்கேற்றும் முறை இதுவல்லவே?

பக. நாமாக இந் நூலை அரங்கேற்று வானேன்? நயம் மலிந்திருந்தால் தானாக சபைக்கு வருகிறது. புலவரே! பிறந்த முத்து கடலில்தான் கிடக்க வேண்டும். பின்னொரு காலத்தில் பிறர் முயற்சியால் அது சேரவேண்டிய இடத்தில் சேரும். நாம் முயற்சிப்பது அகம்பாவம். வாருங்கள், அனுட் டானத்தை முடித்துக்கொண்டு ஆரம்பிப்போம்.

உள்ளே கோயில் கர்பக் கிரகத்தில், அர்ச்சனை நடக்கிறது. ஷண்முக மூர்த்திக்கு எதிரில், காத்தபெருமாள் மூப்பனார் என்னும் பெரியார் நின்றுகொண் டிருக்கிறார். கோயில் சிப்பந்திகளும் மற்றையோரும் அவரைவிட்டு விலகி, மரியாதையாக நின்று தெரிசனம் செய்கிறார்கள். இந்தச் சமயத்தில் வெளியே இருந்து பகழிக்கூத்தர் பாடும் சப்தம் கேட்கிறது.

பக.

பேராதரிக்கு மடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறும்கொடுக்க வரும் பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா!

சேரா நிருதர் குலகலகா!
சேவற் கொடியாய்! திருச்செந்தூர்த்
தேவா! தேவர் சிறை மீட்ட
செல்வா! வென்றுன் திருமுகத்தைப்

பாராமகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப்புகழ்ந்து விருப்புடன்
அப்பா வா வாவென் றுனைப் போற்றப்
பரிந்து மகிழ்ந்து வர வழைத்தால்

வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா! வருகவே;
வளருங்களபக் குரும்பைமுலை
வள்ளிகணவா! வருகவே.

மூப்பனரும் பிறரும் திரும்பிக் கவனிக்கிறார்கள்.

மூப். வேய். இது யாரு பாடுவது? பாட்டு ரெம்ப நன்றாய் இருக்கிறதே?

அர்ச். அவன் யாரோ பாண்டிக்காரனும். தகப்பன் சாமிக்குப் பிள்ளைத்தமிழ் பாடியிருக்கிறானும். அரங்கேத்தணும்னு அலையறான். கோவிலுக்கு ஒரு விளக்கேத்துவானான்னு பாத்தா, அதுக்குக்கூட ஆசாமிட்டே இல்லை. இந்தாங்க பிரசாதம்.

மூப். ஸ்வாமி, பிரசாதத்தை எடுத்துக் கொண்டு என் கூட-வாருங்கள்.

எல்லோரும் மூப்பனரைப் பின்தொடர்ந்து, பகழிக் கூத்தருக்கு அருகில் வருகிறார்கள்.

மூப். ஐயா! அப்பனே நமஸ்கரிக்கிறேன். [மூப்பனர் பகழிக் கூத்தரைப் பணிகிறார்.]

பக. அபசாரம், அபசாரம். எழுந்திருங்கள். நான் கடையன். முருகனை வணங்கிய தாங்கள் என்னை வணங்கலாமா? எழுந்திருங்கள்.

மூப். ஐயனே! தங்கள் வாக்கில் இன்பம் பொங்குகிறது. தங்கள் நூலை சந்நிதானத்தில் பாடிவந்தால் பக்தர்களுக்குப் பரவசமுண்டாகும். ஞானம் விருத்தி யடையும். என் அனுபவத்தில் கண்ட உண்மை. பிரசாதம் எடுத்துக்கொள்ளுங்கள். தங்கள் பாட்டு முருகனுக்குத் தகுந்த பாட்டு.

பக. ஐயா! தங்களுக்கு முருகனிடம் உள்ள அன்பால் என்னைப் புகழுகிறீர்கள். இது என் பாட்டல்ல, முருகன் பாட்டு. கனவிலே உத்தர விட்டார். காரியத்தில் கைகூடிற்று.

மூப். அப்படியா. நூலின் பெயரென்ன?

பக. திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்.

மூப். பிள்ளைத் தமிழா? பெரிய தமிழாய் இருக்கிறதே! எப்படி ஆரம்பித்தீர்கள்?

பக. முருகன் தந்த பாட்டின் முதல் பாட்டைக்கொண்டு, 'பூமாதிருக்கும் பசுங்களப' என்று ஆரம்பித்து, காப்பு, செங்கீரை, தாலாட்டு, சப்பாணி கொட்டுதல், முத்தாடல், வருந்தியழைத்தல், அம்புலி காட்டல், சிறுபறை முழக்கல், சிற்றில் கட்டல், சிறு தேருருட்டல் எனப் பத்துப் பருவமாகப் பிரித்து, உலக முதல்வனைக் குழந்தையாக்கி, உடனிருந்து பார்க்கும் பாவனையில் எழுதியுள்ளோம்.

மூப். ஆஹா, பரமானந்தம். ஆனந்தம். முருகா சரணம். பக்தர் பெருமானே! இதற்கு முதநூல் ஏதேனும் உண்டோ?

பக. முதநூலா! [சிரிக்கிறார்] உண்டு. முருகன் தான்.

மூப். உண்மை! உண்மை!! வாருங்கள், சந்நிதானத்திற்குப் போவோம். முதநூலுடன் இதையும் சேர்த்துவைத்துக் கும்பிடுவோம். திருசுதந்தரர்களே! நாளைமுதல் முருகன் சந்நிதானத்தில், தமிழ் மறை ஓதுபவர்களால் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழும் சேர்த்து ஓதப்பட வேண்டும்.

திருசு. ஆஹா! ஆட்சேபனை யில்லாமல். அபிஷேகப் பாலுக்குச் சக்கரை போட்டாப்பிலே இருக்கும். வாருங்கோ.

மூப். பகழிக் கூத்தரே! தங்கள் சுவடியை செந்திலாதிபன் சேவடியில் வையுங்கள்.

திருச்செந்தூர் பிள்ளைத்தமிழை, செந்திலாதிபனின் திருவடிகளில் சமர்ப்பித்து, எல்லோரும் கை கூப்பி வணங்குகிறார்கள்.



மேல்பூச்சு

திருவண்ணாமலையில் ஒரு வீதி. தோளிலே ஒரு தோல் துருத்தியும் கையில் ஒரு துணிப்பந்தும் வைத்துக்கொண்டு, ஈயம் பூசுபவன் ஒருவன் 'ஈயம் பூசலையோ ஈயம்' என்று கூவிக்கொண்டே செல்லுகிறான். பசியால் ஏற்பட்ட களைப்பால் அவன் குரல் கம்முகிறது. எதிரிலே ஒரு பேரீச்சம் பழக்காரன் வருகிறான்.

பழக்காரன். ஓட்டை ஒடைசல் ஈயம் பித்தாளைக்குப் பேரீச்சம்பழம், பேரீச்சம்பழம்........[ஈயம் பூசுகிறவனைப் பார்த்து] என்னா, நாயக்கரே! ஏன் ஒரு மாதிரியா இருக்கிறே?

ஈய. பசிதான். உன் அதிட்டம் நீ பளம் விக்கிறே....பசிச்சா ரெண்டை எடுத்துத் தின்னுக்குவே. எனக்கு அப்படியா?

பழ. நீயும் ரெண்டு நமச்சாரம், காரீயம் இதுகளைத் தின்னு பசி தீத்துக்குறதுதானே?

ஈய. உன் பேச்சைக் கேட்டால் உசிரே தீந்துபோகும். எந்த வீதிப் பக்கம் போறே?

பழ. புள்ளே குட்டிகள் எந்த வீதியிலே அதிகமோ அந்த வீதிதான். குளந்தைகள் காது கேக்கிறாப்பலே, பேரீச்சம் பழம்னு ஒரு சத்தம் போட்டா நம்மபாடு ஒரு ரூபாயாச்சு.

நாய. ஒரு ரூபாய்க்கா பளம் வாங்குறாங்க?

பழ. புள்ளே குட்டிக ஒரு சட்டியைக் கொண்டாந்து போடும். இன்னிக்கி விலேக்கு ஒரு ரூபா வந்துடும்.

நாய. இது ரொம்ப மோசம்.

பழ. இதுவா மோசம்! இனிக்க இனிக்கத் தின்னுப்பிட்டுல்ல கொடுக்கிருங்க.

நாய. சட்டி ஒரு ரூபா பொறும்கிறதைச் சொல்லுவியா?

பழ. இப்படி யெல்லாம் பாத்துகிட்டிருந்தா பொழைக்கவே முடியாது .... நீ எங்கே கூடவே வாரே?

நாய. பசிக்கிது. அதுதான் கூடவே...........

பழ. ஓசி கேக்கவா?....சரிதான். உனக்கும் நமக்கும் கட்டாது. நீ பழைய பாத்திரத்தைப் புதுசாக்கிறவன். நான் பழசே யில்லாமல் செய்கிறவன். உன்னேயும் என்னேயும் சேந்தாப் போலே கண்டுகிட்டா, ஓட்டை ஒடைசல் எனக்குக் கிடைக்காது. நீ வேறே வீதி பாரு.

நாய. ரெண்டு பளம்.

பழ. அடே போ, அப்பா! சும்மா. வியாபாரத்திலே வந்து ஓசி கேக்கறே. போ, போ.

இருவரும் எதிரெதிராக இரண்டு வீதிகளில் செல்லுகிறார்கள்.

திருவண்ணுமலேயில் மற்றொரு வீதி. அந்த ஒரு சைவ மடம். மடத்தின் உள்ளே பூஜைக் கட்டில் பண்டாரச் சந்நிதி ஒருவர் பூஜை செய்துகொண் டிருக்கிறார். பூஜைக் கட்டுக்கும் சமையல் கட்டுக்கும் இடையில் இருபது கெஜ தூரம் இருக்கும். நாலு கெஜத்திற்கு ஒருவராக, காருவார், பூசைப்பிள்ளே, தவசுப்

பிள்ளை, மூவரும் நிற்கின்றனர். பூஜை முடிகிறது. சுவாமியார் நைவேத்தியத்திற்காக, பஞ்சாமிருதத்தைத் தேடுகிறார்.

சாமி. சம்போ திருச்சிற்றம்பலம். காருவார்! ஏன் பஞ்சாமிருதம் படைக்கவில்லை?

காருவார். இதோ. [இரண்டடி சென்று] பூசைப் பிள்ளை! ஏன் பஞ்சாமிருதம் படைக்கவில்லை?

பூசைப்பிள்ளை. இதோ. [இரண்டடி சென்று] தவசுப்பிள்ளை! ஏன் பஞ்சாமிருதம் படைக்கவில்லை?

தவசு. இதோ. [இரண்டடி சென்று திரும்பி] ஹா மடத்தாச்சி கொண்டுவந்து வைக்கவில்லை.

சாமி. காருவார்! மடத்தாச்சியை அழைக்கட்டும்.

காரு. பூசைப்பிள்ளை! மடத்தாச்சியை அழைக்கட்டும்.

பூசை. தவசுப்பிள்ளை! மடத்தாச்சியை அழைக்கட்டும்.

தவசு. தவசுப்பிள்ளை நமசிவாயத்துக்கு மடப்பள்ளியிலேதான் திருப்பணி. மடத்தாச்சியை அழைக்கிறது என் வேலையில்லை. அதற்கு மடத்தாச்சியையே அனுப்பித்தான் தேடச் சொல்ல வேண்டும்.

பூசை. இப்போ நைவேத்தியம்?

காரு. இந்த விவகாரம் தீர்ந்தற்கு அப்புறம் தான்.

அப்பொழுது மடத்தாச்சி அவசரமாக உள்ளே வருகிறாள்.

மடத்தாச்சி. தவசுப்பிள்ளை அய்யா! அந்த....

பூசை. எங்கே அம்மா போனே? சந்நிதானம் நைவேத்யத்துக்காகக் காத்திருக்கு. பஞ்சாமிருதத்தை எடுத்துக்கொண்டு புறப்படு.

மடத். இதோ ஆகட்டும். [எடுக்கப் போகிறாள்.]

தவசு. [தடுத்து] தொடாதே; உனக்கெசமான் நானு? பூசைப்பிள்ளையா?

மடத். எல்லாருந்தான்.

தவசு. இல்லை, நான்தான்.

பூசை. இல்லை, எல்லாருந்தான்.

தவசு. சடை பத்திரம். சாக்ரதையாகப் பேசும்.

பூசை. வெள்ளை வேட்டிப் பண்டாரத்துக்கு இவ்வளவு திமிரிருந்தா, காவி வேட்டிப் பண்டாரத்துக்கு எவ்வளவு இருக்கும்? வாரும் சந்நிதானத்திற்கு.

தவசு. மடியை விடும். வாரும் சாமியார்கிட்ட.

பூசை. வாடா!

தவசு. போடா [இருவரும் சடையைப் பிடித்து இழுத்துக்கொள்ளுகிறார்கள்.]

மடத். அட, இதென்னடி அக்கிருமம்? ஓ சாமி........ [என்று கூவுகிறாள்.]

சாமி. காருவார்! என்ன கலகம்?

காரு. பூசைப்பிள்ளை! என்ன கலகம்?

பூசை. [சண்டையை பாதியில் விட்டு விலகி] தவசுப் பிள்ளை! என்ன கலகம்?

தவசு. [இரண்டடி சென்று] மடத்தாச்சி! என்ன கலகம்?

மடத். அதுவா மடத்துச் சோறுதான் கலகம்!

சாமி. [கோபத்துடன்] சோம்பேறிகள். நான் சொல்வதை ஐந்து பேர் திருப்பிச் செல்கிறீர்களோ தவிர, ஒருவராவது வேலை பார்ப்பதில்லை.

காரு. சந்நிதானம் ஆத்திரப்படக் கூடாது. அவடத்திலே பட்டத்துக்கு வருவதற்கு மூந்தியே நம்ம மடத்திலே பரம்பரையாய் வந்த பழக்கம் இது. சந்நிதானம், காருவார், பூசைப்பிள்ளை, தவசுப் பிள்ளை, மடத்தாச்சின்னு அப்படியே படிப்படியாத்தான் எந்தச் சேதியும் வரணும். ஏட்டிலே அப்படித்தான் இருக்கு.

சாமி. [திடுக்கிட்டு உணர்ந்து] ஓஹோ அப்படியா? வழக்கம் அப்படி இருந்தால் நாம் அதை மாற்ற விரும்பவில்லை. உம்.... இப்பொழுது நைவேத்தியம்.

மடத். அடுக்குச் சட்டியிலே ஈயம் இல்லீங்க, அதிலே பஞ்சாமிருதம் எடுத்தா கச்சிப்போகும்.

காரு. மடத்தாச்சி! நாங்கள் இருக்கையில் நீ நேரில் சந்நிதானத்திடம் உரையாடுவது சரியல்ல.

மடத். ஆமா. நீங்க அஞ்சு பேரும் விசயத்தைத் தெரிஞ்சுக்கிட்டு, சந்நிதானத்திலே சொல்லி, உத்திரவு வாங்கிறதுக்குள்ளே, ஒரு வருசம் ஆயிடும்; ஈயம் பூசினப்பிலேதான்.

சாமி. காருவார்! பழைய அடுக்குக்கு ஈயம் பூசுவது மடத்துப் பழக்கத்துக்கு விரோதமில்லையே?

காரு. இதைப்பற்றி ஏட்டிலே ஒன்றும் காணோம்.

சாமி. எப்போது பூசலாம்?

காரு. இப்பொழுதே பூசலாம்.

சாமி. பூசை முடிந்து பூசினல்? ....

காரு. பஞ்சாமிருதம் கச்சிப்போகும். சந்நிதானத்திலே பிரசாதம் எடுத்துக்கிறபோது குடலைப் பிரட்டும்.

சாமி. இன்றைக்கு நமக்கு பிரசாதம் இல்லா விட்டால் பாதகமில்லை.

காரு. மடத்திலே, பண்டார சந்நிதியும் சிஷ்ய கோடிகளும் தினந்தோறும் பூசைப் பிரசாதம் புசிக்கவேண்டும் என்று ஏட்டிலே இருக்கிறது.

சாமி. ஈயக்காரனை அழைக்கட்டும்.

மடத். கூட்டியாந் திருக்கேனுங்க.

ஈய. சாமி தெண்டம். [என்று உள்ளே நுழைந்து கும்பிடுகிறான்.]

சாமி. அப்பா! இந்த அடுக்குக்கு ஈயம் பூச வேண்டும். என்ன கேட்கிறாய்?

ஈய. ரெண்டணா கொடுங்க.

சாமி. ஒரு அணா....

ஈய. ஈயமே ஒரு அணா ஆகும். ஏழை வகுத்திலே அடிக்காதீங்க.

சாமி. சிவ சிவ, அப்பா! நான் பரதேசி; சொத்து என்னுடையதல்ல. இந்த மடத்துச் சொத்து அழிந்துவிடாமல் காப்பாற்றுவதற் காகவே நான் பட்டத்தில் இருக்கிறேன். என்ன ஒரு அணா சம்மதமா?

ஈய. சாமி, நான் காலம்பர முதல் சாப் பிடலீங்க. கொஞ்சம் பழைய கஞ்சி இருந்தா ஊத் தச் சொல்லுங்க. சாப்பிட்டுட்டுப் பூசிக் கொடுத் துட்றேன். காசே வேண்டாம்.

சாமி. என்ன காருவார்?

காரு. என்ன பூசைப்பிள்ளை?

பூசை. என்ன தவசுப்பிள்ளை?

தவசு. என்ன மடத்தாச்சி?

மடத். சோறு இல்லீங்க. காலம்பர பத்து விளக்கிறபோது நான் சாப்பிட்டேன்.

தவசு. பூசைப்பிள்ளை! மடத்தாச்சி சாப்பிட்டு விட்டார்களாம்.

பூசை. காருவார்! மடத்தாச்சி........

ஈய. [சிரிக்கிருன்] இல்லேங்கறத்துக்கு ஏழு பேரா சொல்லணும். இப்படி கொடுங்க பாத்திரத்தை. இதோ பூசிக்கொடுத்துட்றேன். கூலியை வாங்கிச் சாப்பிட்றேன்.

காரு. இந்தாப்பா! பூசைக்கு இடையிலே கருவூலம் திறக்கக் கூடாது. பூசை முடிந்ததும் சில்லரை எடுத்துத் தருகிறோம்.

ஈய. இப்பவே ரெண்டு மணி ஆகுது. பூசை முடியவும் போது விடியவும் சரியாயிருக்கும். பசிக்குச் சாப்பிட்டாப்பலேதான். அடுக்கு எங்கே கொடுங்க.

மடத். அதோ இருக்கு எடுத்துக்கோ..........

ஈய. கொஞ்சம் நெருப்பு. குழிதோண்டக் கரண்டி, எல்லாம் கொடுங்க.

காரு. என்ன வேண்டும்?

ஈயம். இல்லே, நான் இந்த அம்மாகிட்டவே கேட்டு வாங்கிக்கிறேன். அஞ்சு பேருக்கிட்ட கேட்க வேண்டாம்.

வாங்கிக்கொண்டு, மடத்து வாசலில் ஒரு குழி தோண்டி, உலேத் துருத்தியை வைத்துவிட்டு, நெருப்பை மூட்டிக் கொண்டே பாடுகிறன்.

வசிக்கும் மாந்தர் வழக்கத்துக்குள்ளே
பசிக்குச் சோறு பழக்கத்திலில்லே

புசிக்குங் கூழ் ஒரு நாழிகைக்குள்ளே
நசிச்சுப்போகுது தாழியினுள்ளே
ஏன் படைத்தாய் வயிறை, இறைவா, இறைவா
இறைவா இறைவா [ஏன்]

பழ. ஒட்டை ஒடைசல், ஈயம் பித்தாளைக்குப் பேரீச்சம்பழம், பேரீச்சம்பழம்.

ஈய. ஏ வியாபாரி! இங்கே வாய்யா.

பழ. என்ன நாயக்கரே! கூலி கிடைச்சுதா?

ஈய. இருபது நாழிகைக்கு அப்புறம் இப்பத் தான் ஒரு வேலை கிடைச்சுது. கூலி எப்பக் கிடைக்குதோ?

பழ. [உலையிலிருக்கும் அடுக்குச் சட்டியைக் கூர்மையாகப் பார்த்துக்கொண்டே] அதென்ன சட்டி? ஈயம் பூசி வச்சிருக்கியா? உஉ........உ சாப்பிட்டியா?

ஈய. சாப்பிட்டிருந்தா உன்னை யேன் கூப்பிட்றேன்? இந்தா அண்ணே, இரண்டு அணு கூலி பேசி யிருக்கேன். வாங்கி உன் கையிலே கொடுத்துட்றேன். இப்போ கொஞ்சம் பழம் கொடு. பசி பிராணன் போகுது.

பழ. கையிலே ரொக்கம் இருந்தாப் பேசு.

ஈய. என்ன அண்ணே! என்னை நம்பப் படாதா?

பழ. நம்பிக்கை யெல்லாம் நம்பளுக்குள்ளே தான் இருக்கணும். வியாபாரத்துலே அதெல்லாம் உதவாது.

ஈய. நான் எப்பவாச்சும் உன்னை மோசம் பண்ணியிருக்கேனு?

பழ. நான் எப்பவாச்சும் உங்கிட்டே அம்பி ட்டுக் கிட்டிருக்கேனு?

ஈய. இந்தா, நம்பிக் கொடு. கூலி வந்ததும் தந்துட்றேன்.

பழ. அட நீங்கள்ளாம் பொழைக்கத் தெரியாத ஆளு அப்பா. கையிலே வெண்ணேயை வச்சிக்கிட்டு நெய்க்கு அழுகிறியே. அந்த அடுக்கை இங்கிட்டுபோடு;வேணும்கிற பழத்தை எடுத்துக்கோ; நல்லாப் பசிதீரச் சாப்பிடு.

ஈய. ஐயோ, அது மடத்து அடுக்கில்லே?

பழ. பழம் மட்டும் என்னுதா? எங்கேயோ விளஞ்சு, எங்கேயோ வந்ததுதானே? சும்மா இதுக் கெல்லாம் யோசிக்காதே. பசிக்குத் திருடினு பாவம் இல்லே.

ஈய. சரி. இந்தா பழத்தைப்போடு. [அடுக்கைக் கொடுத்துவிடுகிருன்.]

பழ. இந்தா பழம். [ஒரு கையால் ஒரு பிடி அள்ளிக் கொடுக்கிருன்.]

ஈய. இவ்வளவுதானு?

பழ. இது போதாதாக்கும் நீ கொடுத்த துக்கு.

ஈய. அடுக்குக்கும் இதுக்கும் சரியா?

பழ. மடத்துதில்லே அடுக்கு. உனக்குக் சும்மா வந்ததுதானே.

மடத். [மடத்தாச்சி வெளியே வந்து] ஏன் அய்யா ஈயம் பூசியாச்சா?

பழ. நான் வரேனப்பா. [என்று அடுக்கை எடுத் துக் கூடையில் போட்டுக்கொண்டு போகிருன்.]

மடத். அய்யோ அடுக்கு, அடுக்கு, திருடன், திருடன்.

காரு. புடி, விடாதே.

பூசை. புடி, விடாதே.

தவசு. புடி, விடாதே.

மடத். புடி, விடாதே.

தவசு. உங்கிட்டச் சொன்ன நீ யாருகிட்டவோ உத்திரவு போடுறியே?

மடத். இத்தனை பேர் ஆம்பிள்ளே இருக்கிற போது நான் அந்த ஆளை எப்பிடிப் பிடிக்கிறது?

சாமி. என்ன கலகம்? [என்று வெளியே வருகிறார்.]

காரு. இந்த ஈயம் பூசறவன் திருடன். அந்தப் பழக்காரன் இவனுக்கு உள்கை.

பழ. [முறைப்பாக] அட, போ சாமி, யாரு சாமி திருடன், என்ன நினைச்சுக்கிட்டே. வா டேசனுக்கு; வா பாத்துப்பிடுவோம்.

காரு. ஏண்டா, திருடியதும் திருடிவிட்டு என்னையா ஸ்டேஷனுக்கு அழைக்கிறாய்?

பழ. யாரய்யா திருடினது? ஒடைசல் பாத்திரத் துக்குப் பழம் கேட்டான். வாங்கிக்கிட்டுக் கொடுத் தேன். இந்தா உன் ஓட்டை அடுக்கு [என்று அடுக் கைக் காருவார் கையில் கொடுத்துவிடுகிறான்]

சாமி. அப்பா என்ன நடந்தது?

ஈய. சாமி, பசி தாங்க முடியல்லே. பழக் காரர் வந்தாரு. வயத்துலே பசியும் எதுத்தாப்பிலே பழமும் இருந்தது. மனசு கேக்கலே. அடுக்கைப் போட்டு வாங்கித் தின்னுட்டேன்.

சாமி. அப்பா, நீ செய்தது திருட்டு அல்லவா?

ஈய. ஆமாம், திருட்டுத்தான்.

காரு. அடே பெரிய சத்தியசந்தன். ஆமா, திருட்டுத்தானும், போடு ஒண்ணு.

சாமி. அப்பா! அந்த அடுக்கு எங்கே?

பழ. இதோ இருக்கு.

சாமி. உனக்குப் பணம் தரச்சொல்கிறேன். அதை இப்படிக் கொடு. அப்பா இதோ பார். இது பித்தளை. சுபாவத்தில் களிம்பேறக் கூடியது எதை எடுத்தாலும் கைக்கும், இனிமேல் கைக்குமா?

ஈய. கைக்காதுங்க ஆறேழு மாதத்திற்கு அப்படியே இருக்கும்.

சாமி. ஏன்?

ஈய. ஈயம் பூசி யிருக்குது.

சாமி. இதைப் போலத்தான் மனமும், கைக்கும் சுபாவம் உள்ளது. நீ உண்மையில் நல்லவனாக இல்லாவிட்டாலும் பித்தளைக்கு ஈயம் பூசுவது போல், நல்லவனாக நடக்கவாவது விரதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஈய. [ஆச்சரியத்தோடு] எடுத்துக்கிட்டா?

சாமி. ஒரு ஆறு மாசத்துக்காவது நல்லவனாக இருக்கலாம்.

ஈய. [யோசித்து] சாமி, என் கண்ணை திறந்து விட்டுட்டீங்க. உங்க கையாலே ஒரு காசாயம் கொடுத்துடுங்க.

சாமி. ஏனப்பா?

ஈய. ஈயம் பூசிக்கிறேன். அந்த ஈயம் அழியரத்துக்கு முன்னாலே காயம் அழிஞ்சா நல்லவனாகவே போய்விடுவேன்.

சாமி. இந்தா. இதை உடுத்திக்கொள். சென்று வா. நான் உன்னை அடுத்த தடவை பார்க்கும்போது, ரொம்ப நல்லவனாக இருக்க வேண்டும்.

ஈய. உத்திரவு.

பத்து வருஷங்களுக்குப் பிறகு, மடத்திலே பண்டாரச் சந்நிதிகள் மூப்பினால் தளர்ச்சியடைந்து, சிரமப்பட்டுக் கணக்குப் பார்த்துக்கொண் டிருக்கிறார். காருவார் கணக்குப் படிக்கிறார்.

காரு. பெரிய மடத்துப் பத்தாவது பட்டம், தீர சண்டேஸ்வர சாமிக்குச் சொந்தமான தென் ஆற்காடு ஜில்லா, சிருகம்பூர் வட்டம், பதினேழா நெம்பர் அனுமத்துக் கிராமம் ஒண்ணுக்கு ஆயக்கட்டு குளப் பிரமாணம் வேலி 25 காணி ரெண்டரைக்கு 1345-ம் பசலி நஞ்சை புஞ்சை சிவாதாயம், சொர்ணாதாயம், மாவடை, மரவடை விபரமடங்கிய கோஷ்பாரா. *உள்ளே ஒரு சாது நுழைகிறார்.*

ஈய. ஸ்வாமியார் இருக்கிறாரா?

சாமி. ஏன் வாருங்கள். சற்று இருங்கள். இந்தக் கணக்கைக் கேட்டுவிட்டு வருகிறேன். உம்.... படிக்கட்டும்.

ஈய. குருநாதா! இந்தக் கட்டையைத் தெரியவில்லையா?

சாமி. குருநாதனா?....யார் இதுவா?

ஈய. ஆம். ஈயம்பூசித் திரிந்த எனக்கு இன்ப வாழ்வு தந்தது தாங்கள்தானே?

சாமி. ஹா! ஈயம் பூசுபவரா? பத்து வருஷங்களாயிற்றே. தாங்களா இப்படி............

ஈய. ஆம் ஸ்வாமி, பத்து வருஷங்கள் ஆன போதிலும் ஈயமும் அழியவில்லை; காயமும் அழிய வில்லை. ஏழைகளுக்கு உழைத்து இன்பத்தை அனுபவித்துக்கொண் டிருக்கிறது.

சாமி. திருவுள்ளச் சம்மதம் அப்படியிருக் கிறது; .... இந்தப் பாவிக்கோ இன்னும் விடுதலை கிடைக்கவில்லை. கணக்கு ஓயவில்லை.

ஈய. என்ன அப்படி?

சாமி. ஆமாம், நான் துறவியாக இருந்தும் சொத்துக்களைக் காப்பாற்றும் காரியத்தில் இறங்கி, காவல்காரனாகவே ஆகிவிட்டேன். தாங்களோ நல்ல வேஷம் போட்டீர்கள். நல்லவனாகிவிட்டீர்கள்.

அதே சமயத்தில் வெளியே இருந்து ஓட்டை, உடைசல் ஈயம், பித்தாளைக்குப் பேரீச்சம்பழம் என்ற குரல் கேட்கிறது.



பொன்மாலை

ஒரு தர்மாசனக் கிராமம். கிராமவாசிகள் எல்லோரும் பிராமணர்கள். முன்னொரு காலத்தில் வேதவிதிப்படி நடந்து, லோகாஸ் ஸமஸ்தா சுகினோபவந்து என்ற வாக்கியத்தின் அர்த்தத்தை உணர்ந்து நடந்ததற்காக, அரசரால் அளிக்கப் பட்டது அது. இன்றும் அந்த வம்சத்தார்தான் அங்கு இருக் கிறார்கள். ஆனால் வேதம் இல்லை. வெற்றிலை, பாக்கு, புகையிலை தான் இருக்கிறது. சாந்தி நிலவவில்லை. பேராசை நிலவுகிறது. உழைப்பு இல்லை. சோம்பேறித்தனம் இருக்கிறது. தெய்வ பக்தி இல்லை. திண்ணையி லிருந்தால் தெய்வம் படியளக்கும் என்ற மூடநம்பிக்கைதான் இருக்கிறது. முன்னோர் கட்டிய வீடுகளில் பதினாறு வீடுகள் மாடி இடிந்தும் பழுது பார்த்தும் இருக்கின்றன. அவர்களின் வம்சத்தோர்களும் அதே ரீதியில் இருக்கிறார்கள். இரண்டு வரிசைகள். வரிசைக்கு எட்டே வீடுகள். வீட்டுக்கொரு விதவையும் ஒரு வேதாந்தி யும் உண்டு. பகலெல்லாம் சீட்டாட்டம். அஸ்தமித்த வுடன் சாப்பாடு. இத்யாதிதான் வேலைகள். அதிலே கீழண்டை கோடி சுந்தரமய்யர் வீடு. அந்த வீட்டுக் கூடத்தில் அவர் மனைவி பொன்னம்மாள் நிற்கிறாள். தைத்த புடவை. தளர்ந்த கொலுசுகள். நெற்றியில் நிறைய மஞ்சள் குங்குமம். இவைதான் அலங்காரம். அவளுக் கெதிரில் உடுக்கடித்துக் குறிசொல்லும் ஒருவன் உட்கார்ந்திருக்கிறான்.

பொன்ன. என் மனசிலே ஒரு ஆசையிருக்கு. அது எப்போ முடியும்னு சொல்லு.

உடுக்கடிப்பவன். [உடுக்கடித்துத் தெய்வ வணக்கம் செய்துவிட்டுப் பாடுகிறான்.]

அம்மாள் மனசிலே
    ஆசையொண்ணு தானிருந்து
சும்மா துடிக்குதப்பா—
    சோலைமலைப் பேய்க்கருப்பா—டும் டும் டும்—

உடுக். நெசந்தானா?
பொன். நெசந்தான்.

நெஞ்சில் நினைப்புவந்தா
    நித்திரையும் கொள்ளுதில்லே;
மஞ்சத்திலே படுத்தா
    மனசும் உறங்குதில்லே—டும் டும் டும்—

உடுக். நெசந்தானா?
பொன். நெசந்தான்.
உடுக்.

குடமிடுக்கும் கையினிலே,
    கோலமிடும் கையினிலே,
கொஞ்சிவரும் பிள்ளையொண்ணு
    கொண்டிடுக்க எண்ணுகிறாய்.
புள்ளிவைத்துக் கோலமிட்ட
    பொண்ணரசி கையாலே,
புள்ளை முகத்திலொரு
    பொட்டுவைக்க எண்ணுகிறே.
சித்திரமெல்லாமெழுதி
    செம்மை வந்த கையாலே,
பெத்தகண்ணில் மையெழுதிப்
    பெருமைப்பட எண்ணுகிறாய்.
செல்லச் சிறுகுழந்தைத்
    தெய்வம் தனக்கேதான்
திருமஞ்சனமாட்டித்
    தெரிசிச்சுப் பூவெடுத்து,
சிண்டைச் சிடுக்கெடுத்து,
    செம்பங்கித் தைலமிட்டு,

கொண்டை முடிஞ்சுவிட்டு,
　　கோலொன்று கைக்கொடுத்து
மாதாவே உன்னையவன்
　　மாட்டாக்கி ஓட்டிவர
நீதான் மகிழ்ந்திடவே
　　நினைக்கிறாய் நிசந்தானா ?

பொன். நிசமில்லே.

உடுக். பிள்ளை கிடைக்க வேணும்கிற ஆசையில்லையா ?

பொன். ஆசையில்லாமல் இருக்குமா? இப்போ நான் கேட்டது அதில்லே.

உடுக். இல்லையா ? இல்லையா ? அப்படியானால்

தன்புருஷன் இன்னொரு
　　தையல் பொறகாலே
தடுமாறி நிக்கிறதைத்
　　தடுத்துவிட எண்ணுகிறாய்.

பொன். சேச்சே. எங்காத்துக்காரரைப் பத்தி அப்படியெல்லாம் சொல்லாதே. பாவம்.

உடுக்.

தாயாதி பங்காளிச்
　　சண்டையுண்டு சண்டையுண்டு;
தானே விலகிவிடும்
　　தையலரே தையலரே.

பொன். தாயாதியா ? அப்படி ஒத்தருமே கிடையாதே.

உடுக். சுடலைமாடா ஏண்டா இன்னும் சோதிக்கிறே சொல்லப்பா............ [ஆவேசம் வந்தவன்போல்]

தண்ணிக்குடமெடுத்து—டும்
　　தனிவழியே நீபோக—டும்
தடுக்கிவிட்டபோது அம்மா—டும்
　　தானே பயந்துகொண்டாய்—டும்
காட்டேரிப்பேய் இருந்த—டும்
　　கட்டையது தட்டியதால்—டும்
கண்டே பயந்துகிட்ட—டும்
　　காரியத்தால் வந்தவினை—டும் டும் டும்

பொன். [திடுக்கிட்டு] என்ன பிசாசு பிடிச்சிருக்கா? எனக்கா?

உடுக். ஆமா தாயே.

பொன். அப்பா நீ குறி சொன்னது போரும். மூட்டையைக் கட்டிண்டு புறப்படு.

உடுக். அதுக்கு ஒரு சேவல் பலியிட்டு, ஒரு பள்ளயம் போட்டால் போதும் தாயி.

பொன். சரிதாண்டா போ.

உடுக். [மேலும் ஆவேசத்துடன்]

போவென்று சொல்லி என்னை
　　புட்ரியைப் பிடிச்சித்தள்ளும்
பொல்லாப் பயபேயே
　　பொறப்படுடா வீட்டைவிட்டு.

பொன். ஏண்டா நிசமாத்தான் சொல்றியா?

உடுக். [மேன்மேலும் ஆவேசத்துடன்]

டாப்போட்டு என்னையே நீ
　　டக்குவிட்டுப் பேசுகிறே
டுப்போட்டு உன்னையே நான்
　　டுட்டிப்பண்ணிக் காட்டிடுவேன்.

பொன். அய்யய்யோ. இதென்னடா சங்கடம். போன்னு சொன்னு, என்னையே பிசாசுங்கிறானே

இதச் சமயத்தில் ரேழிக் கதவு திறக்கப்படுகிறது. சுமார் 60 வயதுடைய தப்பிப் பாட்டி அம்மாள் கையில் ஒரு வறட்டியுடன் உள்ளே நுழைகிறள்.

குப்பி. என்னடிம்மா. பிராம்மண ளாத்திலே உடுக்கடிக்கிற சத்தம் கேக்கறதேன்னு பாத் தேன். உங்காத்திலேதானு?

பொன். வாங்கோ பாட்டி. நல்ல வேளைக்கு தெய்வம் போல வந்தேள். இவனை ஒரு குறி பாக்கிறத்துக்காகக் கூட்டிண்டு வரச் சொன்னேன். முதல்லே அது, இதுன்னு சொன்ஞன். அதெல் லாம் இல்லைடான்னேன். கடைசிலே என்னையே ஒரு பிசாசு பிடிச்சுண் டிருக்கிறதாச் சொன்ஞன். எனக்குக் கோபம் வந்துடுத்து. எழுந்திருந்து போடான்னேன். இரைஞ்சு கத்தினேன். உடனே அதைப் பிசாசுக் கோளாறுன்னு வைச்சிக்கிண்டு சத்தம் போட ஆரம்பிச்சுட்டான். நல்ல வேளைக்கு நீங்க வந்திகளே. பிரம்பை எடுக்காமல் விட்டானே?

குப்பி. ஏண்டா சின்னஞ் சிறுசுகள் இருக்கிற இடத்திலே பயமுறுத்தலாம்னு பாத்தே? கூலியைக் குடுத்துப் போகச் சொல்லுடீ.

பொன். கூலியை முதல்லேயே வாங்கிண்டுட் டான் பாட்டி. இப்போ போனுப் போதும்.

உடுக். இதோப் போயிட்டேம்மா. [சில்லரையை எடுத்துக்கொண்டு வெளியே செல்லுகிருன்.]

குப்பி. ஏண்டி இந்தக் கட்டேலேபோறவன் கிட்டப் போயி குறிகேப்பியோ? உனக்கு ஏதாவது பாக்கணும்னு நம்ம மலையாளம் ஸோஸ்யர் கிட்டப் பாக்கப்படாதோ?

பொன். அப்படியிருந்தா வரச் சொல்லுங்களேன், பார்ப்போம்.

மேலண்டைக் கோடியில் ஒரு வீட்டுத் திண்ணை. பகல் 3 மணி. அதிலே சுந்தரமய்யரும் இன்னும் நாலு பேரும் சீட்டாடிக்கொண் டிருக்கிறார்கள். விழுப்பாகாமல் இருப்பதற்காக, பழைய நெல் சாக்கை மடித்துப் போட்டு அதில் உட்கார்ந்து ஆடுகிறார்கள். பக்கத்தில் ஒரு கூஜாவில் தீர்த்தமும் ஒரு பழைய வெத்திலே மரவையும் இருக்கிறது. பட்டாமணியம் வாசு. தடிப் பிரமச்சாரி கோண்டு. புரோகிதர் நாணு சாஸ்திரி. நால்வரும் ஆடுகிறார்கள். மற்றொரு திண்ணையில் ஒருவர் தூங்குகிறார். வேர்வையில் நமுத்த சீட்டுக் கட்டு சொத் சொத் தென்ற சத்தத்துடன் கலைத்துப் போடப்படுகிறது.

வாசு. என்ன? எட்டுத் துருப்பு. 200 முதல் கேள்வி? சரிதானே;

சுந்தர. அஞ்சு கறுப்பிலே தோல்வி. தோற்றகை, கிளாவர் ராணியைக் கோர்த்துக் கழுத்திலே கட்டிக்கணும்.

வாசு. அதைச் சொல்லாதேங்கோ. அந்தப் பய பிரம்மசாரி ஆனந்தமாகக் கழுத்திலே கட்டிக் கொண்டு போயிடுவன்.

சுந்தர. எலே கோண்டு! எப்படா கல்யாணம் பண்ணிக்கப் போறே?

கோண்டு. இந்த ஆட்டம் முடியட்டும். அப்புறம் பேசிப்போம். சுந்தரமண்ணு கிளாவர் ராணி வேண்டாம். தலைகாணியைத் தூக்கித் தலையிலே வச்சுக்கறது.

சுந்தர. அது வேண்டாம்டா. விழுப்பாப் போகும். வேறே ஏதாவது சொல்லுங்கோ.

கோண். கிளாவர் ராணிக்கு என்ன குத்தம்?

வெங். சுந்தர மாமாவுக்கு இஷ்டந்தாண்டா. ஆனா, அவர் கழுத்திலே ராணியைக் கண்டா, ஆத்துலே பொன்னம்மா அம்மாமி கோவிச்சுக்குவா.

சுந்தர. எலே அரட்டைக்கல்லி! பேசாதே. நான் தானேடா கேள்வி. இரு நூறு.

வெங். அடே சீட்டைப் பாக்கவே யில்லையே.

சுந்தர. அதிஷ்டம் பாக்கியம்டா. இதுக்குப் பாக்கணுமாக்கும்.

கோண். பத்து.

சுந்தர. கூடப் பத்து.

கோண். சரி விட்டுட்டேன்.

வாசு. உ. உ.

கோண். மாமா....உ....இறங்குங்கோ.

சுந்தர. [கீழே இருந்த சீட்டுகளை எடுத்துப் பார்த்துவிட்டு] அடே! ஆட்டம் தோத்திடா.

கோண். என்ன மாமா?

சுந்தர. கிளாவர்லே ராணி, மூணு தழை. மத்த ஜாதியிலே எல்லாம் எட்டாம் பந்து, ஏழாம் பந்து.

வேலா. [இந்த சமயத்தில் சுந்தரமய்யரின் பண்ணைக் காரன் வேலாயுதம் வருகிறான்.] சாமி கும்பிடுறேன்.

சுந்தர. என்னடா வேலு—டே [கோண்டுவைப் பார்த்து] டே கலைத்துப் போடுடா. இதோ வந்து விட்டேன். ஏண்டா, உழவு முடிஞ்சுதா?

வேலா. நாத்தங்கால் ரெண்டும் உழுது போட்டாச்சு. ஆத்தியடிச் செய்....தான்....

சுந்தர. அதுக்கென்ன?

வேலா. அதுலே கரடு சாய்த்திங்க. நம்ம

குட்டையை வச்சுக்கிட்டு ஆள உளுக முடியாது. எங்கேயாவது கூலிக்குப் பெரிய மாடா புடிச்சா தான்.

சுந்தர. அந்த முடுக்கு வீட்டுக்காரன் காளை யைக் கேளுவே. போரடியலும்போது ரெண்டு சிண்டு வைக்கல் கொடுத்துடுவம்.

வேலா. அவன் சந்தைக்கு வாடவை போரவ னுல்லே; லேசிலே தரமாட்டானுங்களே. நீங்க வந்து ஒரு வார்த்தை சொன்னு........

சுந்தர. அதெல்லாம் எனக்குத் தெரியாது வேலா. எப்படி உழுவியோ இல்லையோ. நீயே பாத்துக்க போ.

வேலா. நீங்க கேட்டா நல்லாருக்கும்.

சுந்தர. நான் கேட்டா என்ன, நீ கேட்டா என்னடா? போ. போ........என்னடா கோண்டு! கலச்சுப் போட்டியா?

கோண். ஒங்களுக்காகத்தான் காத்திண்டிருக் கோம். அடே! கறுப்பைத் தூக்கி மாமா கையிலே குடுடா.

சுந்தரமய்யர் வீட்டில், முன்பு உடுக்கடித்தவன் உட்கார்ந்திருந்த விடத்தில், இப்பொழுது மலையாள சோசியர் உட்கார்ந்திருக்கிறர். குப்பிப் பாட்டி பரமானந்தமாக நின்று கொண்டிருக்கிறள். சோசியரிடம் தன் ஜாதகத்தைக் கொடுத்து விட்டு, பொன்னம்மாள் அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டே நிற்கிறள்.

சோசியர். இந்த ஜாதகனுக்கு........................

குப்பி. இது ஆம்பிளை ஜாதகமில்லே.

சோசி. ஞங்களுக்கு இந்த வித்தியாசமெல்லாம் கிடையாது. பிறந்ததுக்கு அப்பறம் ஏற்பட்டது தான் ஆண் பெண் என்ற வித்தியாசம். பிறக்கறத்துக்கு முன்னலேயே இருந்து ஜாதகம் ஏற்பட்டு விடுகிறது.

குப்பி. இது எல்லாம் எங்களுக்கு எங்கே தெரியும்?

சோசி. இந்த ஜாதகனுக்கு அதிர்ஷ்டம் கர்ப்பத்திலேயே செல்லாயிடுத்து.

குப்பி. ஊம்..........

சோசி. ஆயுள் பலம் பூர்ணமாமிருக்கு.

குப்பி. அதிர்ஷ்டம் போயிடுத்து. ஆயுசு மட்டும் இருக்காக்கும்?

சோசி. ஆமா!

பொன். இதுக்கு ஜாதகமே பார்க்க வேண்டாமே. அதுதான் நடவடிக்கையிலேயே தெரியறதே.

சோசி. களத்திரத்திலே தோஷமிருக்குன்ன!

குப்பி. அட பாவமே!

சோசி. ரெண்டு களத்திரம்னுகூடச் சொல்லலாம்.

பொன். போதும் பாட்டி, ஜாதகம் பாத்த லட்சணம்.

குப்பி. சொல்லட்டுமேடி, கேட்போம்.

பொன். சொல்லிக் கிழிச்சான்! அவன் சொல்றபடி பாத்தா, நான் இன்னொரு தடவை கல்யாணம் பண்ணிக்கணும்.

குப்பி. ஏண்டி! இது ஒன் ஜாதகமா?

சோசி. அது இந்த அம்மா ஜாதகமா?

குப்பி. ஆமா!

சோசி. அல்ல. ஈ ஜாதகமே தப்பாயுண்டே. அது போகட்டே. அப்படியானு நீங்க கேக்க வந்த விஷயம் இப்போதான் தெரிஞ்சுது.

குப்பி. நல்ல வேளை! பாத்தியாடி பொன்னம்மா! என்னமோ பொன்னம்மா! நான் சொன்னு மட்டும் ஒருத்தரும் நம்பறதே யில்லே. ஜோஸ்யரே! சொல்லுங்கோ!

சோசி. இவாள் மனசிலே ஒரு அபிலாஷை இருக்கு.

குப்பி. ஆமா. ஒரு ஆசை இருக்கு.

சோசி. அது முடியுமா, முடியாதான்னு கேக்கிறேள்.

பொன். ஆமா. அதைத்தான் கேக்கிறோம். கிடைக்குமா, கிடைக்காதா?

சோசி. கிடைக்கும். இந்த சுக்கிர திசை போய் அடுத்த திசை ஆரம்பத்திலே கிடைக்கும்.

குப்பி. நான் அப்பவே சொன்னேன் பாத்தியோ. பொன்னம்மா! சில்லறையை எடுத்துக் கொடு.

பொன். ஆமா, பாட்டி! அது என்னங்கற தேச் சொல்லல்லியே!

குப்பி. பாத்தியா, மறந்துட்டேன். ஜோஸியரே! சொல்லுங்கோ.

சோசி. இந்த அம்மாவுக்கு தோளிலே தாலி தொங்கத் தொங்க கட்டின மாங்கல்யத்தோடே போகணும்னு ஆசை. அது கிடைக்கும்.

பொன். அய்யய்யோ !!

சோசி. என்ன அய்யய்யோ? அந்த எண்ணம் இல்லியா?

பொன். அது....அது....இல்லேன்னு சொல்ல முடியுமா? நான் கேட்டது அது இல்லே.

சோசி. அதெல்லாம் மறைக்காதேங்கோ. நான் வரேன்.

பொன். போயிட்டு வாங்க. [சோசியர் போகிறார்.]

குப்பி. ஏண்டி, பொன்னம்மா! உனக்கேண்டி இந்த எண்ணம் இப்போ வந்தது?

பொன். பேசாமெ இருங்கோ பாட்டி. நான் கேக்க வந்தது வேறே. இவர் பாட்டுக்கு ஏதோ உளறுறார்.

குப்பி. என்னமோ பொன்னம்மா! நீ எதை வேணும்னாலும் சொல்லு. மலையாள ஜோசியர் பொய் சொன்னார்னு மட்டும் சொல்லாதே. இதெல்லாம் வெறுமனே சொல்லுறே. இதைவிடப் பொம்மனாட்டிக்கு என்னடி பாக்கியம் இருக்கு?

ரேழிக் கதவு திறக்கப்படுகிறது. வாசற்படி அருகில் ஊமை ஒருவன் நிற்கிறான். நெற்றியில் சிறிது சந்தனம் இட்டிருக்கிறான். வேஷ்டியை ஆந்திரர்கள் கட்டுவது போல் தூக்கிக் கட்டியிருக்கிறான். கையில் ஒரு செம்பு வைத்திருக்கிறான். உள்ளே நிற்பவர்களுக்கு தன் வருகையைத் தெரிவிப்பதற்காக.

ஊமை. பா....பா....ஓ....ஓ....ஓ...........

குப்பி. [பொன்னம்மாளும் குப்பிப் பாட்டியும் திரும்பிப் பார்க்கிறார்கள். குப்பிப் பாட்டி ஆனந்தமாகச் சொல்லுகிறாள்] அடியே பொன்னம்மா! தேடிப் போன பச்

சிலே காலிலே இடிச்சாப்பலே இருக்குடி. ஊமைச் சோசியன் வந்திருக்காண்டீ!

பொன். இவனுக்கு ஜோசியம் தெரியுமா?

குப்பி. என்னடி இப்படிக் கேக்கறே! இவா ஏழு பேர் அண்ணன் தம்பி. ஏழு பேரும் ஊமை. ஏழு பேருக்கும் ஜோஸ்யம் வரும். இது லோகப் பிரசித்தமாச்சே..............இங்கே வா. வந்து உன் கையைக் காமி.

பொன். ஏன் பாட்டி! பணம் ஏதாவது அதிகமாக் கேப்பானே?

குப்பி. ஒரு அணக் குடுத்தாப் போரும். உனக்கு வேணுங்கற தெல்லாம் சொல்லுவான். கையை நன்னு அலம்பிக்கிண்டு வா. [பொன்னம்மாள் செம்பில் ஜலம் எடுக்கப் போகிருள்.]

ஊமை. உ உ உ உ உ உ உ [சாப்பாடு இல்லே. பசி தாங்க முடியவில்லே என்ற பாவனேயில், வலது கையை வாயருகில் காட்டி, பிறகு கையை அசைக்கிருன்.]

குப்பி. [கையை அலம்ப வேண்டாங்கருன்.] அடியே, வேண்டாண்டி அம்மா. அதிர்ஷ்டத்தைப் பாக்கற போது அலம்பப் படாதோ என்னமோ? இந்தா டாப்பா, நன்னுப் பார்த்துச் சொல்லு.

ஊமை. ஆபா........காபி....கா....உம்........[பசிக்கு ஏதாவது வாங்கித் தின்ன பணம் கொடுங்கள் என்ற பாவனேயில் கையை சுண்டிக் காட்டுகிருன்.]

பொன். கையைச் சுண்டிக் காட்டருனே? என்ன?

குப்பி. அதுதான் பணம்.

பொன். அம்மாடி! இவந்தான் பாட்டி என் மனசிலிருக்கிறதை அப்படியே எடுத்துச் சொன்னவன். பணம்தான். அதைத்தான் நான் கேட்டது.

ஊமை. அப்பா....பா....அபா....அபா........[காசு இல்லாவிட்டால் அரிசியாவது கொடுங்கள் என்ற பாவனையில் சொம்பைத் தூக்கிக் காட்டுகிறான்.]

குப்பி. என்னடி, சொம்பைத் தூக்கிக் காட்டறான்?

பொன். பேசாம இருங்கோ பாட்டி. உங்களுக்குத் தெரியாது........ஏண்டாப்பா! குடத்திலே இருக்கிந்றியா ?

குப்பி. என்னடி குடத்திலே இருக்கு?

பொன். அதுதான் பணம்.

குப்பி. என்னடி, என்னமோ குனிஞ்சு வெட்டிக் காமிக்கிறான்? வேலை வெட்டி செய்ய முடியாது பிச்சைப் போடுங்கறானா?

பொன். பூமிக்குள்ளே இருக்கு, வெட்டி எடுக்கணுங்கிறான்?

ஊமை. ஆ....மா....மா....த....ா........

பொன். எப்பக் கிடைக்கும்?

ஊமை. உ....உ....உ........

பொன். ஆஹா!..........

குப்பி. எனக்கொண்ணும் தெரியாதுங்கறான்.

பொன். உங்களுக்குத்தான் ஒண்ணுந் தெரியாது. இப்பவே அதுக்கான முயற்சியைப் பண்ணி ஆகணும். இல்லாட்டாக் கிடைக்காதுங்கறான்.

குப்பி. எங்கே இருக்காம்?

பொன். நீ சொல்றது எந்த இடத்திலே இருக்கு? [எங்கே என்று கையை மடக்கிக் கேட்கிருள்.]

ஊமை. அபா....அபா.... [தன் ஊர் முதலியவற்றைச் சொல்லுகிருன்.]

பொன். வடக்கே.

ஊமை. ஹா....ஹா....

பொன். அய்ங்காத வழிலே.

ஊமை. ஹா....ஹா....

பொன். ஒரு கோட்டை யிருக்கு.

ஊமை. ஹா....ஹா....

பொன். அங்கே ஒரு கோயில். சரிதான். பொன்னங் கோட்டை புதையலேத்தான் இவனும் சொல்ருன். அப்பா என் வயத்திலே பால் வார்த்தேடாப்பா. இதுக்குத்தாண்டா ஊளூரா ஓடி ஒவ்வொரு சோசியனைக் கேட்டேன். ஒரு கட்டாலே போறவனுக்கும் உனக்குத் தெரிஞ்சது தெரியல்லே. இந்தா ஒரு ரூபா வச்சுக்கோ. வயிறு நிறையச் சாப்பிடு போ........

ஊமை. ஹாபா ....ஹாபா [போகிருன்.]

குப்பி. என்னமோ பொன்னம்மா எனக் கொண்ணும் புரியலே. இந்தக் காலத்துப் பொண்; உனக்கு உள்ள புத்தியும் சாதுர்யமும் யாருக்கு இருக்கு? இந்தா இந்த விராட்டியிலே ரெண்டு தணல் போடு.

பொன். பாட்டி இது மட்டும் கிடைச்சுட்டா....

குப்பி. பட்டிக்காட்டை மறந்துடுவே. ஜோராப் பட்டணத்திலே போய், வீடு வாங்கிடுவே.

பணமும் காசும் பவுன் மாலையுமா விளங்குவே! நான் தான் அப்பவே சொன்னேனே....ஊமைச் சோசியன் சொன்னுத்தான் உன் மனசுபோலே இருக்கும்னு. சரி நாழியாச்சு நான் வரவா?

பொன். ஒண்ணும் ஆச்சரியப்படாதேங்கோ பாட்டி. நேத்திக்கு காலம்பர அருணோதயத்திலே கம்பளத்தான் வந்தான். அப்பதான் நேரே பூசையை முடிச்சிண்டு வந்தான் போலிருக்கு. வந்து ரெண்டு வார்த்தை நல்ல வார்த்தையாச் சொன்னுன். இல்லாமச் சொல்ல மாட்டானே என்று பார்த்தேன். அது நல்லதாப் போச்சு.

குப்பி. என்னமோ பொன்னம்மா உன் சமத்து சமத்துதான். நான் வரேன். [பாட்டி போகிருள். சீட்டாட்டம் முடிந்து சுந்தரமய்யர் வருகிருர்.]

சுந்த. யார்ரீ அங்கே? கூஜாவிலே தீர்த்தம் கொண்டா.

சுந்த. ஏண்டி ஒரு கூஜாவிலே தீர்த்தம் கொண்டுவர இத்தனை நாழியா?

பொன். இந்தாங்கோ. [கூஜாவில் ஜலத்துடன் தட்டில் இரண்டு அப்பளாத் துருண்டையும் எடுத்துக்கொண்டு குலுக்கி மினுக்கி நடந்து வருகிருள்.] ரெண்டு அப்பளாத் துருண்டை எடுத்துக்குங்கோ?

சுந்த. அடியே. பல்லுலே போய் ஒட்டிக்குமேடி.

பொன். ஒட்டிக்கிண்டா என்ன? காரியமா கதனமா? இந்தாங்கோ.

சுந்த. [எடுத்துச் சாப்பிடுகிருர்] ஏண்டி! பிரண்டைச் சாரு விட்டிருக்கோ? நாக்கெல்லாம் அரிக்கிறதே; இந்தா, ஒரு குச்சி ஒடிச்சுக்கிண்டுவா.

பொன். இதோ வந்துட்டேன். [கொல்லைப் பக்கம் ஓடுகிருள்.]

சுந்த. அடாடா. பல்லுக்குத்த குச்சி கேட்டா கருவேப்பிலை மரத்தை ஒடிக்க ஓடறியே.

பொன். ஈர்க்குச்சின்னு சொல்லப்படாதோ. இதோ வர்ரேன். [கதவு மூலைக்கு ஓடுகிருள்.]

சுந்த. அலம்பிக்கொண்டா.

பொன். அடாடா. எதுக்கெடுத்தாலும் நூணுணிக்கம் பார்க்கிறது. இந்தாங்கோ.

சுந்த. அம்மாடி! [பல் குத்திக்கொண்டே] அடியே இந்தப் பல்லுக் குத்தறதிலே உள்ள சுகம் உண்டே.

பொன். உண்டே அப்பளாத் துருண்டே. இந்தக் கைக்குக் கடகம்தான் பண்ணிப் போடப் போறேள்.

சுந்த. கடகம்தான் உசரக் கிடக்கே. எடுத்துக் கோயேன்

பொன். எடுத்துக்கொண்டு களத்திலே போய் நின்னு பிச்சை கிடைக்கும். உங்களுக்குக் கேலிப் பேச்சு வேறே வேண்டி இருக்கே.

சுந்த. இதென்ன கோபம்.

பொன். தங்கம் விலை இறங்கி யிருக்காமே. எனக்கு ஏதாவது வாங்கிப் போடுங்களேன்.

சுந்த. இத்தனை நாளா தங்கம் அதிக விலை விக்கிறதினுலேதான் வாங்கிப் போடலேன்னு நினைச்சியா?

பொன். பின்னே என்னவாம்?

சுந்த. கையிலே பணமில்லே? வாங்கிப் போடல்லே.

பொன். இல்லாட்டாப் போட்டுத்தான் கிழிச்சுப்பிடுவேள்.

சுந்த. அடேயப்பா. பொரிச்ச குழம்பு வாசனை கமகமன்னு வரதே?

பொன். என்னைக்கும் பொரிச்ச குழம்பு வாசனையாத்தான் இருக்கு உங்களுக்கு. பொடிடப்பி துலைஞ்சு போச்சு. இன்னிக்கு வாசனை தெரியுறது.

சுந்த. என்ன விசேஷம் உபசாரம் பலமாயிருக்கு.

பொன். எனக்கு நீங்க ஒரு பொன் மாலை வாங்கிப் போட்டுத்தான் ஆகணும்.

சுந்த. அது ஆயிரம் பதினாயிரம் ஆகுமேடி. அதுக்கு எங்கே போறது?

பொன். எங்கே போறதா? நான் சொல்றேன். போறேளா?

சுந்த. பொன்னன் கோட்டையிலே போய், புதையல் எடுக்கச் சொல்றியா?

பொன். [தெரியாதவள் போல் கேட்கிறாள்] அதென்ன பொன்னங் கோட்டை?

சுந்த. தஞ்சாவூருக்குப் போற பாதையிலே பொன்னங் கோட்டைன்னு ஒரு கோட்டை இருக்கு. அந்தக் காலத்திலே யாரோ அங்கே ஆண்டாளாம். இப்போ கோட்டை யெல்லாம் இடிஞ்சுவிழுந்து, ஒரு மதிலும் முனியும் காடும்தான் இருக்காம். அதுக்குள்ளே புதையல் புதையலா பொன் இருக்குன்னு சொல்லுவா. அதைத்தான் சொன்னேன்.

பொன். உங்க ஜாதகத்திலேதான் புதையல் இருக்காமே.

சுந்த. இருக்கு, அஞ்சு கிரகங்களுக்குக் கீழே அமுங்கிக்கிடக்கு.

பொன். எது?

சுந்த. அதிர்ஷ்டம்.

பொன். ஆமா. ஒரு சோஸ்யனைப் பாக்கணும், கேக்கணும்.

சுந்த. சோஸ்யனுக்குத் தெரிஞ்சா அவன் ஏன் நவக் கிரகத்தை எண்ணிக்கொண்டு இருக்கான். அவனே போய் எடுத்துக்க மாட்டானா?

பொன். மந்திரமும் தந்திரமும் மத்தவாளுக்குத்தான் பலிக்கும். அவாளுக்குப் பலிக்காது. வாசலிலே உட்காந்து பேசிண்டிருக்க வேண்டாம். உள்ளே வாங்கோ.

அடுத்த நாள் அதிகாலையில் பொன்னம்மாள் வீட்டு வாசலில்.

குடுகுடு. குடு குடு குடு குடு. நல்ல வாக்கு வருது. நல்ல வாக்கு வருகுது. காளி! மகமாயி! காட்டேறி! ரத்தக்காட்டேறி! ஒம்பது கம்பளத்தா! குடு குடு குடு குடு. இந்த வீட்டு அய்யாவுக்கு அதஷ்டம் வருது. அதஷ்டம் வருது. அதஷ்டம் வருது, நல்ல வாக்குப் பொறக்குது. பொன்னங் கோட்டைப் புதையல் கிடைக்குது. புதையல் கிடைக்குது. அம்மாவுக்கு ஒரு பொன் மாலை கிடைக்குது. பொன் மாலை கிடைக்குது.

பொன். ஏண்டா கம்பளத்தான் இங்கே வா.

குடு. நீ கட்டிக்கிழிச்ச கந்தே ஒண்ணு.

பொன். தரேன். தரேன். அந்தப் பொன்னங் கோட்டைப் புதையல் எங்கேடாப்பா இருக்கு?

குடு. குடு குடு குடு. காளி மகமாயி! கம்பளத்து வீராயி! நாலு கோட்டை நாச்சி! நல்ல வரந் தருவாய், தாயே. அது தஞ்சாவூர் போற பாதையிலே இருக்கு. கோட்டையிலே, முனியய்யா கோவிலுக்குத் தெக்காலே, தண்ணிக் கிணத்துக்கு மேலே, பத்தடிக்குள்ளே, தங்கம் இருக்கு. தங்கம் இருக்கு. தங்கம் இருக்கு. தாயி மகராசி! குடு குடு குடு.

பொன். கிணத்துக்குப் பத்தடி தூரத்திலே இருக்குங்கிறியா? இந்தா இந்தப் புடவையை எடுத்துக்கோ.

குடு. அய்யாவுக்கு நல்ல வாக்கு வருது. அதஷ்டம் வருது. அதஷ்டம் வருது. [போகிறான். பொன்னம்மாள் வீட்டுக்குள் திரும்பி வருகிறாள். சுந்தரமய்யர் வாசற்படி யருகிலேயே யோசனையோடு நிற்கிறார்.]

சுந்த. எங்கேயாம்? கிணத்துக்குப் பத்தடி தூரத்திலேயா இருக்காம்?

பொன். கேட்டுக்கிண்டே இருந்தியளா? கம்பளத்தான் காலையிலே சொல்லுறது மட்டும் கண்டிப்பா பலிக்கும். நேத்திக்கும் சொன்னான். அதுக்கப்புறம்தான் நான் எல்லாரையும் கேட்டேன். இன்னிக்கும் அதே நேரத்திலே வந்து சொல்லி யிருக்கான். எனக்கு என்னமோ இது கண்டிப்பா கிடைக்கும்னு தான் தோணறது.

சுந்த. சர்க்காருக்குத் தெரிஞ்சா தலைபோயிடுமேடி.

பொன். நாம்ப என்ன, ஊர் ஊராப் போய்ச் சொல்லிக்கிண்டா இருக்கப் போறோம்.

சுந்த. நீ பாட்டுக்கு மாட்டை வாங்குவே, கண்ணை வாங்குவே, நகையை நட்டைப் பண்ணுவே. இதுக்குனு ஊரிலே நாலு காலிப் பயகள் காத்துண்டிருப்பான். பூதியா எழுதிப் போட்டுடுவான்.

பொன். அதெல்லாம் நான் ஒண்ணும் பண்ணல்லே. நீங்க மட்டும் காசு கீசு வச்சு சீட்டாடாதேங்கோ. வேஷ்டி வாங்கறேன், பட்டை வாங்கறேன்னு அலையப்படாது. கொஞ்ச நாளைக்கு ஏழைக்கும் ஏழையாத்தான் இருக்கணும்.

சுந்த. பொதையல் எடுத்தும் தரித்திரமா!

பொன். தரித்திரமென்ன, அங்கே இருக்கிற பொதையல் இங்கே இருந்துட்டுப் போறது. வேணும்கறபோது எடுத்துச் செலவழிச்சுக்கறோம்.

சுந்த. ஆனல், ஆசையாத்தா னிருக்கு—காட்டுக்குள்ளே அலைஞ்சு நான் எப்படித் தேடிக் கண்டு பிடிக்கப் போறேன்.

பொன். நாலு ஆளைக் கூட்டிக்கிண்டுபோறது.

சுந்த. பங்கு கேப்பானேடி.

பொன். உள்ள கூலியை வாங்கிக்கொண்டு போறாங்கள். பங்கென்ன பங்கு; பொதையல் ஒங்க ஜாதகத்திலே இருக்கோ, அவங்க ஜாதகத்திலே இருக்கோ?

சுந்த. நீ பாட்டுக்குப் பேசறே. அவங்களுக்கு அந்த நியாயமெல்லாம் தெரியுமோ? குடுக்கல்லேன்னு சொன்ன என்னை வெட்டிப்புடுவாங்க.

பொன். பின்னே தனியாத்தான் போகணும்.

சுந்த. இதெல்லாம் கையும் மெய்யுமா ஏதோ கண்டோம், எடுத்தோம்னு இருக்கணும். அதைப்

பாத்து வச்சுட்டு வந்து, ஆள் கூப்பிடுறதுன்னு இருக்கப்படாது.

பொன். பின்னே பண்ணைக்கார வேலாயுதத்தைக் கூட்டிக்கிண்டு போங்களேன்.

சுந்த. வெள்ளாமை கெட்டுப் போகுமே.

பொன். இந்தச் சனியந்தான் என்னிக்கும் இருக்கே. ஒரு வருஷம் வெள்ளாமை இல்லேன்னு போனுப் போறது. கூட்டிக்கிண்டு போயிட்டு வாருங்கோ.

சுந்த. ஆமா! அவன்தான் நம்பிக்கையானவன்.

பொன். ஏதோ பகவான் புண்ணியத்திலே கிடைச்சுதுன்னு, இந்தாடாப்பான்னு ஒரு பத்து ரூபாயைக் கொடுத்தோமானு பேசாமே வாங்கிக்குவன்.

சுந்த. இந்தா, எல்லாத்துக்கும் நீ கொஞ்சம் அரிசி, பருப்பு எல்லாம் கட்டி வை. காலம்பற புறப்பட்டுடுவோம்.

பொன். உங்க சீட்டாட்டக் கோஷ்டி வந்து கேட்டா என்ன சொல்றது?

சுந்த. எங்கே போனுரோ, எனக்குத் தெரியாதுன்னு சொல்லிப்புடு. அங்கே இங்கேன்னு சொன்னு நாளைக்குச் சந்தேகத்துக்கு இடம்.

அடுத்த நாள். நள்ளிரவு இரண்டு மணி சுமாருக்கு ஊரையடுத்த தோப்பிலுள்ள ஒரு வீட்டில் பண்ணைக்கார வேலாயுதம் நிம்மதியாகப் படுத்துத் தூங்குகிறன். எஜமானின் குரல் கேட்ட அவன் மனைவி பதட்டத்துடன் அவனை எழுப்புகிறள்.

செல்லி. ஏ மச்சான் மச்சான். எசமான் வந்து கூப்பிடுரூரே.

வேலா. என்ன, எஜமாறு? அடி ஆத்தே. சாமி கும்பிடுறேன். ஏது இந்நேரத்திலே?

சுந்த. எலே வேலா! ஒரு கடப்பாரை, கூந்தாலம், மண்வெட்டி எல்லாம் கையிலே எடுத்துக்க. ஒரு சாக்குலே போட்டுக் கட்டி எடுத்துக்க. எதுக்கும் ஒரு அரிவாள்கூட, கையிலே இருக்கட்டும்.

வேலா. எம்பிட்டுத் தூரம் போகணும்?

சுந்த. என் கூட வா; சொல்றேன்.

வேலா. இல்லே. முடுக்கு வீட்டுக்காரருகிட்டே மாட்டுக்குக் கேட்டேன். தாரம்னு சொன்ருரு. அதைப் போய் ஓட்டியாந்து உழவுக்கு விட்டுட்டம்னு தேவலே.

சுந்த. அதெல்லாம் அப்புறம் உழுதுக்கலாம், புறப்படு.

வேலா. ....சாமி நாத்தங் காலே உழுகாமே போட்டா, நிலந் தரிசுகிடந்து போகுமே?

சுந்த. கிடந்தாக் கிடந்துட்டுப் போகுதுடா. வருசா வருசம் வெள்ளாமை பண்ணி என்னத்தைக் கண்டோம். வா.

வேலா. அய்யோ. சாமிதாரு இப்படிப் பேசறிங்க. என்னத்தைக் கண்டமா? நீங்க அய்யாவும் அம்மாளும் சாப்பிட்டு, நாங்க ரெண்டு உருப்படி சாப்பிட்டு, இன்னும் கங்காணம் பிச்சையெல்லாம் போட்டது போக, வருசத்துக்கு நூறு கலம் விக்கிறமே சாமி. இருபது பேருக்குச் சாப்பாடில்ல அது.

சுந்த. நமக்கென்னடா மிச்சம் ?

வேலா. பூமாதேவி இதையா நினைக்கிறு? அவ விளைஞ்சுகிட்டுத்தானே இருக்கிறு.

சுந்த. நாமும் என்ன மண்ணு? மனிசனுல்லியா? பொறப்படு. பொறப்படு.

வேலா. அப்படின்ணு அடுத்த வீட்டுக்காரர் கிட்டயாச்சும் கூப்பிட்டு நிலத்தைப் பார்த்துக்கச் சொல்லிட்டுப் போகலாம்.

சுந்த. இதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நாம் எங்கே போறங்கறதே ஒத்தருக்கும் தெரியப்படாது.

வேலா. மண்ணைத் தரிசுபோட்டா பாவம்! மானம்கூட மழை பெய்யாதும்பாங்க. ஏய் குட்டி! வீட்டைப் பாத்துக்க. நான் அய்யாவோடே போயிட்டு வரேன்.

சுந்த. யாராவது எங்கோ போயிருக்கிறுர்ன்னு கேட்டா, எனக்குத் தெரியாதுன்னு சொல்லிடு.

செல்லி. அது நிசந்தானே. எடத்தை எங் கிட்டச் சொல்லிட்டா போறிங்க. [இருவரும் வரப்புகளில் நடக்கிறுர்கள்]

வேலா. அதென்ன சாமி மூட்டை....இங்கிட்டு கொடுங்க.

சுந்த. அதிலே அப்பளாம், அவல் எல்லாம் இருக்காப்பலே இருக்கு. நானே எடுத்துக்கறேன். அடேடே! [வரப்பில் குறுக்கே ஒரு பாம்பு போகிறது] என்னடா பளபளன்னு ஏதோ போறது?

வேலா. அது சும்மா தண்ணிப் பாம்புங்க. வரப்புலே அப்படித்தான் நடமாடும்.

சுந்த. ஏண்டா குறுக்கே போச்சே?

வேலா. நான் சரியாப் பாக்கல்லே சாமி.

சுந்த. ஏண்டா பொழுதென்ன இருக்கும் பாரு.

வேலா. இன்னிக்கி அட்டமியில்லே? இப்போ தானே சந்திரன் ஒதயமாகி யிருக்கு. 20 நாழிகை இருக்கும்.

சுந்த. ஏண்டா இன்னிக்கி அஷ்டமி வேறேயா? புதையல் கிடைச்சாப்பலேதான்.

வேலா. என்ன சாமி. புதையல் எடுக்கவா பொறப்பட்டீங்க. பொன்னங் கோட்டைக்கா!

சுந்த. ஆமா இறையாதே. உனக்கு அதைப் பத்தி ஏதாவது தெரியுமோ.

வேலா. அந்த முனியய்யா கோயிலுக்குப் பின்னுலே பொந்துப் புளிய மரத்தடியிலே இருக்கு துன்னு சொல்லுவாங்க. எங்க பாட்டன் சொல்லிக் கேட்டிருக்கேன்.

சுந்த. நான் கேள்விப்பட்டது கோயிலுக்கு வடக்கேன்னு கேள்விப்பட்டிருக்கேன்.

வேலா. அது நிசம்மா இருக்கும்னு நினைக்கிறீங்களா சாமி?

சுந்த. இல்லாமே ஒரு வார்த்தை பொறக்குமா?

வேலா. இருந்தா இத்தனை நாளைக்கி இருக்குமா?

சுந்த. அதுக்கு உடையவாள் வருகிற மட்டும் இருந்து தானேடா ஆகணும். என் ஜாதகத்திலே அது கிடைக்கும்னு இருக்காம்.

வேலா. என்னமோ பார்ப்போம் வாங்க. பொதையல் கிடைச்சாதான் நல்லது. இல்லாட்டி இந்த வருஷம் வெள்ளாமையும் போச்சு.

சுந்தரமய்யர் புறப்பட்டுப் போய் நாலு நாளைக்குப் பிறகு, ஊர்ச் சிவன் கோயிலில் அம்பாள் சன்னதியில் பொன்னம்மாள் வருத்தத்தோடு நின்றுகொண் டிருக்கிறாள். குப்பிப் பாட்டி வருகிறாள்.

குப்பி. என்னடி பொன்னம்மா இளைச்சிருக்கே?

பொன். அவா ஊருக்குப் போயிருக்கா பாட்டி. ஒரு சேதியும் தெரியல்லே. மனசுக்குக் கவலையா யிருக்கு.

குப்பி. என்னமோ பொன்னம்மா. நீ கவலைப் படறதைப் பாத்தா எனக்குப் பிடிக்கல்லே. சின்னஞ் சிறுசுதானேடி அவன்.

பொன். இல்லே பாட்டி ஒரு சேதின்னு?

குப்பி. என்ன?

பொன். பூதம் காத்த பணம் என்கிறுளே அது என்ன?

குப்பி. யாராவது பணத்தைக் காசைப் பொதைச்சு வச்சிருந்தா ஒரு பூதம் போய்க் காத்துக்கும். உடையவா கேக்கறபோது கொடுக்கும்.

பொன். கேட்டா வெறுமனே கொடுத்துடுமோல்லியோ?

குப்பி. வெறுமனே கொடுக்குமோ? இத்தனை நாளா காத்திண் டிருந்ததுக்கு ஒரு பலியை வாங்கிண்டுதான் கொடுக்கும்.

பொன். ஐய்யய்யோ. தாயே பரதேவதே! இவா சவுக்கியமா திரும்பி வரணுமே.

குப்பி. ஏண்டி என்ன கவலைப்படறே?

பொன். புதையல் வேண்டாம் பாட்டி; புருஷன் திரும்பி வந்தால் போதும்.

குப்பி. ஏண்டி, அவனைப் புதையல் எடுக்கவா அனுப்பி யிருக்கே?

பொன். ஆமாம், பாட்டி. பொன்னங் கோட்டைக்குப் போயிருக்கார்.

குப்பி. பொன்னங் கோட்டைப் புதையலா? [சிரிக்கிறாள்.] என்னமோ பொன்னம்மா! எனக்கு ஒண்ணும் பிடிக்கவில்லை, உங்காத்துச் சவரனை.

பொன்னங் கோட்டையின் இடிந்த சுவர்கள் ஒரு பனை மர உயரத்துக்குத் தெரிகின்றன. அதைச் சுற்றிலும் சோளமும் கேப்பையும் பயிராகி யிருக்கின்றன. சில இடங்களில் துவரை வளர்ந்து பூத்திருக்கிறது. கோட்டைச் சுவர்மேல் உள்ள சமவெளியில் ஒருவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான். எங்கு பார்த்தாலும் பயிர் பச்சையும் இடை இடையே கொஞ்சம் பாறைகளும் இருக்கின்றன. தோளில் மூட்டைகளுடன் சுந்தரமய்யரும் வேலாயுதமும் வருகிறார்கள்.

வேலா. என்ன சாமி! என்னமோ கோட்டையும் கொத்தளமுமா இருக்கும்னு சொன்னுங்க. ஒரே புஞ்சைக் காடாவுல்லே இருக்கு?

சுந்த. கோட்டைதான் அதோ தெரிகிறதேடா. இருந்தாலும் அந்த ஆடுமேய்க்கியைக் கூப்பிட்டுக் கேளு.

வேலா. ஏ, ஐயா!

ஆடு மேய்ப். என்ன ?

வேலா. பொன்னங் கோட்டை எது ?

ஆடு மே. இதுதான் பொன்னங் கோட்டை. அதென்ன தோளிலே மூட்டை ?

வேலா. ஒண்ணுமில்லே.

இவர்களுக்கு அருகில் ஆடுமேய்க்கி வருகிறன்.

ஆடு. சும்மா சொல்லுங்கய்யா. மூட்டையிலே மம்மட்டி கூந்தால மெல்லாம் கட்டி வச்சிருக்கிங்களோ ?

வேலா. அதெப்படி உனக்குத் தெரிஞ்சுது?

ஆடு. உம். புதையலெடுக்க வந்தியளாக்கும்.

சுந்த. அப்பா அது இருக்கிற இடம் ஒனக்குத் தெரியுமா ?

ஆடு. என்ன சாமி படிச்சவங்களாயிருந்தும் நீங்ககூட இப்படிக் கேக்கறியளே? அப்படியிருந்தா நாங்கள் உள்ளூர்க்காரன் விட்டுவச்சுடுவமா ?

சுந்த. பின்னே ?

ஆடு. இது ஒரு மஸக்காடா இருந்துச்சுங்க. அதை வெட்டி நிலமாக்க எங்களண்டே பணம் கிடையாது. எங்க பெரியவரு ஒரு யோசனை சொன்னரு. பொன்னங் காட்டிலே புதையலிருக்குன்னு கௌப்பிவிடுங்கடா, ஆசைப்பட்டவனுங்களெல்லாம் ஆளுக்கு ஒரு பக்கமா வெட்டிப்பாப்பான். நமக்கும் வயலாச்சுன்னரு.

சுந்த. அய்யய்யோ. அப்படியான அவ்வளவும் பொய்யா. ஏண்டா வேலா ?

வேலா. என்ன சாமி ?

சுந்த. அப்ப யோசனை ?

ஆடு. வந்ததுக்கு நீங்களும்தான் ஒரு காணியை வெட்டிப்பாருங்களேன். இங்கே கல்லுக் குத்தகை எடுக்கறம்னு சில பேர் வந்து வெட்டிப் பார்த்தாங்க. முனியய்யா கோயிலுக்குத் தருமம் பண்ணரேன்னு ஒருவர் வந்து கிணறு வெட்டித் தருமம் பண்ணிப் பாத்தாரு. இன்னொரு மகாராஜன் புதுசா ஒரு கோயிலேயே கட்டிவச்சு சாமியைப் பேத்துப்பாத்து மறுபடியும் பிரதிஷ்டை பண்ணிப்பிட்டாரு. நீங்க வேணு வந்ததுக்கு கோயிலுக்கு முன்னுலே ஒரு கொளத்தை வெட்டிட்டுப் போங்க.

வேலா. [அவனை உற்றுப்பார்த்து] ஏனய்யா நீ எங்க ஊருக்கு வந்திருக்கியோ? இந்தக் குடு குடுப்பை அடிச்சுவர கம்பளத்தா னில்லே நீ?

ஆடு. ஆமா.

சுந்த. அட சண்டாளா. ஒம் பேச்சைக் கேட்டுத்தானேடா எம் பொண்டாட்டி பொதையலெடுக்கச் சொன்னு.

ஆடு. இப்படியெல்லாம் சொல்லாட்டி ஒரு காடு கிராமமாகுமா சாமி.

[மூவரும் சிரிக்கிருர்கள்.]

நல்ல வாக்கு வருகுது....நல்ல....வருகுது....[என்று கூறிக்கொண்டே ஆடுமேய்க்கி மறைகிருன். சுந்தரமய்யரும் வேலாயுதமும் பார்த்துக்கொண்டு நிற்கிருர்கள்].

Printed by Sakthi Press Ltd., Madras. P. I. C. No. MS. 23
For Pudumai Padippaham Ltd., Karaikudi
P. I. C. No. R. 11—4:4-47